கிரியா பாபாஜி அன்பகம், கனடா
யோக வாழ்வு

பக்கங்கள்: 20
விலை: 30.00

# தீம்புனல் THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

www.theempunal.lk தீ : 01 புனல்:09 26.06.2021 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2052

NEEDO
NORTH EAST ECONOMIC DEVELOPMENT ORGANIZATION
BUILD THE NATION TOGETHER

பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்



# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இயலாமையின் தெரிவா ரஷ்யா மீதான பொருளாதார தடை?



**“விளாடிமிர் புடின் குறிப்பிடுவத போல் சோவியத் யூனியன் சரிவின் பின்னர் ரஷ்யா ஆட்சியாளர்களை அமெரிக்கா எப்படி கையாண்டதோ அதேபோன்றே நவால்னியை உருவாக்கி கையாள முற்படுகிறது. நவால்னி மேற்கினதும் ஐரோப் பாவினதும் பொம்மை என்பது அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் உணர்த்துகின்றன. அதனடிப்படையில் அமெரிக்க-ரஷ்யா முரண்பாடு என்பது இரு ஏகாதிபத்தியங்களுக் கிடையிலான முரண்பாடாகவே பரிணாமம் பெறுகிறது.”**

அமெரிக்க ரஷ்யா தலைவர்களிடையே நடைபெற்ற ஜெனிவா பேச்சுவார்த்தை பெரும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது. இரு தலைவர்களும் ஒன்று சேர்ந்து ஊடக சந்திப்பினை நிகழ்த்தாது மட்டுமன்றி ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் சுமுகமான பேச்சுவார்த்தை என குறிப்பிட்டதிலிருந்தே ஜெனிவா உரையாடல் தோல்விகரமானதென்பதை உணர்த்துகிறது. அத்தோல்வி அதிகம் அமெரிக்காவுக்கே ஏற்பட்டதாக ஊடகங்கள் கருத்து தெரிவித்துவருகின்றன. அத்தனை அடுத்து மீளவும் இருநாட்டுக்குமான முரண்பாடு தீவிரமடைய தொடங்கியுள்ளது. அமெரிக்கா ரஷ்யா மீது புதிய பொருளாதாரத் தடை ஒன்றை மேற்கொள்ள போவதாகத் தெரிவித்துள்ளமை தொடர்பில் இக்கட்டுரை கவனம் செலுத்துகிறது.

ரஷ்யாவின் எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நவால்னி மீதான ரஷ்ய நடவடிக்கையை அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை எனக் குறிப்பிடும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு துறையினர் புதியதொரு பொருளாதாரத் தடையை விதிக்க தாம் தயாராகி வருவதாகவும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் தெரிவித்துள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குக் கருத்து முன்வைக்கும் போதே இதனை வெளிப்படுத்தியுள்ளார் அதாவது, அலெக்ஸி நவால்னியின் வழக்கில் ரஷ்யாவிற்கு எதிராக பொருளாதாரத் தடையின் மற்றொரு தொகுப்பை நாங்கள் தயார் செய்து வருகின்றோம். நாங்கள் சரியான இலக்குகளைப் பெற தொகுப்புக்களை உருவாக்கி உள்ளோம் என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பொருளாதாரத் தடை அறிவிப்பு வெளியாகும். அதனைச் செய்யும் போது இரசாயன

▶02

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

**“2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தின் முன்னால், என் மீது தற்கொலைத்தாக்குதல் நடத்தப்பட்டது. அதிலே 12 பேர் கொல்லப்பட்டனர். 27 பேர் காயமடைந்தனர். நானும் காயப்பட்டு சிகிச்சை பெற்று மீண்டேன். பின்னர் நான் அரசியற் காரணங்களுக்காகச் சிறையில் இருந்தபோது இந்தத் தாக்குதலில் குற்றம் சாட்டப்பட்டவர்களைச் சந்திக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் மீதான வழக்கும் தொடர்ந்து நடக்கிறது. ஆனால் அவர்கள் மன்னிப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாகும்” - சரத் பொன்சேகா**



# சிறைக்கதவுகள் திறக்கப்படும் போது புதிய பூட்டுக்கள் வேண்டாம்

வரலாறு விசித்திரங்கள் நிறைந்தது. சிலசந்தர்ப்பங்களில் நம்பக் கடினமான சங்கதிகளையே கொண்டது என்று சொல்வார்கள். அப்படியான ஒன்றே இதுவும்.

“தமிழ் அரசியற் கைதிகளை அரசாங்கம் விடுவிப்பதற்குச் சிந்திக்க வேண்டும்” என்று கேட்டிருக்கிறார் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ. “வழக்கு விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் 10 - 15 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் உள்ளிட்ட தமிழ் அரசியற் கைதிகளை விடுவிப்பதற்கான ஒரு பொறிமுறையை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும். இந்தக் கைதிகள் தங்களுக்கு எதிரான வழக்குகள் பதிவு செய்யப்படாமலோ விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலோ



நீண்டகாலமாக சிறைத்தண்டனையை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையில் இவர்கள் மீதான வழக்குகளை விரைவாக்குவதற்கும் விசாரணைகளை எடுத்துக் கொள்வதற்கும் ஒரு பொறி-முறையை அரசாங்கம்

▶05

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இயலாமையின் தெரிவா ரஷ்யா மீதான பொருளாதார தடை?

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதங்கள் தொடர்பாகவும் மேலும் பொருளாதாரத் தடைகளை விதிப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, நவால்னியை மையப்படுத்தி ரஷ்யா எதிர்ப்பு அரசியலை அமெரிக்கா மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது. விளாடிமிர் புடின் குறிப்பிடுவதைப் போல் சோவியத் யூனியன் சரிவின் பின்னர் ரஷ்ய ஆட்சியாளர்களை அமெரிக்கா எப்படி கையாண்டதோ அதேபோன்றே நவால்னியை உருவாக்கிக் கையாள முற்படுகிறது. நவால்னி மேற்கினதும் ஐரோப்பாவினதும் பொம்மை என்பது அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் உணர்த்துகின்றன. அதனடிப்படையில் அமெரிக்க-ரஷ்ய முரண்பாடு என்பது இரு ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடாகவே பரிணாமம் பெறுகிறது. உண்மையில் நவால்னியின் விடுதலை அமெரிக்காவின் இலக்கு என்பதை விட விளாடிமிர் புடினுக்கான நெருக்கடியே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நலனாகும். இதனை முழுமையாக நோக்குதல் அவசியமாகிறது.

ஒன்று, ரஷ்யா மக்களை பொறுத்தவரை சோவியத் யூனியனது சரிவிற்கு அமெரிக்க காரணம் என்பதை நன்கு புரிந்து வைத்துள்ளார்கள். அமெரிக்க எதிர்ப்பு வாதமே ரஷ்ய அரசியலின் வெற்றி வாதமாகும். அதனால் இருநாட்டுக்குமிடையில் நிரந்தரமான பகைமை நீண்ட அரசியல் நெருக்கடியையும் போட்டித்தன்மையையும் உருவாக்கியுள்ளது. புடின் அமெரிக்க எதிர்ப்புவாதியாக இருக்கும் வரை அவர் அரசியலில்

> **அமெரிக்காவின் நீண்ட அரசியல் இராணுவ உபாயங்களில் ஒன்றாக பொருளாதார தடை காணப்படுகிறது. வடகொரியா, ஈரான், சிரியா போன்ற நாடுகள் மீது பொருளாதார தடைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. அந்நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஓர் அணியாக மாற்றமடைய ஆரம்பித்து விட்டன. இத்தகைய மாற்றத்துக்கு சீனாவும், ரஷ்யாவும் தலைமை தாங்கும் நிலை ஏற்பட்டுள்ளதோடு கீழைத்தேச ஏகாதிபத்தியத்தின் வெடிப்பு தவிர்க்க முடியாது எழுச்சி பெற ஆரம்பித்துள்ளது.**

நிரந்தரமாக செயற்பட முடியும். அந்தவகையில் நவால்னி ரஷ்யா அரசியலில் நிரந்தரமான ஆட்சியாளனாக எழுச்சி பெறுவது கடினமாகும். அதிலும் புடினுடைய ஆயுட்காலம் முழுவதும் ரஷ்ய அரசியலினை நிரப்பீடு செய்யும் அரசியல் வரைபை கொண்டிருப்பதனால்  நவால்னியின் அணுகுமுறை தோல்விகரமானதாகவே அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. உலக அரசியலின் இருதய நிலம் என்பதோடு காலநிலை அடிப்படையிலும் மொழி, பண்பாட்டு மரபுகளிலும் ஐரோ - ஆசிய அடையாளங்களை கலந்த ஒரு தேசிய இனமாகவே ரஷ்யர்கள் காணப்படுகின்றனர். அவர்களை ஏனைய தேசங்கள் போன்று அளவீடு செய்வது கடினமானது. இதனால் அமெரிக்காவின் உபாயம் இலகுவில் புடினை அகற்றுவதோ ஆட்சி மாற்றத்தை சாத்தியப்படுத்தவதோ கடினமாக அமையும்.

இரண்டு, அமெரிக்கா விதிக்கும் பொருளாதாரத் தடை ரஷ்யாவின் அரசியல் விருப்புக்கான ஏகாதிபத்தியத்தை இலகுவில் முடிவிற்கு கொண்டு வந்திட முடியாது. காரணம், கடந்த காலங்களில் அவ்வகை பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஆனால் விளாடிமிர் புடினுடைய சர்வதிகார அதிகார முறைமை மேலும் அதிகரித்து செல்கின்றது. அதுமட்டுமன்றி இத்தகைய பொருளாதாரத் தடைகளால் ரஷ்யா தனது கூட்டாண்மை நாடுகளுடன் சேர்ந்து வர்த்தகத்தையும் சந்தையையும் விரிவாக்கிச் செல்கின்றது. குறிப்பாக, சங்காய் கூட்டமைப்பு, பிரிக்ஸ் ஆசியான்-ரஷ்சிங ஒத்துழைப்பு, ஈரோசியன் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு மட்டுமன்றி மத்திய ஆசிய குடியரசுகளுடனான எண்ணெய்வள ஒத்துழைப்பு,  மேற்காசிய நட்புகளுடனான நெருக்கமான பொருளாதார உறவு என ஓர் ஆரோக்கியமான வர்த்தக பொருளாதார சந்தையைத் தயார் செய்து வருகிறது. ரஷ்யா ஐரோப்பாவை கடந்து கிழக்காசியா, மத்திய ஆசியா, மேற்காசியவுடன் இணைந்து வர்த்தக சந்தைக் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கான அரசியல் மூலோபாயத்தை வகுத்து வருகிறது. சீனாவை ஆசியாவிற்குள்ளும், ரஷ்யாவை ஐரோப்பாவிற்குள்ளும் கட்டுப்படுத்தும் அமெரிக்க உத்தி, தோல்வியடைந்து விட்டது. ரஷ்யா, சீனா, ஈரான் மற்றும்  சிரியா போன்ற நாடுகள் ஓரணியாக ஒரு பண்டப்பரிமாற்றத்தை தமக்குள் ஏற்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளன. எனவே இது அமெரிக்க பொருளாதாரத் தடைகளால் இலகுவில் தகர்ந்து விடுமென கூற முடியாது.

மூன்று, அமெரிக்காவின் நீண்ட அரசியல் இராணுவ உபாயங்களில் ஒன்றாக பொருளாதாரத் தடை காணப்படுகிறது. வடகொரியா, ஈரான், சிரியா போன்ற நாடுகள் மீது பொருளாதார தடைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றது. அந்நாடுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து ஓர் அணியாக மாற்றமடைய ஆரம்பித்து விட்டன. இத்தகைய மாற்றத்துக்குச் சீனாவும், ரஷ்யாவும் தலைமை தாங்கும் நிலை ஏற்பட்டுள்ளதோடு கீழைத்தேச ஏகாதிபத்தியத்தின் வெடிப்பு தவிர்க்க முடியாது எழுச்சி பெற ஆரம்பித்துள்ளது. அவ்வகை எழுச்சிக்குள் அமெரிக்க அரசியல் பொருளாதாரம் நெருக்கடிக்குள் தள்ளப்படும் சூழல் ஒன்றை அடையாளப்படுத்தியுள்ளது. குறிப்பாக, மத்திய ஆசியா ஊடாக ஐரோப்பிய நாடுகளுடன் ரஷ்யா பின்பற்றி வரும் மசகு எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய் மூலமான ஏற்றுமதி மேற்காசியா நாடுகளுடன் இணைந்து விலை நிர்ணயத்துக்கும் உற்பத்தியின் மட்டுப்பாட்டுக்கும் தீர்மானிக்கும் சக்தியாக காணப்படுவது குறிப்பிடக்கூடிய விடயமாகும். அவ்வகை ஐரோப்பிய ரஸ்சிய உறவு மட்டுமன்றி ஒபெக்-ரஷ்யா உறவினூடாக எண்ணெய் வள சந்தையின் கட்டமைப்பு நிர்வகிக்கப்படுகிறது. எண்ணெய் குழாய் அரசியல் என்று வர்ணிக்கப்படும் ரஷ்யா-ஐரோப்பிய - ஒபெக் உறவானது ரஷ்யாவினாலேயே அதிகம் தீர்மானிக்கப்படுகிறது.











நான்கு, ஜெனிவா சந்திப்புக்கு பின்னர் அமெரிக்க அரசியலில் பலவீனமான ஒரு கட்டத்தை அவதானிக்க முடிகின்றது. காரணம், அமெரிக்க புலனாய்வு துறையினரதும், தேசிய பாதுகாப்பு துறையினரதும் இலக்குகளும் நலன்களும் பேச்சுவார்த்தையில் எதனையும் ரஷ்சியாவிடமிருந்து அடைய முடியவில்லை என்பதை உணர்த்தியுள்ளது. இதனாலேயே பொருளாதார தடை என்ற தெரிவை அமெரிக்கா மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இது அமெரிக்க அரசியலில் அல்லது ஏகாதிபத்தியத்தியத்தின் முனைப்புக்களில் உள்ள பலவீனமாகவே தெரிகிறது. ஐரோப்பா அமெரிக்காவுடன் கூட்டு சேர்ந்து சீனாவையும் ரஷ்யாவையும் எதிர்கொள்ள முனைந்தபோது அது சாத்தியப்பாடற்று போகவே மீளவும் பலவீனமான நடைமுறையில் நகர வேண்டிய நிர்ப்பந்தம் தவிரக்க முடியாததாகவே உள்ளது. இதை நீண்ட காலத்தில் அமெரிக்க-ரஷ்யா இருப்பை பாதிப்பதோடு உலகளாவிய தளத்தில் ஆயுத போட்டியையும் வர்த்தக சந்தை போட்டியையும் பல முனைகளில் ஏற்படுத்துகின்ற விதத்தில் கட்டமைக்கப்படுவதாகவே தெரிகிறது. முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விட்டுச்சென்ற இடத்திலிருந்தே ஜோ பைடன் நிர்வாகம் செயற்பட ஆரம்பித்துள்ளது. அதாவது சீனா, ரஷ்யா எதிர்ப்புவாதம் என்பது அமெரிக்காவுக்கான இருப்புவாதமாகும். அதனை கைவிட்டு அமெரிக்க-ஐரோப்பிய கூட்ட ஏகாதிபத்தியத்தின் நிலையான அரசியலை உருவாக்க முடியாத ஒரு உலக ஒழுங்குக்கு உலக அரசியல் பொருளாதாரம் கட்டமைத்துள்ளது.

எனவே அமெரிக்காவின் ரஷ்யா மீதான பொருளாதார தடைக்கு அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தெரிந்தெடுத்திருக்கக் காரணம் அமெரிக்காவின் பலவீனத்தைக் காட்டுகிறது. இது ஓர் ஏகாதிபத்திய அரசின் தெரிவாக இருப்பது கடினமானதாகும். ரஸ்சியா தயாரித்துள்ள ஆயுதங்களை அவற்றின் பரிசோதனைகளும் அமெரிக்க உட்பட்ட அரிக்க-ஐரோப்பிய அரசுகளுக்கு பெரும் அச்சுறுத்லாக மாறியுள்ளது. அத்தகைய அச்சுறுத்தலால் அமெரிக்க-ஐரோப்பிய கூட்டை கிழக்கு ஐரோப்பாவிற்குள்ளும், மத்திய ஆசியாவிற்குள்ளும், மேற்காசிவிற்குள்ளும் நிலைத்திருக்க முடியாத சூழலை ஏற்படுத்தியுள்ளது. அதிலும் ரஷ்யாவின் மிகப்பிந்திய பரிசோதனைக்கு உட்படுத்திய சுனாமி ஆயுதம் மிக ஆபத்தான அரசியல் இருப்பை ஏனைய ஏகாதிபத்திய அரசுகளுக்கும் ஏற்படுத்தியுள்ளது. எனவே அதனை எதிர்கொள்வதே அமெரிக்காவின் பிரதான நோக்கமாகும். அமெரிக்க துருப்புக்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவது ரஷ்யா குடியரசுகளையும், மேற்காசியாவையும் கையாளும் மையமான புவிசார் அரசியல் இழப்பதற்கு சமமானதாகும். அதனால் அமெரிக்காவின் ஆசியப்பிராந்திய அதிகாரம் அதிகளவில் பாதிக்கும் விடயமாக அமைந்துள்ளது. அமெரிக்கா ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறுவதற்கான அடிப்படை காரணமே ரஸ்சியாவின் நடவடிக்கையாகும். இவ்வாறு மேற்காசியா, கிழக்காசியா, மத்திய ஆசியா குடியரசுகள் முழுவதம் ரஸ்சிய நலன் வளர்ச்சியடைந்து செல்கிறது. மறுவார்த்தையில் கூறுவதாயின் அமெரிக்க நலன் நெருக்கடிக்குள்ளாகிறது. ஈரானின் ஜனாதிபதி அமெரிக்காவை வெளிப்படையாக எதிர்க்கும் தீவிர எதிர்ப்புவாத கருத்துநிலை கொண்டவர். அதனால் ரஷ்யா-ஈரானிய உறவு மேலும் பலமடைய வாய்ப்பு அதிகரித்துள்ளது. இவைகளே ரஸ்சிய மீதான பொருளாதார தடைக்கு உள்ள முக்கிய காரணிகளாகும்.

இவற்றுக்காக அமெரிக்க பயன்படுத்தும் ஒரு விடயமாகவே ரஷ்யா எதிர்க்கட்சி தலைவர் நவால்னி காணப்படுகின்றார். இதனை அவதானிக்கும் போது அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் இயலாமையின் தெரிவே ரஸ்சியா மீதான பொருளாதார தடையென விளங்கிக் கொள்ளலாம்.

■

“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”

கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2564
www.theempunal.lk
news@theempunal.com

THEEMPUNAL
தீம்புனல்

# எது எப்படி நடந்தாலும் தமிழருக்கு நல்லது நடந்தால் சரி!

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் பொதுமன்னிப்பின் அடிப்படையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 16 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அதே காலப்பகுதியில்தான் கொலைக் குற்றவாளியான துமிந்த சில்வாவும் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அரசியல் கைதிகளில் விடுதலைக்கு தமிழர் தரப்பினர் ஆதரவு தெரிவித்ததோடு அரசைப் பாராட்டியும் வருகின்றனர். ஆனால் தென்னிலங்கையில் துமிந்த சில்வாவின் விடுதலை பெரும் சர்ச்சையினை உருவாக்கியிருப்பதோடு பலதரப்பின் விமர்சனத்திற்கும் அதிருப்திக்கும் உள்ளாகியிருக்கின்றது. கடந்த நல்லாட்சி ஆட்சிக்காலத்தில் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்து. ராஜபக்ஷ அரசு ஆட்சியைப் பொறுப்பேற்றதன் பின்னர் அரசியல் பழிவாங்கற் செயற்பாடே அவருக்கு மரணதண்டனை வழங்குவதற்கு காரணம் என்ற கருத்தினை வலியுறித்தியும் வந்திருந்தது. அப்படியென்றால் ஒவ்வொரு ஆட்சிக்காலத்திலும் நீதித்துறை ஆட்சியிலிருப்பவர்களுக்குச் சார்பான வகையில் செயற்படுகிறதா? என்ற கேள்வி மக்களிடம் எழுவதோடு அச்சத்தினையும் ஏற்படுத்துகிறது. அவ்வாறு தற்போதைய அரசின் அதிகாரத்துக்கு அமைவாக நீதித்துறை செயற்படுமாக இருந்தால் மக்களின் நிலை இன்னும் மோசமாக அமைந்துவிடும். இன்னும் தமிழர்களின் நிலை சொல்லவே தேவையில்லை.

மரணதண்டனை வழங்கப்பட்ட ஒருவருக்கு பொதுமன்னிப்பு வழங்கும் போது பல்வேறுபட்ட ஒழுங்கமைப்பு முறைகள் உண்டு எனவும் அவ்வாறான ஒழுங்கமைப்பு முறைகளைக் கடைப்பிடிக்காது ஜனாதிபதி தனது தனிப்பட்ட அதிகாரத்தினைப் பயன்படுத்தி துமிந்த சில்வாவின் விடுதலையினை முன்னெடுத்துள்ளார் என்ற விமர்சனங்களும் எதிர்க்குரல்களும் தென்னிலங்கையில் வலுவாகி வருகிறது. தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கு அமெரிக்கா வரவேற்புத் தெரிவித்திருந்ததோடு, துமிந்த சில்வாவின் விடுதலைக்கு கண்டனமும் தெரிவித்துள்ளது. அதேவேளை சட்டத்தரணிகள் சங்கம் நீதிச்செயலை அவமரியாதைப்படுத்தும் செயல் எனவும் குறிப்பிட்டுள்ளதோடு எதன் அடிப்படையில் இவ்விடுதலை அமையப்பெற்றுள்ளது? என்ற கேள்வியையும் முன்வைத்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் மத்தும பண்டார துமிந்த சில்வாவிற்கு பொது மன்னிப்பு அளித்ததன் மூலம் அரசியல் அமைப்பினூடாக வழங்கப்பட்ட அதிகாரத்தை ஜனாதிபதி துஸ்பிரயோகம் செய்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். ஆக மொத்தத்தில் பொசன் பௌர்ணமி தினத்தில் மேற்கொள்ளப்பட்ட விடுதலைச் செயற்பாடுகளில் ஒன்று மக்களாலும், அரசியல் தலைவர்களாலும் சர்வதேசத்தாலும் வரவேற்கப்பட்டதோடு மற்றையது எல்லாத்தரப்பாலும் விமர்சிக்கவும் கேள்விக்குட்படுத்தவும் பட்டுள்ளது. இது தென்னிலங்கையின் அரசியல் தரப்பில் மேலும் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தப்போகும் விவகாரமாக மாற்றம் அடையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏற்கனவே பல்வேறு விடயங்களில் அரசிற்கு தென்னிலங்கை அரசியல் சக்திகள் மிக முக்கிய நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றன. இது இன்னும் அவர்களுக்கு வாய்ப்பானதாக அமைந்திருக்கின்றது.

தமிழர் தரப்பினைப் பொறுத்தவரையில் துமிந்த சில்வாவின் விடுதலை பெரும் தாக்கத்துக்குரிய ஒன்றல்ல. அரசியல் பேசுபவர்கள், அரசுக்கு எதிராகப் பேசுபவர்களுக்கு ஓரிரண்டு நாட்களுக்கு இந்த விடயம் பயன்படும் ஒன்றாக இருந்தாலும் இதனைவிட எத்தனையோ அநீதிகளை சிங்களத் தரப்புக்கள் ஏற்படுத்தியிருக்கின்றன. சிங்களத்தரப்பு என்னும் போதும் ஆட்சியதிகாரத்துக்கு வருபவர்கள் எல்லோரையுமே குறிக்கும். இத்தனைகால அடக்குமுறை வரலாற்றில் தமிழ் மக்கள் சந்தித்த அநீதிகள் ஏராளம். இன்னும் சந்தித்துக் கொண்டிருக்கும் அநீதிகளும் ஏராளம். இனிச் சந்திக்கப் போகும் அநீதிகளும் ஏராளமாக இருக்கலாம்.

அரசியல் கைதிகளின் விடுதலை மிகச் சிறிய அளவில் தமிழருக்குக் கிடைத்த நீதியாகக் கொள்ளலாம் இத்தகைய நீதியும் தமிழர் நலனைக் கருத்தில் கொண்டு தரப்பட்டதல்ல. சர்வதேசப் பொறிமுறைகளுக்குள் இருந்து அரசு தப்பித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு என்பது வெளிப்படை. கடந்த பாராளுமன்ற அமர்வின்போது நாமல் ராஜபக்ஷ அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நம்பிக்கை தரத்தக்க கருத்தினை முன்வைத்திருந்தார். அது நாமல் ராஜபக்ஷாவின் கருத்து என்பதனையும் விட அரசின் கருத்து என்பதாகவே கொள்ளத்தக்கது. ஏனெனில் தந்தைக்கும் சித்தாப்பாவிற்கும் இருக்கும் அதிகாரத்தின் சமபங்கு அவரிற்கும் உண்டு. அதேவேளை அவர்கள் தங்கள் கருத்தினை நாமல் ராஜபக்ஷவின் மூலம் தெரிவித்தும் இருக்கக் கூடும். என்றைக்கும் இல்லாமல் தீடீரென யாரும் எதிர் பார்க்காத தருணத்தில் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் முன்வைத்த கருத்தானது சர்வதேசப்பொறிக்குள்ளிருந்து அரசு தப்பித்துக் கொள்வதற்குரிய காய்நகர்த்தலாகவே இருக்கும் என்ற சந்தேகம் பொதுவாக எல்லோரிடமும் ஏற்பட்டுள்ளது.

எது எப்படியோ, தமிழர் நலனைக் கருத்தாகக் கொண்டு அரசதரப்பு எந்தச் செயற்பாட்டினையும் எப்போதும் செய்யப்போவதில்லை. தமிழ் அரசியல் தரப்பின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தமிழ் மக்களுக்கு நன்மை தரத்தக்க செயலை முன்னெடுக்கப்போவதும் இல்லை. வெளியார் தலையீடுகளே தமிழர்கள் நலன்களை அடைந்து கொள்வதற்கான சாத்தியத்தினை ஏற்படுத்தும். அத்தகைய காலம் ஒன்று கனிந்திருக்கிறது. அதனைச் சரியாகப் பயன்படுத்தி அரசியல் கைதிகளின் விடுதலையினை வலுப்படுத்தலாம். கொலைக் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்குவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கிறது என்றால் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது அவர்களுக்கு மிகச் சிறிய பிரச்சினையே. இத்தனை காலமும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை தொடர்பில் சிந்திக்காமல் இருந்ததானது சிறுபான்மையினர் மீதான திட்டமிட்ட ஒடுக்குமுறைகளின் வடிவங்களில் ஒன்று என்பது தெளிவான அறிதலுக்குட்பட்ட விடயமாகவே இருக்கிறது. ■

# சிங்கத்தின் ஆட்சியும் அதில் நுழையும் அரசியல் நரியும்

**தந்திரன்**

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 22ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுள்ளார். கிட்டத்தட்ட பாராளுமன்ற தேர்தல் நடைபெற்று ஒரு வருடம் ஆகியிருக்கிற நிலையிலேயே இப்பதவிப்பிரமாணம் நடைபெற்று இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு வருடகால ஓய்வின் பின் ரணில் தனது இரண்டாவது நகர்வினை முன்வைத்ததென்பது சாதாரண விடயமாக இருக்கப் போவதில்லை. தனது கடந்தகாலத் தோல்விகளை மீள் பார்வை செய்வதன் ஊடாக தொடர்ந்துவரப் போகும் காலங்களுக்கான திட்டமிடல்களை சரியாகக் கணக்கிட்டிருப்பார் என்பது பொதுவாக அரசியல் ஆய்வாளர்கள் முன்வைக்கும் கருத்தாகவும் இருக்கிறது. இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்றத்திற்கான வருகை ஏற்படுத்தப்போகும் விளைவுகள் எத்தகையதாக இருக்கும் என்பது தொடர்பான குறிப்பாகவே இக்கட்டுரை இருக்கும்.



பொதுவாகவே அரசியலில் ரணில் ஒரு இராஜதந்திரியாக அறியப்பட்டவர். அவருக்கு அரசியல் வட்டாரத்தில் “அரசியல் நரி” என்றொரு பேரும் இருக்கிறது. விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தை நகர்விலிருந்து மைத்திரிபால சிறிசேனாவை கைப்பொம்மையாக ஆட்டிவைத்த வரைக்குமான செயற்பாடுகள் இத்தகைய பெயரினை இன்னும் அவருக்கு வலுப்படுத்துவதாக அமைகின்றது. இத்தகைய ஒருவரின் பாராளுன்ற மீள்வருகை அரசியல் களத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தப்போகிறது என்ற எதிர்பார்ப்பு பரவலாக ஏற்படுத்தியிருக்கிறது. பலரது கருத்துப்படி இவரது வருகை எதிர்க்கட்சியை மேலும் வலுப்படுத்தும் அல்லது எதிர்கட்சியில் உள்ளவர்கள் இவரது பக்கம் சாயும் வாய்ப்புக்கள் அதிகம் என்பதாக உள்ளது. அவ்வாறான சூழ்நிலையில் அரசு இன்னொரு நெருக்கடியினை எதிர்நோக்க வேண்டிய இக்கட்டுக்குள் உள்ளாகும் என்பதும் தெளிவு.

இந்த நிலையில் கொரோனா பேரிடரை கட்டுப்படுத்த ரணில் கூறிய அறிவுரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை அல்லது ஏற்றுக்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டு எதிர்த்தரப்புக்களிடையே காணப்படுகிறது. அதே நேரம் கொரோனா பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் தோல்வியும் அடைந்துள்ளது.

அரசாங்கத்தின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் போய்க்கொண்டிருக்கிறது. சமநேரத்தில் உரப்பிரச்சினை, எரிபொருள் பிரச்சினை, கல்விப்பிரச்சனை என்ற மூன்று வகையான பிரச்சனைகள் உருவாகி அரசு மாத்திரமல்ல பாராளுமன்றமும் இல்லாமல் போகும் எனவும் ரணில் எச்சரித்துள்ளார். ஒருவகையில் அத்தகைய சவால்களை அரசாங்கம் எதிர்கொண்டு வருகிறது என்பதும் வெளிப்படை.

ரணில் ஒரு காய்ந்த மரம் என சரத் பொன்சேகா ஒருகட்டத்தில் குறிப்பிட்டிருந்தார். அவரது கருத்தின்படி ரணில் தன்னிடமிருந்து எந்தவகையான விளைவுகளையும் உற்பத்தி செய்யத் தகுதியற்றவர் என்பதாகவே அமைகின்றது. இக்கருத்து எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதனைக் காலப்போக்கில்தான் அறிந்து கொள்ளமுடியும். ஆனால் அரசு அப்படியொரு கருத்தினை தானும் உருவாக்கிக்கொண்டு சர்வ சாதாரணமாக இருந்துவிட முடியாது. ஏனெனில் ரணிலின் அரசியல் சாணக்கியத்தனத்தினை கடந்த காலங்களில் அனுபவமாகக் கொண்டிருக்கிறது. எதிர்பாராத தருணத்தில் எதிர்பாராத விளைவுகளை தற்போதைய ஆளும் தரப்பிற்குக் கடந்தகால்தில் ஏற்படுத்தியிருக்கிறார் ரணில்.

இதில் இன்னொரு விடயம் என்னவெனில் ரணில் மேற்கின் செல்லப்பிள்ளை. தற்போதைய அரசோ சீனாவின் தத்துப்பிள்ளை. இந்த முரண்பாடுகளே அரசினை இன்னும் இன்னும் நெருக்கடிக்குள்ளாக்கி கொண்டு செல்லும். இலங்கையின் அரசியல் என்பது பொதுவாக அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளின் செல்வாக்கின் பேரிலேயே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இதன் பொருட்டே சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் கொடுக்கல் வாங்கல்களை அரசு மேற்கொள்ள வேண்டும் என ரணில் வலியுறுத்துகிறார். இது அமெரிக்காவின் செல்வாக்கை இலங்கையில் மீண்டும் வலுப்படுத்தும். இது ரணிலின் மேற்கு சார்பான ஒரு ராஜதந்திர நகர்வாகக் கூட இருக்க முடியும். அதாவது சர்வதேச நாணய நிதியத்தில் அமெரிக்கா,சீனா, இந்தியா போன்றவை அங்கத்துவ நாடுகளாக காணப்படுகின்ற பொழுதும் அதிகளவான வாக்குப்பலத்தினை கொண்டிருப்பது அமெரிக்காவே ஆகும். அதேநேரம் இத்தனை நாட்களும் இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையினை அணுகுவதற்குப் பொருத்தமான துருப்புச்சீட்டு இல்லாமல் திண்டாடி வந்திருக்கிறது. இப்போது அவற்றுக் ஒரு பிடி கிடைத்திருக்கிறது. இனி வருகின்ற காலங்கள் அவைகளின் நெருக்கடிகளை இலங்கை அரசு எதிர்கொள்ள வேண்டியதாகவே இருக்கும்.

இந் நிலையில் சரிந்து வரும் பொருளாதாரத்தினை தூக்கி நிறுத்த அரசாங்கம் ஏதோ ஒரு நிலைப்பாட்டை எடுத்தே ஆக வேண்டிய இக்கட்டான சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனை ரணிலும் அமெரிக்காவும் இந்தியாவும் சாதகமாகப் பயன்படுத்த முனைவார்கள் என்பது வெளிப்படை. எப்பொழுதும் குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது இலகு. இப்பொழுது இலங்கை அரசியல் குழம்பிய குட்டையாகவே இருக்கின்றது. இச்சந்தர்ப்பம் ரணிலுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம். அவரின் வருகையும் சரியான சந்தர்ப்பத்திலேயே அமைந்தும் இருக்கிறது. அரசியல் நரி மீண்டும் தனது ஆட்டத்தைத் தொடங்குமா? பொறுத்திருந்து பார்ப்போம். ■

# இணக்க அரசியலும் தமிழ் மக்களின் நம்பிக்கையும்

த.விஜயசங்கர்

வடக்குக் கிழக்கு தமிழ் அரசியல் இரண்டு தளங்களில் பயணிக்கின்றன. ஒன்று இணக்க அரசியல் மற்றையது எதிர்ப்பரசியல். இணக்க அரசியல் என்பது ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் அரசுடன் சிறுபான்மைக் கட்சிகள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின், மக்கள் சார்ந்த பிரதேசத்தின் நலனுக்காக இணைந்து நின்று முன்னெடுத்துச் செல்லும் அரசியல் செயற்பாட்டினைக் குறிக்கும். எதிர்ப்பரசியல் என்பது மக்களின், மக்கள் சார்ந்த பிரதேசத்தின் நலனுக்காக அவர்களின் இயல்பான வாழ்வுக்காக ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தரப்பினருடன் போராடுவதும் அவர்களின் தவறான அரசியல் செயற்பாடுகளை சுட்டிக்காட்டுவதும் முரண்படுவதுமான அரசியல் செயற்பாட்டினைக் குறிக்கும். இத்தகைய இரண்டு அரசியல் செயற்பாடுகளும் மக்களின் நலன் சார்ந்த இயங்கியலாகவே கொள்ளத்தக்கன. ஏதோவொருவகையில் இவை ஆரோக்கியமான விளைவுகளைத் தரக்கூடியன. ஆனால் இலங்கை அரசியலில் தமிழர் தரப்பால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வரசியல் செயற்பாடுகள் குறித்த இலக்கினை எட்டுவதற்குரிய செயல் ஒழுங்கமைப்பினைக் கொண்டுள்ளதா? அல்லது இத்தகைய அரசியல் போக்குகளினால் இத்தனை காலத்தில் அடைந்து கொண்ட பலன் என்ன? என்பதனை நோக்கவேண்டிய, ஆய்வுசெய்ய வேண்டிய தேவையும் உள்ளது. அவ்வாறு ஆய்வு செய்வதன் மூலமே இத்தனைகாலம் தமிழர் தரப்பு பெற்றுக்கொண்ட நலன் அல்லது உரிமை சார்ந்த அளவீடுகளை அறிந்து கொள்வதுடன் எதிர்காலத்தில் எத்தகைய அரசியல் செயற்பாட்டு மாற்றங்களை மேற்கொள்ளவேண்டிய அவசியத்தன்மைகள் உள்ளன என்பதனையும் அரசியல் கட்சிகளும் மக்களும் உணர்ந்து கொள்வதற்குரிய வழியினைத் திறந்து கொள்ளவும் முடியும்.

மேலே குறிப்பிட்ட அரசியல் செயற்பாடுகளை கடைப்பிடித்துச் செயற்படும் அரசியல் கட்சிகளை தனித்தனியே நோக்கவேண்டிய தேவை இருக்கின்றபோதும் முதலாவதாக விடயமுமாகும். ஆனாலும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும் மக்களும் இணக்கரசியல் வெற்றியளிக்கும் ஒன்றாகவே கருதுகின்றனர். தமிழர் தரப்பின் நிலைப்பாட்டினை நோக்கும் போது இத்தனை கால இணக்க அசியலின் போக்கு எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தது என்பது அவதானத்துக்கும் ஆதாரப் படுத்துவதற்கும் உரியது.

வடக்கைப் பொறுத்தவரையில் இணக்கரசியல் நீரோட்டத்தில் கலந்துள்ள தமிழ் அரசியல் தரப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆரம்பகாலங்களில் அரச தரப்பினரோடு ஆயுதமுனையில் பேராடிவந்தவர்களே. தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டபோது அதற்கு எதிராக தமிழர் புலத்தில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் தோற்றம் பெற்றதும் அவை ஒன்றுக்கொன்று பகைமை கொண்டு கொலைக் கலாசாரத்தில் இறங்கியதும் பின்னைய காலங்களில் விடுதலைப் புலிகளின் தவிர்க்க முடியாத எழுச்சி ஏனைய ஆயுததாரிகளை அரசாங்கத்தோடு இணைந்து செயற்படச் செய்தமையும் அதன் நீட்சியாக அவர்கள்அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டமையும் எல்லோரும் அறிந்த விடயமாகும். இவர்கள் எல்லோரும் ஆரம்பத்தில் இணக்க அரசியல் நீரோட்டத்தில் இணைந்து







விரும்புகின்றது என்றால் தமிழ் மக்களை இரண்டு தரப்பும் ஆளுகைக்குள் வைத்திருக்கும் நிலைமை அங்கு மேலோங்குவதனை அவதானிக்க முடியும். இத்தகைய சூழல் தொடர்ந்தும் நீடிக்குமானால் அங்கு வாழும் தமிழர்களின் நிலை காலப்போக்கில் துயர் நிறைந்ததாக மாறுவதற்கு வாய்ப்புள்ளது என்பதே பொதுவான கணிப்பீடாக அமைகிறது. இத்தகைய நிலையினை மாற்றியமைப்பதற்குக் கிழக்கின் இணக்க நிலை அரசியல் செயற்பாட்டாளர்களின் முன்னெடுப்பு என்ன? உண்மையில் அவர்கள் தமது இருப்பினைத் தக்கவைப்பதற்கே பெரிதும் போராட வேண்டியிருக்கிறது. அவர்கள் இத்தகைய பிரச்சினைகளைக் கவனத்தில் எடுத்து செயற்பட முனைந்தால் முஸ்லிம்களுடன் முரண்பட வேண்டியிருக்கும், அவர்களுடன் முரண்பட்டால் அரச தரப்பினருடன் முரண்படவேண்டியிருக்கும். அவ்வாறு முரண்படும் சூழல் ஏற்படுமானால் அவர்கள் அரசுக்கெதிராகப் போராடிய காலத்துக்குரிய குற்றங்களுக்கு உள்ளாக வேண்டிய சூழல் ஏற்படும். இதனால் அவர்கள் கிழக்குத் தமிழ் மக்களுக்கு என்ன இடர் நடந்தாலும் மௌனமாகவே இருக்கவேண்டியவர்களாகின்றனர்.





இணக்க அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் அரசியல் கட்சிகளையும் அவ்வரசியல் கட்சிகளின் இத்தனை காலச் செயற்பாடுகளையும் அதனால் அடையமுடிந்தது என்ன என்பது பற்றியும் நோக்குவதே இக்கட்டுரையாளரின் எண்ணமாகும்.

இணக்க அரசியல் என்னும் போது வடக்குப்பகுதியில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவாநந்தா, கிழக்கில் வியாழேந்திரன், விநாயகமூர்த்தி முரளிதரன், சந்திரகாந்தன், மற்றும் முஸ்லிம் அரசியல் தரப்பினர் மேற்கொள்ளும் அரசியல் செயற்பாட்டினைக் கூறிக்கொள்ளலாம். (அரசின் கட்சியில் இருந்து செயற்படும் அங்கயன் இராம நாதனை இணக்க அசியலுக்கும் எதிர்ப்பரசியலுக்கும் உள்ளடக்கப் படமுடியாதவர்)

இவர்கள் அனைவரும் மக்களின் நலனுக்காகவே அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதாக கூறிக்கொள்கின்றனர். மக்கள் நலன் என்னும் போது அவர்களின் அன்றாடத்தேவைகளில் இருந்து வாழ்தலுக்கான சுதந்திரம் வரைக்கும் உள்ளடங்குகின்றன. இவ்வாறு இணக்கரசியல் பேசுகின்றவர்கள் இவற்றினையெல்லாம் இதுவரைகால அரசியல் செயற்பாடுகள் மூலம் பெற்றுக் கொடுத்துள்ளார்களா? என்பது நோக்கப்படவேண்டிய ஒன்றாகவே இருக்கிறது. விடுதலைப்புலிகளின் நெருக்கடி இருந்த காலத்தில் அரசதரப்பினர் முஸ்லிம் அரசியல் கட்சிகளை தம்முடன் இணைத்துக் கொண்டு தென்னிலங்கை அரசியலை முன்னெடுத்து வந்திருந்தது. அச்சந்தர்ப்பத்தினை முஸ்லிம் தலைவர்களும் பயன் படுத்திக் கொண்டு பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் விடுதலைப்புலிகளின் முடிவுகாலத்துக்குப்பின் அரசதரப்பும் சரி சிங்களபெரும்பான்மைத் தரப்பும் சரி அவர்களைத் தள்ளிவைத்துப் பார்க்கவே விரும்புகிறது என்பது கடந்தகால அனுபத்தின் வழி அறியக்கூடிய ஒரு

கொண்டவர்கள். பிற்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகளின் கொலைவலயத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளவும் தொடர்ந்து அரசியலில் நிலைத்திருக்கவும் எதிர்ப்பரசியலே பொருத்தமானது என்ற எண்ணத்தோடு எதிர்ப்பரசியலில் நுழைந்து கொண்டவர்கள் போக, இப்போதும் தொடர்ந்தும் இணக்க அரசியல் பேசிக்கொண்டிருப்பவராக அமைச்சர் டக்களஸ் தேவாநந்தா இருக்கின்றார். ஏறத்தாழ இவரது இணக்கரசியலுக்கான வயது முப்பதாக இருக்கலாம்.

கிழக்கைப்பொறுத்தவரையில் விநாயகமூர்த்தி முரளிதரன், சந்திரகாந்தன் ஆகியவர்கள் இணக்க அரசியலின் பிரதிநிதிகள். இவர்கள் ஈழவிடுதலைப் போராட்டத்தின் சமாதான காலத்தில் விடுதலைப் புலிகளுடனான முரண்பாடுகள் நிமிர்த்தம் அவர்களிடமிருந்து பிரிந்து சென்று அவர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அரசிடம் சரணடைந்தவர்கள். அரசு தனது அன்றைய நலனைக் கருத்தில் கொண்டு அவர்களைத் தன்னோடு இணைத்துச் செயற்பட்டு வந்திருந்தது. பின்னர் அவர்களும் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

இத்தகைய இரண்டு தரப்பினரும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசுடன் இணக்க நிலையில் தமது செயற்பாட்டினை முன்னெடுத்து வருவதாகச் சொன்னாலும் இத்தனை காலத்தில் அவர்களுடைய இணக்க அரசியலின் நிமிர்த்தம் அடைந்துகொண்டது என்ன? என்ற கேள்வியினை முன்வைத்தால் அத்தகை கேள்விக்குப் பதில் அளிப்பது கடினமானதே. கிழக்கைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களின் ஆதிக்கம் நிலைத்திருக்கின்றது. அது அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு இடையூறாகவும் அவர்கள் தமது நலன்களை நிலைநிறுத்திக் கொள்வதில் இடர்படும் தன்மைக்குரியதாகவும் மாறிவருகின்ற போக்குக் காணப்படுகிறது. அரசு அல்லது சிங்களப் பெரும்பான்மையினர் முஸ்லிம்களை தமது அடக்குமுறைக்குள் வைத்திருக்க

> **விடுதலைப்புலிகளின் நெருக்கடி இருந்த காலத்தில் அரச தரப்பினர் முஸ்லிம் அரசியல் கட்சிகளை தம்முடன் இணைத்துக் கொண்டு தென்னிலங்கை அரசியலை முன்னெடுத்து வந்திருந்தது. அச் சந்தர்ப்பத்தினை முஸ்லிம் தலைவர்களும் பயன்படுத்திக் கொண்டு பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால் விடுதலைப் புலிகளின் முடிவுகாலத்துக்குப்பின் அரசதரப்பும் சரி சிங்களபெரும்பான்மைத் தரப்பும் சரி அவர்களைத் தள்ளிவைத்துப் பார்க்கவே விரும்புகிறது.**

வடக்கின் நிலை இன்னும் மோசமானது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் அரசிடமிருந்து பெற்றுக்கொண்டிருந்த செல்வாக்கு நிலையினை இப்போது இழந்திருக்கின்றார் என்றே சொல்லவேண்டும். அப்போது ஆளும் தரப்பினருக்கு உலக அரங்கில் தமிழர்களின் நலனைப் பேணிக்கொண்டே தமது அரசியல் முன்னெடுப்பினை மேற்கொண்டு வருவதாகக் காட்டிக்கொள்வதற்கு அவர் தேவைப்பட்டிருந்தார். ஆனால், இப்போது அத்தேவை குறைந்துள்ளது. அங்கயன் இராமநாதனின் தற்போதைய அரசியல் வளர்ச்சியும் எப்போதுமே அரசதரப்பு காலால் காட்டுவதை தலையால் செய்வதற்குச் சித்தமாக இருக்கும் அவரின் போக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் தேவையினை அரசுக்குக் குறைத்துள்ளது என்று கருத இடமுண்டு. அதுபோலவே கூட்டமைப்புச் சார்ந்தவர்களின் போக்குகளும் பல இடங்களில் அரசுக்குச் சாதகமாக இருப்பதும் இன்னொரு காரணமாகக் கொள்ள முடியம். டக்ளஸ் தேவானந்தாவின் இத்தனை கால இணக்கு அரசியலில் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தது என்ன?

(13 ஆம் பக்கம் பார்க்க)





# சிறைக்கதவுகள் திறக்கப்படும் போது புதிய பூட்டுக்கள் வேண்டாம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுத்த வேண்டும்” என்று கேட்டிருக்கிறார் நாமல்.

இதைப்பற்றி அவர் மேலும் சொல்லியிருக்கும் விடசயங்கள் நம்முடைய கவனத்திற்குரியவை. அரசியற் காரணங்களுக்காக தான் சிறையில் இருந்தபோது பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதாகிச் சிறை வைக்கப்பட்டிருந்தவர்களைச் சந்தித்த அனுபவங்களை விவரித்த நாமல் மேலும் சொன்னது, “புலிகள் இயக் கத்தைச் சேர்ந்தவர்களில் பலர் சிறைகளில் உள்ளனர். ஆனால் தமது முந்திய ஆட்சிக் காலத்தில் அவர்களில் 12,500 பேர் வரையில் விடுதலை செய்யப்பட்டுச் சமூக வாழ்வில் இணைக்கப்பட்டுள்ளனர். இதில் 3500 பேர் தற்போது சிவில் பாதுகாப்புப் பிரிவில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

சிறைகளில் உள்ளோரில் வழக்கு விசாரணைகளின் பின்னர் 35 பேரே தண்டனை பெற்றவர்கள். இவர்கள் பெற்ற தண்டனைக்கும் அதிகமாக தண்டனை கிடைக்கும் முன்னர் சிறையில் கழித்து விட்டனர். சிலர் 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறையில் உள்ளனர். எந்த வழக்குமே தொடரப்படாத நிலையில் 13 பேர் உள்ளனர். வழக்கு விசாரணை நிறைவு பெற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் 116 பேர் உள்ளனர். இவர்கள் மீதான வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப்பட வேண்டும். அல்லது விடுவிக்கப்பட வேண்டும். அல்லது புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்த விடயத்தைக் கவனத்திற் கொண்டு நீதி வழங்க வேண்டும். இது ஒரு மன உளைச்சலை உண்டாக்குகின்ற விடயம். ஆகவே சட்டமா அதிபர் திணைக்களம் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்” என்பதாகும்.

இந்த உண்மை அல்லது இந்த விசயம் இப்போது தான் நாமலுக்கோ அவருடைய அரசாங்கத்துக்கோ தெரிந்ததா? என்று யாரும் அதிரடிக் கேள்வியை

> **“தற்போது அரசாங்கத்துக்கு ஒரு சிறிய வெளி அழுத்தம் ஏற்பட்டிருக்கிறது. மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை முன்னேற்றம் எதையும் காட்டவில்லை என்ற ஐ.நா மனித உரிமைகள் தரப்பின் அறிக்கையும் அமெரிக்காவின் கண்டனங்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி வரிச்சலுகை பற்றிய அறிவிப்பும் தான் அரசியற் கைதிகள் விடயத்தைக் குறித்து அரசாங்கத்தைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது என்று ஒரு சாரார் கதைக்கிறார்கள்.”**

கோபத்தோடு எழுப்பலாம். அதில் நியாயமும் இருக்கலாம். ஆனால், இப்போதாவது இதைப்பற்றி உரிய தரப்பினர் பேசியிருக்கிறார்கள் என்று எடுத்துக் கொள்வதே பொருத்தமானது. ஏனென்றால் இந்த அரசாங்கத்தில் முக்கியமான ஒருவர் நாமல். குறிப்பாக அதிகாரத்தில் உள்ள ராஜபக்ஷ குடும்பத்தின் முக்கியமான நபர். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்.

நாமலின் இந்த நிலைப்பாட்டை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சரத் பொன்சேகா உட்படப் பலரும் வரவேற்றுள்ளனர். அதாவது எதிர்த்தரப்புகள் ஒருமித்து வரவேற்றுள்ளன. எதிர்த்தரப்புகளின் வரவேற்பை - ஆதரவைப் பெறுவதற்காகத்தான் நாமல் இப்படிச் சொன்னாரா? அதாவது அரசாங்கம் இப்படி ஒரு உத்தியைப் பயன்படுத்துகிறதா? ஏனென்றால் இந்த மாதிரிச் சிக்கலான விடயங்களுக்குத் தீர்வு காண முற்படும்போது வழமையாக எதிர்த்தரப்புகள் அதை எதிர்ப்பதுண்டு. இப்போது அதற்கான வாய்ப்பில்லாமல் போயுள்ளது. அப்படியென்றால் அரசாங்கம் இனி இந்த விடயத்தில் பின்னிற்க முடியாது. சாட்டுப் போக்குகள் சொல்ல முடியாது. ஒன்று அரசாங்கம் அரசியற் கைதிகளை உண்மையாகவே விடுவிக்க விரும்பினால் அதற்கான தடைகள் குறைவு. அதனுடைய நோக்கம் நிறைவேறும். அல்லது இதை ஒரு பொறியாகக் கையாள முற்பட்டிருந்தால் - அதாவது தான் சுத்தமாக - அக்கறையாக கைதிகள் விடயத்தில் இருக்கிறேன், எதிர்த்தரப்புகள் தான் தவறாக நிற்கிறார்கள் என்று யோசித்திருந்தால் அதற்கு ஆப்படிக்கப்பட்டுள்ளது. இந்தப் பொறியில் அரசாங்கமே சிக்கியுள்ளது.

பார்க்கலாம் என்ன நடக்கிறது என்று.

இதேவேளை நாமல் தொடக்கி வைத்த விடயத்தில் சரத் பொன்சேகா சொன்ன விடயங்களும் குறிப்பிடத்தக்கன. “2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் திகதி இராணுவத் தலைமையகத்தின் முன்னால் என் மீது தற்கொலைத்தாக்குதல் நடத்தப்பட்டது. அதிலே 12 பேர் கொல்லப்பட்டனர். 27 பேர் காயமடைந்தனர். நானும் காயப்பட்டு சிகிச்சை பெற்று மீண்டேன். பின்னர் நான் அரசியற் காரணங்களுக்காகச் சிறையில் இருந்தபோது இந்தத் தாக்குதலில் குற்றம் சாட்டப்பட்டவர்களைச் சந்திக்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் மீதான வழக்கும் தொடர்ந்து நடக்கிறது. அதில் ஒருவர் மொறிஸ் என்பவர். அவருடன் உரையாடியுள்ளேன். வழக்கிலும் சாட்சியமளித்துள்ளேன். ஆனால் அவர்கள் மன்னிப்பளிக்கப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாகும்” என்று கூறியிருக்கிறார் முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா.



ஆக மொத்தத்தில் எல்லாத் தரப்பிலிருந்தும் ஒரு நல்ல சமிக்ஞை இந்த அரசியற் கைதிகளின் விடுதலை விடயத்தில் தெரிகிறது. இது இழுத்தடிக்கப்படாமல், மேலும் அரசியற் சூழ்ச்சிகளுக்குள் சிக்குண்டு போக முன்பு தீர்க்கப்பட வேண்டும். ஆகவே இதையிட்டு அதிகம் கவனமாக இருந்து இந்த விடயத்தைக் கையாள வேண்டிய பொறுப்பு அதிகமாகத் தமிழ்த்தரப்பினருக்குண்டு.

தற்போது அரசாங்கத்துக்கு ஒரு சிறிய வெளி அழுத்தம் ஏற்பட்டிருக்கிறது. மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை முன்னேற்றம் எதையும் காட்டவில்லை என்ற ஐ.நா மனித உரிமைகள் தரப்பின் அறிக்கையும் அமெரிக்காவின் கண்டனங்களும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி வரிச்சலுகை பற்றிய அறிவிப்பும்தான் இந்த மாதிரி அரசியற் கைதிகள் விடயத்தைக் குறித்து அரசாங்கத்தைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது என்று ஒரு சாரார் கதைக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை உண்மையாகவும் இருக்கலாம்.

ஆனால், இலங்கை அரசாங்கத்துக்கு இதைப்போன்ற நெருக்கடிகள் தொடர்ச்சியாக இருந்து கொண்டேயிருக்கின்றன. இனியும் தொடரத்தான் போகின்றன. அவற்றை அரசாங்கம் எதிர்கொள்ளத்தான் போகிறது. ஆகவே இந்த மாதிரிச் சிறிய காரணங்களைப் பெரிதாக்கி அரசாங்கம் பொறிக்குள் சிக்கியிருக்கிறது. அதிலிருந்து மீள்வதற்கான துருப்புக் கயிறு இது அது என்றெல்லாம் வீரப்பிரதாபங்களைக் கதைத்துக் காரியத்தைப் பழுதாக்காமல் மிக அவதானமாக இருந்து கைதிகளை விடுவிப்பதே இப்போது அவசியமாகும்.

இதைச் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டுமாக இருந்தால், அரசாங்கத்துக்கும் எமக்கும் இது ஒரு நீடித்த பிரச்சினையாக - தீர்வை எட்டக் கடினமான விவகாரமாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதே நல்லது. கிடைக்கின்ற போன்ற அரிய வாய்ப்புகளை தமிழர்கள் சொதப்பிப் பாழாக்குவதே நடப்பதுண்டு. இந்தத் தடவை யாவது அந்தத் தவறு நிகழாமல் பார்த்துக் கொள்வது அவசியம். இல்லையெனில் அரசியற் கைதிகளுக்கு தமிழ்த்தரப்பே இழைக்கின்ற துரோகமாக இது அமை யும். அரசாங்கமும் இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர விரும்பியிருக்கலாம்.

எனவே இந்தக் கோணத்தில் அரசாங்கம் சிந்தித்திருக்கவும் கூடும். இதை அரசாங்கம் ஆழமாக உணர்ந்துள்ளது என்பதை நாமலின் புள்ளிவிவரங்களுடன் கூடிய உணர்ச்சிகரமான உரை எடுத்துக்காட்டுகிறது. எதிர்த்தரப்புகள் கூட இணங்கிக் கொள்ள வேண்டும் என்றவாறாக அவர் தன்னுடைய உரையை வடிவமைத்திருக்கிறார். இதனால்தான் நாமலையும் விட வயதில் மூத்தவரும் தாக்குதல் ஒன்றை நேரடியாகவே சந்தித்து அதிலிருந்து மீண்டவருமான சரத் பொன்சேகா கூட மறுப்புச் சொல்லாமல் இதை ஏற்றிருக்கிறார். ஆகவே சிங்களத் தரப்பில் ஏட்டிக்குப் போட்டியாக இதை மறுக்கும் நிலைமை குறைவாகவே உள்ளதாகத் தெரிகிறது.

காலம் செல்லுமாக இருந்தால் முந்திய அரசாங்கம் (ரணில் - மைத்திரி ஆட்சி) இந்தக் கைதிகளை விட்டிருக்கலாம்தானே. அப்போது என்ன செய்தீர்கள்? என்றவாறான கேள்விகளும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டு மேலும் சிக்கலான நிலைமை தோற்றுவிக்கப்படக் கூடும். இதைப்போல தமிழ் அரசியற் தரப்பிலும் நாம்தான் முதலில் இதைப்பற்றிச் சிந்தித்தோம். நாமே அரசாங்கத்தோடு இதைப்பற்றிக் கதைத்தோம். இப்படி அரசாங்கம் சிந்திப்பதற்கான சூழலை உருவாக்கினோம் என்ற அரசியல் ஆதாயப் போட்டிகள் கிளம்பி எல்லாவற்றையும் பாழாக்கி விடவும் கூடும். இதற்கான ஒரு அடையாளத்தை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்று தெளிவாகக் காட்டியுள்ளது.

கைதிகளின் விடயத்தைத் தொடக்கி விரிவாக உரையாற்றிய செய்தியை இரண்டாம் நிலைக்குத் தள்ளிய அந்தப் பத்திரிகை சுமந்திரனின் ஆதரவு உரைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. மட்டுமல்ல, இதற்கு முன்பே இந்த விடயம் அரசாங்கத்தரப்போடு உத்தியோக பூர்வமற்ற முறையில் பேசப்பட்டுள்ளதாகவும் அந்தப் பத்திரிகை நிரூபிக்க முற்பட்டிருக்கிறது. அதனுடைய செய்திகளின் நம்பகத்தன்மையை இங்கே நாம் கேள்விக்குட்படுத்தவில்லை. அது உண்மையாகவே இருக்கலாம். ஆனால் இப்படிச் சொல்ல முற்படுவதன் மூலம் இது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான ஒரு இரகசிய உடன்படிக்கையின் விளைவு என்ற தோற்றப்பாட்டை சிங்களக் கடும் தேசியவாதத் தரப்புகளிடம் உருவாக்கி விடக் கூடும். ஆகவே அரசியற் கைதிகளின் நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்த மாதிரி விடயங்களைக் கொஞ்சம் அடக்கி, பொறுதியுடன் வாசிப்பதே நல்லது.

மேலும் பாராளுமன்றத்தில் இந்த விடயம் பேசப்பட்ட கையோடு இதை வெளிப்படுத்திய தமிழ் ஊடகங்களிலேயே இந்த அரசியற் போட்டிக்கான வேறுபடுத்தல்களை இனங்காணக்கூடியதாக இருந்தது. உண்மையில் அப்படிச் சில அரசியற் தரப்பினர் அல்லது சில அரசியலாளர்கள் இதைக்குறித்து பேசியிருக்கலாம். முயற்சித்திருக்கலாம். அதற்காக அவர்களைப் பாராட்டத்தான் வேண்டும். ஆனால், அது ஒரு அரசியற் போட்டிக்கான விதையாக மாறி வாய்ப்புகளை இழக்க வைக்கக் கூடாது. வேண்டுமாக இருந்தால் கைதிகளின் விடுதலை சாத்தியமாகிய பின்னர் இதன் பின்னால் நடந்த உண்மைகளை - நடவடிக்கைகளை - அந்த நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களை - அவர்களுடைய உழைப்பையும் நல்லெண்ணத்தையும் பின்னர் பகிரங்கப்படுத்தலாம். அதுவே சிறப்பு.

ஆகவே வெண்ணெய் திரண்டு வரும் தாழியை தயவு செய்து யாரும் உடைத்து விடாதீர்கள். இது கண்ணீரோடும் கவலைகளோடும் உள்ளே கைதிகளும் வெளியே அவர்களுடைய உறவுகளும் அந்தரித்துக் கொண்டிருக்கும் உத்தரித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கையை வென்றெடுக்க வேண்டிய தருணம். மீட்டெடுக்க வேண்டிய விடயம். ■

இராகன்

> நாலைஞ்சு நாளாகியும் துக்கம் விசாரிக்க ஊராக்களும் அறிஞ்சவை தெரிஞ்சவையும் வந்து போனவையாம். வீடே செத்தவீடு நடந்த வீடுபோலை ஆகிப்போச்சுதாம். மீன் வாங்கப்போன மீனாட்சிசுந்தரத்தைக் காணயில்லையாம் என்ற செய்தி ஊருலகமெல்லாம் பரவியிட்டுதாம். எல்லாரும் பதகளிச்சுக்கொண்டு ஓடித் திரிஞ்சுகொண்டிருக்க மனிசிக்காரியின்ரை முகத்திலை அவளவு பதற்றம் இல்லையாம்.

# ஊருக்கை ஒரு கதை! – 09

**மீன் வாங்க மலைக்குப்போன மீனாட்சி சுந்தரம்**



கட்சிக்கூட்டங்களிலை உணர்ச்சியளைத் தூண்டுற மாதிரியான பாட்டுப் பாடுறதும், பேச்சுகளைப் பேசுறதும் வழக்கமாயிருந்தது. கட்சித் தலைவர்களின்ரை மனிசிமாரும் கூட்டங்களுக்கு வருவினம். அவையள் வாற கூட்டங்களிலை பொம்பிளைப் பிள்ளையளை மேடைக்கு ஏத்தி பாட்டுப்பாட வைப்பினம். பாரதியார் பாட்டுகள், இந்திய சினிமாப் படங்களிலை வந்த புரட்சிப் பாட்டுகள் எண்டு பாட்டுகள் களைகட்டும். கட்சிக்கு தொண்டு செய்யிற உள்ளூர் விசுவாசியளின்ரை பிள்ளையள், பேரப்பிள்ளையளை வைச்சு பாட்டுகளை பாடுவிப்பினம். பேரப்பிள்ளையளைக்கொண்டு பாட்டுப் பாடுவிச்சு, தலைவர் மாரின்ரை மனசை வெண்டெடுத்து, பெத்த பிள்ளையளுக்கு உத்தியோகம் எடுப்பிச்ச கதையளும் இருக்கு.

சிம்மக் குரலோன், பிரச்சாரப் பீரங்கி, வெடிகுண்டுப் பேச்சாளன் எண்டெல்லாம் மேடையிலை பேசுற ஆக்களுக்கு பட்டம்சூட்டி பெருமையடிக்கிற வழக்கம் இருந்து வந்துது. கூட்டங்களுக்கு வாற ஆக்களை வசியம் செய்து கட்டிவைச்சிருக்கிற பேச்சுக்காரர் இருந்தினம். பேச வெளிக்கிட்டால் மணித்தியாலக் கணக்கிலை பேசுவினம். பட்டிமன்றங்களிலையும் அரசியல் கூட்டங்களிலையும் பேசிவந்தவை பலருக்கு இப்பிடியான பட்டப் பெயர்களைச் சூட்டியிருந்தினம். அந்தப் பட்டப்பெயருகள் நீண்டகாலத்திலை அவையளின்ரை உண்மையான பெயரையே மறக்க வைச்சிடும். அப்பிடியான பட்டத்தை சொல்லுறதிலை அவையளுக்கும் அளவில்லாத சந்தோசம்தான். மேடையளிலை அவையளின்ரை பெயரோடை அடைமொழியைச் சேர்த்துச் சொல்லுற நேரங்களிலை அவை வானத்திலை பறப்பினம். சிம்மக் குரலோன் சங்கரப்பிள்ளை, பிரசாரப் பீரங்கி பீற்றர்சிங்கம், வெடிகுண்டுப் பேச்சாளன் வெற்றிவேல் எண்டெல்லாம் "லவுட்ஸ்பீக்கர்" அவையின்ரை பேரை சொல்லுற நேரங்களிலை ஆக்களின்ரை பெருமையைப் பார்க்கவேணும்!

அப்பிடியாக்கொத்த ஒரு பேச்சுக்காரனைப் பற்றி ஊராக்கள் மறக்காமல் அடிக்கடி கதைப்பினம். அந்தக் காலங்களிலை நடந்த அரசியல் கட்சிக் கூட்டங்களிலை அவரின்ரை பேச்சு இடிமுழக்கமாக முழங்குமாம். கட்சிக்காரர் நாடத்திற பொதுக்கூட்டங்களிலை எத்தினை பெரிய தலையள் வந்து பேசினாலும் அவரின்ரை பேச்சைச் கேக்க வாற ஆக்கள்தானாம் கூட. உள்ளூர் பாட்டுக்காரருக்கு ஈழத்து சௌந்தரராசன், ஈழத்து ஜேசுதாஸ் எண்டெல்லாம் பட்டம் சூட்டுறதைப்போலை, அரசியல் கூட்ட மேடையளிலை பேசுறவைக்கும் ஈழத்து அண்ணாத்துரை, ஈழத்துக் கருணாநிதி எண்டெல்லாம் பெயர்சூட்டியிருந்திருக்கினம்.

அப்பிடியாக்கொத்த ஒருத்தர்தான் "வெடிகுண்டு மீனாட்சி". மீனாட்சிசுந்தரம் எண்ட பெயரோடை வெடிகுண்டைச் சேர்த்துவிட்டவர் அவரின்ரை கட்சித் தலைவர்தானாம். ஊரிலை நடந்த "எலக்சன்" பிரச்சாரக் கூட்டம் ஒண்டுக்கு வந்திருந்த கட்சித் தலைவர் மேடையிலை மீனாட்சிசுந்தரம் வெடிச்ச வெடிப்பைக் கேட்டுக் கொண்டு இருந்துவிட்டு, பேசி முடிஞ்ச கையோடு பொன்னாடை ஒண்டைப் போர்த்திவிட்டு, "இன்று முதல் மீனாட்சிசுந்தரத்துக்கு வெடிகுண்டு மீனாட்சிசுந்தரம் எண்டு பெயர் சூட்டுகின்றேன்" எண்டு அறிவிச்சுவிட்டாராம். அண்டு தலைவர் போர்த்திவிட்ட பொன்னாடையோடு, தலைவரின்ரை அணைப்பிலை நிண்டபடி எடுத்த படத்தை, பெரிசாக்கி "பிறேம்" போட்டு, வீட்டுக்கு வாற ஆக்கள் பார்க்கக்கூடிய இடத்திலை மாட்டிவிட்டிருந்தாராம். அண்டு முதல்கொண்டு ஊரிலை எல்லாரும் அவரை "வெடிகுண்டு மீனாட்சி" எண்டுதானாம் சொல்லிவந்தினம். இந்த வரலாறு தெரியாத பொடியள் தரவளியள் "வெடிகுண்டு" எண்டு சொல்லிறதுக்கு மூக்கை பொத்திக்கொண்டு வேறை அர்த்தமும் சொல்லிச் சிரிப்பாங்களாம்!

என்னதான் ஆர் சொன்னாலும், அந்த நாட்களிலை மலைநாடு, மட்டக்களப்பு, திருக்கணாமலை, மன்னார், வன்னி எண்டு மீனாட்சிசுந்தரத்தார் பேச்சுக்கு போகாத இடமில்லை. கட்சிக்காரர் வீட்டுக்கு வாகனம் அனுப்பி கூட்டிக்கொண்டுதான் போவாங்களாம். "எலக்சன்" காலமெண்டால் ஒரு நாள் வீட்டைவிட்டு வெளிக்கிட்டால், வீட்டுக்கு வந்து சேர பத்து பன்னிரண்டு நாட்களும் எடுக்குமாம். ஒவ்வொரு இரவும் குறைஞ்சது ரண்டு இடத்திலையாவது வெடிக்க வேண்டியிருக்குமாம். அவர் வெடிக்க வெடிக்க மேடையிலை இருக்கிற தலைவர்மார் கை தட்டி புருவங்களை உயர்த்துவினமாம். மீனாட்சிசுந்தரத்தார் பேசாத கூட்டம் பொலிவில்லாமல் இருக்குமாம். மீனாட்சியார் பேசிற பேச்சுக்கு இடையிடையே உணர்ச்சிக் கவிதையளையும் அள்ளி விடுவாராம். அந்த நேரங்களிலை அவர் சீட்டி மழையிலை நனைவாராம்!

"எலக்சன்" காலம் நெருங்கிவிட்டுதேயெண்டால் மீனாட்சியாரின்ரை மனிசி வேட்டி, நசனல், சருகை கரை வைச்ச சால்வை எல்லாம் தோய்ச்சு, பெட்டி பிடிச்சு தயாராக வைப்பாளாம். ஒவ்வொருக்காலும் மனிசன்காரன் வெளிக்கிட்டுப் போகேக்கை கொடுப்புக்குள்ளை சிரிச்சு பூரிச்சுப் போவாளாம். அவளின்ரை பூரிப்பை கண்டு இவருக்கு புதிசா உற்சாகம் பிறக்குமாம். அவரை கூட்டிக்கொண்டு போக வந்து நிக்கிற வாகனத்திலை ஏறுற நேரத்திலை ஒருக்கால் அயல்வீட்டுக்காரர் தன்ரை பவனியை பார்க்கினமோ எண்டு கவனிச்சுக் கொள்ளுவாராம். அவர் போற வாகனம் வெளிக்கிடும் மட்டும் மனிசி வாசலிலை நிண்டு வழியனுப்பி விடுவாளாம்.

கட்சியின்ரை கூட்டம் எண்டால் மீனாட்சியார் எல்லாத்தையும் அப்பிடியே போட்டுவிட்டு வெளிக்கிட்டு விடுவார். அவ்வளவுக்கு கட்சிக்கு உண்மையாக இருக்கிற விசுவாசம். மீனாட்சியாரின்ரை ரண்டு ஆம்பிளைப் பிள்ளையளுக்கும் தன்ரை கட்சியின்ரை தலைவர் மாரின்ரை பெயரைத்தான் வைச்சிருக்கிறாரெண்டால், அவரின்ரை விசுவாசத்தை பாருங்கோவன்.

மீனாட்சியாருக்கு மூண்டாவது பொம்பிளைப்பிள்ளை. பிறந்து மூண்டு மாதமிருக்குமாம். மனிசிக்காரிக்கு பத்தியச் சாப்பாட்டுக்கு ஒட்டி மீன் வாங்க "ரவுண்" சந்தைப்பக்கம் போயிருக்கிறார். ஒட்டி சாப்பிட்டால் பிள்ளைக்கு குடுக்க பால் ஊறுமாம். ஒட்டி தேடிப் போனவர் வருவார் வருவாரெண்டு வீட்டுக்காரர் காத்துக்கொண்டிருந்திருக்கினம். ஆள் வரயில்லை. எங்கை போனார் எண்டு தெரியாமல் வீட்டுக்காரர் முழிசிக்கொண்டு இருந்துதுகளாம். அயலாக்கள்கூட அறிஞ்சு துக்கம் விசாரிக்க வீட்டுக்கு வந்துவிட்டுதுகளாம். சந்தை, கடை, தெருவு எண்டு எல்லா இடங்களிலும் தேடியலைஞ்சும் ஆளைக் கண்டுபிடிக்க முடியேல்லையாம். நாலைஞ்சு நாளாகியும் துக்கம் விசாரிக்க ஊராக்களும் அறிஞ்சவை தெரிஞ்சவையும் வந்து போனவையாம். வீடே செத்தவீடு நடந்த வீடுபோலை ஆகிப்போச்சுதாம். மீன் வாங்கப்போன மீனாட்சிசுந்தரத்தைக் காணயில்லையாம் என்ற செய்தி ஊருலகமெல்லாம் பரவியிட்டுதாம். எல்லாரும் பதகளிச்சுக்கொண்டு ஓடித் திரிஞ்சுகொண்டிருக்க மனிசிக்காரியின்ரை முகத்திலை அவளவு பதற்றம் இல்லையாம். நாலஞ்சுநாள் கழிச்சு மம்மலுக்கை வீட்டு வாசலிலை ஒரு வாகனம் வந்து நிண்டுதாம். ஒரு அசுமாத்தமும் இல்லாமல் மீனாட்சிசுந்தரத்தார் இறங்கி வந்திருக்கிறார். "நான் மீன் சந்தையுக்கு போற வழியிலை கட்சி வாகனம் ஒண்டு திருக்கணாமலைக்கு போச்சுது. அங்கை ஒரு கூட்டத்துக்கு வரச்சொல்லி தெண்டிச்சாங்கள் பொடியள். தலைவரும் வருவாரெண்டு சொன்னாங்கள். அப்பிடியே வாகனத்திலை ஏறிவிட்டன்" எண்டு மனிசிக்கு ரகசியமாக சொல்லியிருக்கிறார். மனிசி கொடுப்புக்குள்ளை சிரிச்சாவாம். எப்பிடி அந்தக்கதை ஊராக்களின்ரை வாய்க்கு அவலாக வந்துதோ தெரியாது. அண்டு தொடக்கம் மீனாட்சிசுந்தரத்தை ஊராக்கள் "மீன்வாங்க மலைக்குப்போன மீனாட்சி சுந்தரம்" எண்டு சொல்லி வந்தினமாம். திருகோணமலை திருக்கணாமலையாகி, பின்னர் சுருக்கமாக மலை என்று ஆகியிருந்தது. ■

# புத்தர் பிரானின் வழியில் வந்தவர்கள்... !?

அவதானி



> அதற்குப் புறப்படவிருந்த வேளையில்- அமைதியையும் சமாதானத்தையும் அன்பு மார்க்கத்தையும் போதிக்க அவதரித்த புத்தரின் புனித பாதம் பதிந்த, அவர் நீராடிய களனி கங்கைக் கரையிலிருந்து, அண்ணல் காந்தியின் புனித அஸ்தி கரைக்கப்பட்ட இடத்திலிருந்து தொடங்கியது அந்த அரசியல் சதி. ஆனால், தற்போது பௌத்த தேரர்கள் சந்திக்கே வந்து நடுத்தெருவில் அமர்ந்து இன்றைய ராஜபக்ஷ அரசுக்கு எதிராக குரல் எழுப்பத் தொடங்கி விட்டனர்.

புத்தர் பிரானின் சரித்திரம் தெரிந்தவர்கள்தான், இலங்கை வாழ் பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த சிங்கள மக்கள். இவர்கள் தமது ஆரம்பக்கல்வியை தொடரும் போதே, புத்த சரித்தய என்ற பாட நூலையும் படிக்கத் தொடங்கிவிடுவார்கள். தமது இளம் வயதில் சிங்கள மொழியை இரண்டாம் பாடமாக பயிலும் பிற இனத்துப்பிள்ளைகளும் குறிப்பிட்ட புத்த சரித்தய நூலைப்படிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிட்டும். அந்நாட்களில் குமாரோதய, புத்த சரித்தய முதலான பாட நூல்கள் இலங்கையில் பிரசித்தம்.

இன்றைய நேபாள எல்லைக்குள் இருக்கும் கபிலவஸ்து நகரத்தின் மன்னர் சுத்தோதனனின் பிள்ளையாகப்பிறந்த புத்தரின் இயற்பெயர் சித்தார்த்தன் அரண்மனைவாசியாகவே வாழ்ந்திருக்கும் சித்தார்த்தன் அனைத்து சுகபோகங்களையும் அனுபவித்தார். தனது பதினாறாவது வயதில் உறவுப்பெண்ணான யசோதராவை மணம்முடித்து ராகுலன் என்ற ஆண் மகவுக்கும் தந்தையானார்.

அரண்மனையை விட்டு வெளியே செல்லும் சந்தர்ப்பம் அவருக்கு கிட்டியபோது, ஒரு முதியவரையும், ஒரு நோயாளியையும், ஒரு மரண முற்றவரையும், ஒரு துறவியையும் காண்கிறார். அவர் அதுவரையில் வாழ்ந்துகொண்டிருக்கும் அரண்மனையில் காணாத காட்சிகளை அந்த நால்வரின் தோற்றத்திலும் காண்கிறார். அரண்மனை வாழ்க்கைக்கும் அப்பால் மற்றும் ஒரு வாழ்க்கை வெளியே இருக்கிறது என்பதை உணர்ந்தார்.

இரவோடிரவாக மனைவி யசோதராவையும் புதல்வன் இராகுலனையும் விட்டுவிட்டு, நாடும் வேண்டாம், அரண்மனை சுகமும் வேண்டாம், மணிமுடியும் வேண்டாம் என்று வனம் சென்று துறவறம் பூண்டு, நாடெங்கும் அலைந்து அன்புமார்க்கத்தை போதித்தார்.


அவருடைய போதனைகள் நான்கு உண்மைகள் பொதிந்தவை. அவை:

01. மனித வாழ்க்கை இயல்பாகவே துன்பம் நிறைந்தது.

02. அந்தத் துன்பத்திற்குக் காரணம் அவர்களின் சுயநலனும், ஆசையும்.

03. மனிதனால் தன்னலத்தையும், ஆசையையும் அடக்க முடியும்.

04. மக்கள் தன்னலம், ஆசை ஆகியனவற்றிலிருந்து தப்பிக்க எட்டு மார்க்கம் உண்டு. அவை: நேர்மையான கருத்து, நேர்மையான எண்ணம், நேர்மையான பேச்சு, நேர்மையான செயல், நேர்மையான வாழ்க்கை, நேர்மையான முயற்சி, நேர்மையான சித்தம், நேர்மையான தியானம் .





இந்த அரிச்சுவடியெல்லாம் நன்கு தெரிந்தவர்கள்தான் எமது தேசத்தின் ஆட்சியாளர்களும், அவர்களை ஆட்டிப்படைக்கும் பௌத்த தேரர்களும்.

இந்தத் தேரர்களின் மூத்த தலைமுறையினர் ஒருசிலர் இற்றைக்கு அறுபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1959 ஆம் ஆண்டு, கௌதம புத்தரின் புனித பாதம் பதிந்ததாக ஐதீகத்தில் கூறப்படும் களனி ரஜமஹாவிகாரையில், ஒரு சதியை திட்டமிட்டு மேற்கொண்டு நிறைவேற்றினார்கள்.

குறிப்பிட்ட களனி ரஜமகா விஹாரையின் பிரதம குரு மாபிட்டி கமபுத்தரகித்த தேரோ ( 1921-1967) தலைமையில் தல்துவே சோமராம தேரோ (1915-1962) திருமதி விமலா விஜயவர்தனா என்ற அன்றைய சுகாதார நலத்துறை அமைச்சர் உள்ளிட்ட எட்டுப்பேர் அன்றைய பிரதமர் பண்டாரநாயக்காவை கொலை செய்ய சதித்திட்டம் உருவாக்கி செயல்படுத்தினர்.

அவர்களின் திட்டத்தின் பிரகாரம் பண்டாரநாயக்கா, 1959 செப்டெம்பர் 25 ஆம் திகதியன்று அவரது ரோஸ்மீட் பிளேஸ் வாசஸ்தலத்தில் சுடப்பட்டு மறுநாள் இறந்தார். 25 ஆம் திகதி அவர் ஐ.நா. சபைக் கூட்டத்தொடருக்கு பயணமாகவிருந்த தருணத்தில்தான் இந்தத் துன்பியல் சம்பவம் நடந்தது. உலகநாடுகளில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்குவதற்காகவும் அமைக்கப்பட்டதுதான் ஐக்கிய நாடுகள் சபை.

அதற்குப்புறப்படவிருந்த வேளையில்- அமைதியையும் சமாதானத்தையும் அன்பு மார்க்கத்தையும் போதிக்க அவதரித்த புத்தரின் புனித பாதம் பதிந்த, அவர் நீராடிய களனி கங்கைக்கரையிலிருந்து, அண்ணல் காந்தியின் புனித அஸ்தி கரைக்கப்பட்ட இடத்திலிருந்து தொடங்கியது அந்த அரசியல் சதி. ஆனால், தற்போது பௌத்த தேரர்கள் சந்திக்கே வந்து நடுத்தெருவில் அமர்ந்து இன்றைய ராஜபக்ஷ அரசுக்கு எதிராக குரல் எழுப்பத்தொடங்கிவிட்டனர்.

நாடும் வேண்டாம், அரண்மனை சுகமும் வேண்டாம், மணிமுடியும் வேண்டாம் எனச் சொன்னவரின் அடிச்சுவட்டில் வந்திருக்கும் இவர்கள் அரசியலை உரத்துப்பேசுகின்றனர். நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுகின்றனர். தேசியப்பட்டியல் எம். பி. பதவிக்காக தமக்குள் சமரும் செய்கின்றனர்.

இந்தக் கொரோனோ தொற்றுக் காலத்தில், காணொளிகள் வாயிலாக அரசை, கடுமையான வார்த்தைப்பிரயோகங்களில் வசைபாடுகின்றனர். படித்தவர் முதல் பாமரர்கள் வரையில் அவர்களது ஆக்ரோஷமான குரல் சென்றடைகிறது.

விகாரைகளில் வாழ்ந்தவாறு மக்கள் தரும் தானங்களைக் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர், அதாவது மதியம் பன்னிரண்டு மணிக்கு முன்னர் சாப்பிட்டு, புலனடக்கி அன்பு மார்க்கத்தை போதிக்கவேண்டியவர்கள், வீதிக்கு வந்து வாய்க்கு வந்தபடி பேசுகின்றார்கள்.

இந்த அதிசயம் எவ்வாறு நிகழ்கின்றது.

இதற்கும் ஒரு வரலாற்றுப்பின்னணி இருக்கின்றது.

தான் முன்பு அங்கம் வகித்த ஐக்கிய தேசியக்கட்சியில் தன்னை விட ஜூனியராகவிருந்த டட்லி சேனாநாயக்காவை, தனது அரசியல் வாரிசாக்க அன்றைய முதல் பிரதமர் டீ. எஸ். சேனாநாயக்கா திட்டமிட்டதனால் பலத்த ஏமாற்றமடைந்த எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்கா, ஐம்பெரும் சக்திகள் என்ற மக்கள் திரளை உருவாக்கினார்.

அதனைச் சிங்களத்தில் பஞ்மா பலவேகய என அழைப்பர்.

அதில் இடம்பெற்றவர்கள் : தொழிலாளிகள், விவசாயிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள். இவர்களுடன் மேலும் ஒரு சக்தியை அவர் அன்று இணைத்துக்கொண்டார்.

அந்த சக்திதான் காவி உடை தரித்த முற்றும் துறந்த துறவிகளான பௌத்த பிக்குகள்.

இந்த ஐம்பெரும் சக்திகளுடன் அன்று பதவிக்கு வந்த அவர், அதில் ஒரு சக்தியின் துப்பாக்கி வேட்டிலேயே பலியாகி பரலோகம் சென்றார்.

தற்போது, பௌத்த பிக்குகள் வீதியில் இறங்கியும், காணொளியில் தோன்றியும் வாய்வேட்டுக்களை தீர்க்கின்றனர்.

இது எங்கே சென்று முடியும்..?

கொரோனோ தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக அரசு நாட்டை முடக்கியதன் எதிரொலியால் விளைந்த குரலாகத்தான் அந்த எதிர்வினைகளை அவதானிக்கமுடிகிறது.

புத்தர் சிலைகளை முடிந்த வரையில் காணும் இடங்கள் தோறும் நிறுவ முயற்சிப்பது, புத்தரின் அன்பு மார்க்கத்தை போதிப்பதற்காக அல்லாமல் நில ஆக்கிரமிப்புக்கான மார்க்கந்தான் என்பது புரிந்துகொள்ளப்பட்டதுதான்.

தற்போது, புலனடக்கி வாழவேண்டிய பௌத்த துறவிகள் தாங்களும் சேர்ந்து உருவாக்கிய அரசுக்கு எதிராக கடுங்குரல் எடுத்து பேசுகிறார்கள் என்றால், அதன் விளைவு எப்படி அமையும் என்பதைப்பற்றி சிந்திக்கவேண்டிய காலம் அரசுக்கு கனிந்துள்ளது.

■

# திரிகோணாசனம்

ஆசனங்கள் உடலில் பிராண சக்தி ஓட்டத்தை சீராக நிகழ்த்துவதுடன் வாழ்விலும் சமநிலையைப் பேண உதவுகின்றன. நின்ற நிலையில் செய்யக் கூடிய ஆசன வரிசையில் அடுத்ததாக திரிகோணாசனம் பற்றி பார்க்கலாம். இந்த ஆசனத்தில் நிலைபெறும் போது மூன்று முக்கியமான முக்கோணங்களை அவதானிக்கலாம். மூன்றுக்கும் அதிகமான முக்கோணங்களை பலரும் கணிப்பதுண்டு. எத்தனை முக்கோணங்கள் என்பதை விட எவ்வாறு நாம் சமநிலையைப் பேணி ஆசனத்தின் பலாபலன்களைப் பெற்றுக் கொள்கிறோம் என்பதே இங்கு முக்கியமானது.

யோகாசன ஆரம்ப காலங்களில் கற்றுக் கொண்ட ஏகபாதாசனம், திரிகோணாசனம் போன்ற சமநிலையைப் பேண வேண்டிய ஆசனங்களைத் திறம்படச் செய்வதன் மூலம் வாழ்வில் ஏற்படும் சவால்களை திறம்பட கையாளும் திறமை வந்து சேர்கிறது.. முக்குணங்களாக இருக்கும் இராஜச, தமச குணங்களில் இருந்து யோகிகளுக்கு அமைந்துவிடும் சாத்விக குணத்திற்கும், இறுதியில் எக்குணமுமற்ற நிர்குணமான சாட்சி நிலை விழிப்புணர்வே நாம் என்ற ஞானம் வருகிறது. மும்மலங்களை வென்னு இந்நிலைக்கு வர வேண்டியிருக்கிறது.

செய்யும் முறை உடலை வளைக்காது நேராக நிற்கவும், உடல் அமைப்பு, வளையும் தன்மைக்கு ஏற்ப கால்களுக்கு இடையில் இரண்டு அல்லது மூன்று அடி இடைவெளி (30 பாகை அல்லது 45 பாகை) வரும்படியாக விரித்து வைக்க வேண்டும். கைகளை இருபக்கமும் நிலத்திற்கு சமாந்தரமாக உயர்த்தவும். இடது பக்கமாக செய்யும் போது இடது பாதத்தை 90 பாகையளவிலும் வலது பாதத்தை 45 பாகை அளவிலும் திருப்ப வேண்டும். இப்போது மூச்சை உள் எடுத்தபடி இடுப்பை இடப்பக்கமாக பக்கவாட்டில் நகர்த்தி மூச்சை மெதுவாக வெளிவிட்ட படி இடது கைவிரல்களால் இடது கணுக்காலைத் தொட வேண்டும். முடிந்தவர்கள் தரையைத் தொடலாம். கைகள் நேர் கோட்டில் இருக்க வேண்டும். தலை மேலே பார்த்தபடி இருக்க வேண்டும். இந்நிலையில் இயல்பான சுவாசத்தைப் பேண வேண்டும். ஆரம்பத்தில் முடிந்த அளவு நேரம் நிற்கலாம். படிப்படியாகக் கால அளவை அதிகரிக்கலாம். மூச்சை உள் இழுத்தபடி பழைய நிலைக்கு வர வேண்டும். இதே போல் வலப்பக்கமாகவும் செய்ய வேண்டும். முழுஉடலும் இவ்வாசன நிலையில் ஒரே தளத்தில் இருக்க வேண்டும். அதாவது உடல் முன்புறமாக வளைவதைத் தவிர்க்க வேண்டும். சுவரோடு செய்வதாக கற்பனை செய்தால் முழு உடலும் சுவரைத் தொட வேண்டும் என்பதே இதன் அர்த்தம்.



ஆசனம் செய்ய முன் உடலைத் தளர்த்தும் பயிற்சிகளைச் செய்வதும், மெதுவாக வளைவதன் மூலம் சமநிலையைப் பேணுவதும் முக்கியமானது.

பயன்கள் கை,கால், கணுக்கால், முழங்கால், தோள் மற்றும் மார்பு உறுதியடைகிறது. இடுப்புப் பகுதியின் வளையும் தன்மை மேம்படுகிறது. முதுகுத்தண்டு நரம்புகளைத் தூண்டி விடுகிறது. பதற்றம், மனஅழுத்தம், முதுகுவலி குறைவடைகிறது. சமிபாட்டு பிரச்சனைகள், வாய்வுத் தொல்லை நீங்க உதவுகிறது.

யாரெல்லாம் செய்யக் கூடாது ஆசனங்கள் யோக ஆசிரியரின் வழிகாட்டுதலில் செய்வதே பொருத்தமானது. சில உடல் உபாதைகள் உள்ளவர்களுக்கு குறிப்பிட்ட சில ஆசனங்களைச் செய்வது உகந்ததாக இருக்காது. அந்த வகையில் திரிகோணாசனத்தை முதுகுத்தண்டுவட சில்லு இடம் பெயரந்தவர்கள் (slip disc) செய்யக் கூடாது. அதேபோல் இடுப்பு, முழங்கால், கணுக்கால், கழுத்து போன்ற பகுதிகளில் பிரச்சனை உள்ளவர்கள் யோக ஆசிரியரின் ஆலோசனையின் பெயரில் இவ்வாசனத்தைச் செய்ய வேண்டும். இரத்த அழுத்தம் மற்றும் இதய சம்பந்தமான நோய் உள்ளவர்கள் மருத்துவர் மற்றும் யோக ஆசிரியரின் ஆலோசனையின் பெயரில் இலகுவான முறையில் இவ்வாசனத்தை செய்து பயனைப் பெறலாம்.

**முரளீதரன் நவரத்தினம்**
MSc in Yoga (அண்ணாமலைப் பல்கலைக்கழக கனடா வளாகம்)

# நிலைக்கண்ணாடி

## விம்பம் - 03

**தரிசனன்**



உங்கள் உள்ளிருந்து ஒளி தரும் ஒரு தீபம் போல் என்னாலும் எனது இலக்கு நோக்கிய பயணத்தை நிச்சயமாய் ஆரம்பிக்க முடியும். அதனைத் தொடர முடியும் என்ற உறுதியைத் தந்து நிற்கும் ஒரு உணர்வே தன்னம்பிக்கை. பிறந்து இயங்கத் தொடங்கும் ஒரு சிசு அதற்குரிய இயல்பான ஊட்டங்கள் கிடைக்கும் பட்சத்தில் தானே படிப்படியாக இயங்கி, திரும்பி, உருண்டு, நிமிர்ந்து, உடம்பு திருப்பி காலப்போக்கில் தவழ ஆரம்பிக்கிறதே. அதன் அவ்வாறான இயக்கத்துக்கு அடிப்படையான ஒரு உந்துதலாய் அமைவது கூட அதன் நம்பிக்கை உந்துதல்தான். ஓயாது இயங்கச் சொல்கிற ஒரு தூண்டலை உணரும் ஒரு குழந்தை ஒரு கட்டத்தில் தொடர்ந்த தன் செயற்பாட்டை பெயரறியா உதைப்பின் உதவியுடன் தொடர முயற்சிக்கிறது.

இந்த இயற்கைக் குணவியல்பு எல்லோருக்குள்ளும் இருந்து கொண்டுதானுள்ளது. அதற்குச் செவி சாய்த்த நாம் ஒவ்வொருவரும் எமது அறிவின் வெளிச்சத்தில் நமது ஆற்றல், பொருள் முதலானவற்றுக்குத் தகுந்தாற் போல் தொழிற்பட ஆரம்பிக்கும் போது எமக்கான பயணம் ஆரம்பிக்கிறது.

தன்னம்பிக்கையோடு நாம் ஒரு முயற்சியில் இறங்கும் போது எதிர்கொள்ளநேரிடும் பல விடயங்கள் எமது முயற்சிகளின் வெற்றி தோல்விகளில் செல்வாக்குச் செலுத்த வாய்ப்பு உண்டாகிறது. அவற்றுள் முக்கியமான ஒரு விடயம் மற்றவர்களது அபிப்பிராயங்களும் குறுக்கீடுகளும் என்பதைப் பலரும் அறிவோம். பலவகையான மனித மனப் பண்புகள் அடுத்தவர்களது முயற்சியில் தலையிடுகின்றவையாக உள்ளன. இந்த இடத்தில் தான் நாம் நம்மைக் குறித்த சுய மதீப்பிட்டின் உறுதியில் பற்றுடன் தொடர வேண்டியோராக இருக்கிறோம்.

நமது காரியத்தைப் பார்க்க நேரிடும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கண்ணோட்டத்தில் அதனைப் பார்க்கிறார்கள் அதற்குத் தகுந்தாற்போல அவர்களது அபிப்பிராயங்களும் நமது காரியத்துக்குச் சார்பாகவோ எதிர்மறையாகவோ அமைந்து விட முடியும் எனவே எமது சொந்த முயற்சி என்பது நமது சுய ஆற்றலின் அடிப்படையி லேயே நிகழ்வதால் நாம் குழம்பிப் போய்விடத் தேவையில்லை. குறுக்கீடுகளில் குழம்பிப் போகும் பலவீனத்துக்கு ஆளாக வேண்டாம். இன்றே நான் வெற்றி பெற நானே அடிப்படை என்று நான் நம்புவது அவசியம் முதிர்ச்சி அடை யாத மனநிலை, பொறாமை, அடுத்தவர் வளர்ச்சி பொறுக்காத ஆற்றாமை போன்ற காரணத்தினால் நமது செயற்பாடுகளை விமர்சிக்கவும் மதிப்பிளக்கச் செய்யவும் பலர் தயாராவார்கள் இது கண்டு நாம் குழம்பிப் போய்விடக் கூடாது. தேவையற்ற விடயங்களுக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் தருவதும் அவசியமற்றது. நாம் நமது நியாயங்களில் கொண்ட உறுதிப்பாடுகளைத் தளர விடாமல் இருக்க வேண்டியது அவசியம்.

முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் போது மனம் திருப்திப்படுகிறது மகிழ்ச்சியும் நம்பிக்கையும் ஏற்படுகின்றன. அது நல்ல விடயம் தான் மாறாக ஒரு எதிர்பாராத சூழ் நிலையில் நாம் தோல்வியைத் தழுவிக் கொள்ள நேரிட்டால் அப்போது என்ன நடக்கப்போகிறோம் என்பது மிக மிக முக்கியம். வெற்றிகளை விடவும் தோல்விகளே நம்மை புடம் போட்டு நிமிர்த்த உதவுகின்றன. ஒரு முயற்சியில் இறங்கும் நாம் வெற்றியை எவ்வளவு தூரம் எதிர்பார்க்கிறோமோ அது போல தோல்வி ஏற்படக் காரணமாகக் கூடிய நிலைமைகளும் குறுக்கிடுவதற்கு வாய்ப்பு உண்டு. என்பதை மனங்கொள்ள வேண்டும். வெற்றி பற்றிய கனவோடு மிதந்து கொண்டிருக்கும் ஒருவர் தோல்வியைக் கண்டு உடைந்து போவது மனமுதிர்ச்சியற்ற ஒரு செயல் முயற்சியில் ஈடுபடும் ஒருவர் வெற்றியையும் தோல்வியையும் எதிர்பார்க்கும் மனப்பக்குவத்தை தன்னுள் வளர்த்துக் கொள்ளல் அவசியம் - தோல்வி என்பது மீட்சியற்ற நிலைமையல்ல நம்பிக்கை உடையவர்களுக்குப் பாதைகள் காத்துக் கிடக்கின்றன. தனது முயற்சியில் தோற்றுவிட்ட தோல்விக்கான காரணத்தைக் கண்டறிந்து தனது தவறு எதுவோ அதனை மன உறுதியோடு எதிர் கொண்டு தனது முயற்சியைத் தொடர்ந்த பல பேரும் வாழ்க்கையில் உச்சமான வெற்றிகளை அடைந்து இருக்கிறார்கள். எமது ஆற்றலையும் உழைப்பையும் முழுமையாக நம்பும் போது வெற்றி நம்மைத் தேடிவரும். ■

> பிறகு பிறகு சண்டையள் துவங்கி நாங்களும் நாடுகாண் பயணங்களை மேற்கொண்டு அலைஞ்சு திரியக்க லாம்பெண்ணையை பத்து ரூவாக்கும் வன்னி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவுக்கெல்லாம் கிடைக்காமப்போய் அதுபாட்டில விக்கிறவன் சொன்ன விலைக்கு வாங்குறவன் வாங்கி பத்தவைச்சு காலம் போட்டுது. எட சொன்னா நம்ப மாட்டியள் லாம்பெண்ணை அந்தநேரம் ஒரு சகல கலா வல்லவனா இருந்தார்.

◒ தமிழ்க்கவி




# என்ன உலகமடா பரமானந்தா?

“மண்ணெண்ணை வண்டில் மணியடிச்சுக் கேக்குது. தகரக்கானை எடுத்துக்கொண்டு ரோட்டுக்கு ஓடடி” அம்மா கத்துறா நானும் தங்கச்சியுமா ரோட்டுக்கு ஓடினம். முதல்முதலா இப்பத்தான் இலங்கையில லாம்பெண்ணைய வண்டில்ல கொண்டு வருகினம். ஒற்றை மாடு பூட்டின வண்டில் கைவண்டிப் பற்றனில இழுக்கிற ஆளுக்குப்பதிலா ஒரு தொத்தல் மாடு. ஒரு பெரல்ல ஏத்தின லாம்பெண்ணை பரலுக்கு சூத்தில பைப்புப் போட்டு அதில ஒரு கடுக்கன்மாதிரி பூட்டும் தொங்கும்.

அப்ப ஆயிரத்து தொளாயிரத்து அம்பத்துநாலு, உந்த சர்வதேச அலகில்ல. போத்தலும் றாத்தலும்தான். ஒருபோத்தல் லாம்பெண்ணை பன்னெண்டு சேம். ஒரு கான் ஆறு போத்தல். கானில வாங்கினா எழுவத்திரெண்டு சேம். உப்பு ஆறுயெம். கறுப்புச்சீனிதான் எல்லா வீட்டிலும் அது றாத்தல் முப்பேயேம். பெரிய வசதியான ஆக்கள்தான் வெள்ளைச்சீனி வாங்குவினம் நாப்பதுசேம். இப்ப வசதியானவைதான் கறுப்புசீனி வாங்குகினம்.

“காலம் கலிபிரண்டு கத்தரிக்கா மூழ் பிரண்டு போச்சு” அப்ப லாம்பெண்ணை எல்லா வீட்டிலும் தேவை கரண்டில்ல. பட்டணங்கள்ள மட்டும் கரண்டு. வீட்டுக்கு வீடு குப்பிலாம்புகளும் வெங்கல கைவிளக்குகளும்தான். இனி அடுப்பு மூட்ட, வீட்டுக்க பாம்பு வந்திட்டா அதுக்கு எத்த. எண்டு லாம்பெண்ணை கட்டாய தேவைதான். எங்காலும் படிச்ச உத்தியோகம் பாக்கிற வீடுகள்ள அடுப்பில சமைப்பினம். அம்மா சொல்லுவா அது உருசை இருக்காதாம். வெங்காயம் பிடுங்கிற நேரம் இரவில வேலை செய்யவும். வெள்ளாமை வெட்டி சூடு அடிக்கயுக்கயும் பெற்றோல்மக்ஸ் விளக்கு கொழுத்துவினம். பேர்தான் பெற்றோல் எண்டிருக்கு அதுக்கும் லாம்பெண்ணைதான். கலியாணவீடு செத்தவீடுகளுக்கு வாடகைக்கும் அந்த விளக்கை எடுக்கலாம். எல்லாரும் சொந்தமா வாங்க ஏலாது. பின்ன ஒரு விளக்கு நாப்பத்தைஞ்சு ரூவாயாம்.

இருந்தாப்போல லாம்பெண்ணை பயினைஞ்சு சேமாக்கிப் போட்டாங்கள். எங்கட வீட்டில அடுப்பு மூட்ட லாம்பெண்ணை தடை. பயறி மரமாக் கொத்தி சிராயாக்கி கொணந்து வச்சிருப்பார் அப்பு. அந்த மரம் நெருப்புக்குச்ச தட்டி வைக்க பத்தீரும்.

அப்பாத்தை மட்டும் ‘பாழ்படுவார் எண்ணைக்கு விலையேத்திப்போட்டாங்களே’ எண்டு பொழுதுபடுற நேரமெல்லாம் புலம்புவா. அவா எங்க அடுப்பு மூட்டிற. ஒரு சிரட்டைய தந்து ‘போடி போய் வீட்டில கொஞ்சம் நெருப்பெடுத்துக் கொண்டுவா’ எண்டு என்னைக்கலைப்பா நான் நல்ல தணலாத் தட்டிவிட்டு கொணந்து குடுப்பன் மனிசி தன்ர அடுப்ப மூட்டீரும். இப்பிடியே கொஞ்சக்காலம் போச்சு. அம்பத்தெட்டில கலவரமும் வந்து அடங்கீற்றுது. அறுவதாச்சு. இப்ப பையப்பைய சில காசுக்காறர், வோட்டப்பம் வாங்கி தோட்டத்துக்கு இறைக்க வெளிக்கிட்டினம். அதுக்கு ஒரு பக்கம் பெற்றோல விட்டு ஸ்ராட் ஆக்கிற்று. பிறகு லாம்பெண்ணைக்கு விடுவினம். லாம்பெண்ணை எழுவத்தைஞ்சு சதமாகிற்றுது. ஆனா அது பெரிசா உறைக்கேல்ல. என்னண்டா தண்ணி இறைக்கிற வேகம் அப்பிடி.

ஆச்சா படிப்படியா ஒருரூவாயத் தொடாம எட்டி ஒருரூவா பத்துச்சேமா லாம்மெண்ணையார் போயிற்றார். இப்ப வீட்டுக்கு வீடு பெற்றோல் மக்ஸ் என்கிற காஸ்லைற் வந்திட்டுது. அறுவத்து நாலுக்கும் பிறகா ச்சைக் இல்ல எழுவதுக்கு கிட்டத் தட்டவா கிலோவும் மீட்டரும் வந்திட்டுது. ஆனா சனம் அதை பெரீசா பின்பற்றயில்ல. மண்ணெய்யோட உழவுமிசினுகளும் வந்திட்டுது. கொஞ்சம் முதலாளிமார் டீசல் காருகளும் வாங்கி தெருவழிய விட்டாச்சு. நாலாம் பேருக்கும் தெரியாம லாம்பெண்ணை பங்கார் பரணில போய் ஏறிட்டுது. எண்ணைக்கானுகளெல்லாம் விட் டாச்சு ஏனெண்டா லீட்டரில கான் ஒத்துக் கொள்ளயில்ல.

எழுவதுகளின்ர தொடக்கத்தில தான் பிளாஸ்டிக்கின்ர பாவனை எங்கட ஊருக்கை கிருமிநாசினியளோட வந்திச்சு. அந்த மருந்து முடிய அதை கழுவிப்போட்டு அதில லாம்பெண்ணை வாங்கினமா அப்ப லாம்பெண்ணைக்கு கூப்பன் முத்திரை எழுவத்தைஞ்சு சதம்தான். ஆனா எந்த சங்கக்கடை மனேச்சரும் தன்ர நெஞ்சத் தொட்டு சொல்லட்டன். லாம்பெண்ணை முத்திரைக்கு சாமான் குடுத்தநான் எண்டு. அந்த முத்திரை கணக்கில வராம வெட்டி ஒதுக்கிருவாங்கள் நாங்களும் போனாப் போகுது எழுவத்தைஞ்சு சேம்தானே எண்டு விட்டிருவம் மாசக்கடைசியில அவங்களுக்கு ஒரு பாட்டிவைக்க அந்தக்காசு வந்திடும். பின்ன ஆயிரம் முத்திரையில எழுவத்தைஞ்சு சேம் வந்தா எவளவு.

பிறகு பிறகு சண்டையள் துவங்கி நாங்களும் நாடுகாண் பயணங்களை மேற் கொண்டு அலைஞ்சு திரியக்க லாம்பெண்ணை பத்து ரூவாக்கும் வன்னி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவுக்கெல்லாம் கிடைக்காமப் போய் அதுபாட்டில விக்கிறவன் சொன்ன விலைக்கு வாங்குறவன் வாங்கி பத்தவைச்சு காலம் போட்டுது. எட சொன்னா நம்ப மாட்டியள் லாம்பெண்ணை அந்தநேரம் ஒரு சகல கலா வல்லவனா இருந்தார். பின்ன கார், லொறி, பஸ், மோட்டச்சயிக்கிள் எல்லாம் மண்ணெண்ணை தானே சூப்பியில பெற்றோலக்காட்டி ஏமாத்திப் போட்டு ஓடவைச்ச நாங்கள்தானே. ஆனா அதின்ர விலையோ தாக்கமோ எங்கட தோலுக்கயும் பூரயில்ல ஐநூறு ரூவாக்கு லாம்பெண்ணைவாங்கி மோட்டச்சயிக்கிளுக்க ஊத்தி ஓடின ஆக்கள் நாங்கள்.

என்னடா சனம் கொரோனாவுக்க வெளியில வராம கொடுங்கிக் கொண்டு கிடக்க. ராராவா லாம்பண்ணை யார் தொங்கல்ல போட்டாராம் இப்ப அவர்ற சகோ தரங்களும், அதான் பெற்றோல் டீசலுகளும் கூடத்தான் தொங்கல்ல நிக்கினம். ஒட்டுமொத்தமா உற்பத்தியே படுத்திட்டுது. எரிபொருள ஏத்தி..இல்ல ஏத்தி.. எட ஆற்றா இப்ப பயணம்போற வசுவோடுறவனும் வத்தலாப்போய் கிடக்கிறாங்கள். எட ரம்ழானுக்கு போட்ட விடுமுறை அடுத்த ரம்ழான் கண்டுதான் திறப்பாங்கள் போலகிடக்கு என்ன ஆதாரத்தில கைய வச்சா ஆரென்ன செய்ய ஏலும் எண்டு நினைக்கிறியளோ..எப்பிடியப்பா போகுது அரசியல். ங..வெறும்பானைக்க அகப்பை போட்டுத்துளாவி.. என்னத்தை விறாண்டப்போகினை. ■

---

◒ ஆபூர்வன்

# பழி தீர்க்கும் வன்மச் சுவறல் “க(ை)ள”

பயிர்ப்பரப்பிலிருந்து அப்புறப் படுத்தப்பட வேண்டியதாக “களை” அமைகின்றது. மேட்டுக்குடி மனப்பாங்கும் வலியுணரா வன்மமும் பொருந்திய ஒருவனிடமிருக்கும் நச்சுக் களையினை அகற்ற முனைகின்ற இன்னொரு மனிதனின் வன்மமாக ‘கள’ திரைப்படம் காணப்படுகின்றது. எடுத்துக் கொண்ட விடயத்திற்கு நியாயம் சேர்க்க நீள் மோதுகையினைத் திரைப் படத்தின் அரைப்பாகத்தில் அமைத்து இயக்குநர் அதிர்ச்சியூட்டியுள்ளார். திரைச்சுவைஞனின் சகிப்புத்தன்மை குறித்தெல்லாம் சிந்திக்காது சண்டையினை மாறுபட்ட கோணங்களில் படமாக்கிய துணிவிற்காக இயக்குநர் Rohith பாராட்டப்பட வேண்டியவர். எனினும் நடப்பியலுக்குப் பொருந்தாத வகையிலும் தர்க்க மீறல்களோடும் பல காட்சிகள் அமைந்திருப்பது நெருடலைத் தருகின்றது. குருதி கொப்பளிக்கும் வன்முறைச் சட்டகங்களால் ‘கள’ நிரப் பப்பட்டுள்ளது. சராசரிப் பார்வையாளனிடம் ஒவ்வாமையினை உண் டாக்கும் காட்சிகளும் ஏராளம் உள்ளன.

நாயகன் மது வெறியிலே ஆதிவாசி இளைஞனின் நாயை வெடிவைத்து கொன்றுவிடுகிறான். இதனால் நாயகனின் நாயைக் கொல்லச் சொல்கின்ற எதிர் நாயகனுக்கும் நாயகனுக்குமான மோதுகையே திரைப்படத்தின் கதையாகும். நாயைக் கொன்றதற்காகவா இத்தனை வன்மம்? என்று பொதுப்புத்தியிலே தோன்றலாம். வணிக மதிப்போடு வெளிநாட்டு நாயிடம் அன்பு செலுத்தும் நாயகன் போன்று நமக்கும் உள்ளூர் நாய் அற்பமாகத் தெரியலாம். ஆனால் அந்த எளிய மனிதனுக்கும் நாய்க்குமானஅன்பினை, இழப்பின் வலியினை பொதுத்தராசினால் எடை போட முடியாது.

உண்மைச் சம்பவம் ஒன்றின் பிரதியாகவே ‘கள’ அமைகின்றது. நாயகன் எதிர் நாயகன் என்ற விம்பங்களை உடைத்து மாற்றிப் போடுகின்ற மந்திர ஜால நுட்பத்தினை இறுதியுச்சக் காட்சி நிகழ்த்துகின்றது. “என்னோட வலி என்ன வென்று உனக்குப் புரியணும்! இப்ப புரிஞ்சிருக்குமே” என்ற வசனம் வெளிப்படும் தருணம் அதிர்வினை நிகழ்த்துகின்றது. ருவினோ தோமஸ் மற்றும் சுமேஸ் அகிய இருவரது அளிக்கைகளும் சிறப்பாக உள் ளன.



நாயக விம்பத்தினை ஒதுக்கி வைத்து விட்டு துணிவோடு நடித்த ருவினோ தோமஸ் பாராட்டுக்குரியவரே! ஒளிப் பதிப்பாளர் Akhil George புருவங்களை உயர்த்த வைத்துள்ளார். ‘கள’ மலையாள சினிமாவின் மற்றுமொரு மாறுபட்ட முயற்சி! ■

# மாகாணசபை அதிகாரமும் இரட்டைமுக அரசியலும்

கருணாகரன்

“மாகாணசபையை நிராகரிக்கும் அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டோர், மாகாணசபைத் தேர்தலில் ஆர்வமாக இருப்பதும் அந்த அதிகாரத்துக்குப் போட்டியிடுவதும் எதற்காக? சனங்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொண்டு தாங்கள் இன்னொரு விதமாக செயற்படுவது ஏன்? இதைப்பற்றிச் சனங்கள் கூட அறியாமல் இவர்களுடைய ஏமாற்றுகளுக்கு (பம்மாத்துகளுக்கு) எடுபடுவது எதற்காக? மாகாணசபையை ஏற்றுக் கொள்ளாத அரசியல் ஆய்வாளர்கள் கூட மாகாணசபைத் தேர்தல் என்று வந்து விட்டால் இந்தத் தரப்புகளின் பக்கம் நின்று கூவுவது ஏன்” என்ற கேள்விகளை நீண்டகாலமாகவே எழுப்பிக் கொண்டிருக்கிறார் நண்பர் ஒருவர். அவருடைய கேள்விகள் நியாயமானவையே! ஆகவே இதைப்பற்றி நாம் பொது வெளியில் சற்று விரிவாகப் பேசியே ஆக வேண்டும். அதற்கு முன் இந்த நண்பரைப்பற்றியும் அவருடைய நிலைப்பாட்டைப் பற்றியும் ஒரு சிறிய குறிப்பு.

இந்த நண்பர் மாகாண சபையை 1987 லேயே ஏற்றுக் கொண்டவர். முழுமனதாக அதை ஏற்றுக் கொள்ள முடியா விட்டாலும் ஈழப்போராட் டத்தைப் பொறுத்த வரையிலும் இலங்கைச் சூழலிலும் இதற்கப்பால் உடனடியாக நகர முடியாது என்ற அடிப்படையில் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு ஏற்றவர். இதற்காக அவர் வடக்குக் கிழக்கிலிருந்து அல்லது பலரும் சொல்வதைப்போல தமிழர்





**“ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இதுவரையிலும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. அவர்கள் “ஒரு தேசம் - இரு நாடு” என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால் அதிகாரமில்லாத மாகாணசபையில் போட்டியிடுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் மாகாணசபைகளின் கீழுள்ள உள்ளூராட்சி மன்றுக்களுக்கான தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் எதிர்காலத்தில் மாகாண சபைத் தேர்தலிலும் சங்கமிப்பார்கள் என்று நம்பப்படுகிறது. ”**

தாயகத்திலிருந்து வெளியேறி வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டது. அன்று வடக்குக் கிழக்கில் அவருடைய இந்தக் கருத்துக்களை மையப்படுத்திப் பொது வெளியில் யாரும் பேச முடியாத சூழ்நிலை நிலவியது. மாகாணசபையை இந்திய அரசாங்கத்தின் அனுசரணை, ஆசீர்வாதத்துடன் ஏற்றுக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் என்ற மாபெரும் இயக்கமே தாக்குப் பிடித்து நிற்க முடியாத சூழல் இருந்தபோது இந்த மாதிரிச் சாமானியர் ஒருவர் எப்படித் தாக்குப் பிடித்து நிற்க முடியும்? அன்றென்ன, அதற்குப் பின்னான 20 ஆண்டுகளும் அப்படியான இறுக்கமான சூழலே நிலவியது.



ஆனால், இன்று நிலைமை வேறு. எல்லாமே தலைகீழாக மாறி விட்டன. மாகாணசபையை ஏற்றுக் கொள்ளத் தயங்கியோரும் மாகாணசபையை முற்றாகவே மறுதலித்த புலிகளின் வாரிசுகளாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வோரும் மாகாணசபையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிலே போட்டியிடுகிறார்கள். போட்டியிட்டு வெல்லத் துடிக்கிறார்கள். அந்த அதிகாரத்தைப் பெறுவதற்காக ஆவலாதிப்படுகிறார்கள். அது அரை குறை அதிகாரம் என்று சொல்லிக் கொண்டே அந்த அதிகாரத்தின் மூலமாகத் தங்களுடைய அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்காகப் பிரயத்தனப்படுகிறார்கள். பச்சையாகச் சொன்னால் உள்ளொன்று புறமொன்றாகப் பேசி நடந்து கொள்கிறார்கள். மாகாணசபையைத் தங்களுடைய அதிகாரக் கட்டமைப்பு என்ற நம்பிக்கையோடுதான் இதில் கலந்து கொள்ள முயற்சிக்கிறார்கள். இதன் மூலமாக தங்களுடைய நலன்களையும் சலுகைகளையும் பெற்றுக் கொள்ளத் துடிக்கிறார்கள்.

இவர்கள் வேறு யாருமல்ல. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய மக்கள் விடுதலை முன்னணி போன்றவற்றின் தரப்பினரே. இதிலே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இதுவரையிலும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. அவர்கள் “ஒரு தேசம் - இரு நாடு” என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால் அதிகாரமில்லாத மாகாணசபையில் போட்டியிடுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் மாகாணசபைகளின் கீழுள்ள உள்ளூராட்சி மன்றுக்களுக்கான தேர்தலில் போட்டியிட்டதன் மூலம் எதிர்காலத்தில் மாகாணசபைத் தேர்தலிலும் சங்கமிப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இதை அவர்களுடைய தரப்பின் முக்கியஸ்தர்களும் உறுதிப்படுத்துகின்றனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கதையைச் சொல்லவே வேண்டியதில்லை. அது வழமையைப்போல ஒரு கதம்ப அரசியலை மேற்கொள்ளும் அமைப்பு என்ற வகையில் அதனிடம் எதைப்பற்றியும் திட்டவட்டமான - தெளிவான நிலைப்பாடுகளில்லை. எனவே அவர்கள் மாகாண சபையைக் குறி வைப்பதிலும் ஆச்சரியமில்லை. கடந்த தடவை ஆட்சியிலிருந்தபோது - அதிகாரத்திலிருந்தபோது - அவர்கள் நடந்து கொண்ட முறைமைகளையும் போட்ட ஆட்டங்களையும் யாரும் எளிதில் மறக்கவே முடியாது.



அரசாங்கத்துக்கு ஒரு பக்கம் சவால் விட்டுக் கொண்டே அதே அரசாங்கத்திடம் தமக்கான பல சலுகைகளைக் கோரியிருந்தது உட்பட ஏராளம் கூத்துகளும் குத்து வெட்டுகளுமாக ஐந்து ஆண்டுகளைக் கழித்தனர். அந்த ஐந்து ஆண்டுகளும் குப்பைக் கூடையில் போடக் கூடிய சமாச்சாரங்களே நடந்தன. அப்போது நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளில் 90 வீதமும் கால நகைப்புக்குரியன. அதில் முக்கியமானது, மாகாணசபை உறுப்பினர்களுக்கான வாகன உரிமப்பத்திரத்துக்கான கோரலாகும்.



இதையெல்லாம் சனங்களும் பொருட்படுத்துவதில்லை. அதனால் இதைத் தமக்கு வாய்ப்பாக எடுத்துக் கொண்ட மேற்படி தரப்புகள் மாகாணசபையை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. இவர்களில் யாருக்கும் வெட்கமில்லை. அப்படி வெட்கப்படுவதாக இருந்தால் இவர்கள் புலிகளின் தொடர்ச்சி தாங்கள் என்றோ புலிகளின் பிம்பமாகத் தாமே உள்ளோம் என்றோ காட்டிக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் புலிகள் இறுதிவரையில் மாகாணசபையை ஏற்றுக் கொள்ளவே இல்லை. அப்பொழுது வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபையே இருந்தது. அதனையே முற்றாகவே நிராகரித்தனர். 1990 தொடக்கம் பின்னர் இலங்கை அரசாங்கத்துடன் நடந்த அத்தனை பேச்சுவார்த்தைகளிலும் அவர்கள் மாகாணசபையைப் பற்றிப் பேசவேயில்லை. அதனுடைய அதிகாரப் போதாமைகளைக் குறித்து ஒரு சொல் கூடப்பிரஸ்தாபிக்கவில்லை. அதைக் கடந்த ஒரு தீர்வை - அதிகாரத்தையே அவர்கள் கோரிநின்றனர்.



ஆனால் அவர்கள் மாகாணசபையை முழுதாகப் பயன்படுத்தினார்கள். மாகாணசபையை தமது வலுவின் மூலமாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து இயக்கினார்கள். இது சட்டத்துக்கும் அப்பாலான ஒரு யதார்த்தமாக இருந்தது. இதை மறுக்க முடியாத நிலையில் அரசாங்கமும் இருந்தது. அதாவது தெரிந்தும் தெரியாததைப்போல இந்த விடயத்தில் அரசாங்கம் நடந்து கொண்டது. வேறு வழியிருக்கவில்லை. அது வேறு நிலைமை. வேறான சூழல்.

இப்போதுள்ள நிலைமையும் சூழலும் வேறு. இதில் அந்த மாதிரியாக விளையாட்டுக் காட்ட முடியாது. அப்பொழுது மாகாணசபைக்கான தேர்தலையே வடக்குக் கிழக்கில் நடத்த முடியாமலிருந்தது அல்லவா! ஆனால் பின்னாளில் இந்த மாகாணசபையை இரண்டாக உடைத்து, அவற்றுக்குத் தனித்தனியாகத் தேர்தல் வைக்கப்பட்டது. இரண்டு தேர்தல்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போட்டியிட்டது. தேர்தலை நடத்திய அரசு அதன் அதிகாரங்களை நடைமுறை ரீதியாகக் குறைத்தது. இப்பொழுது மாகாணசபையின் கீழ் அடங்கும் கல்வி, மருத்துவம் போன்றவற்றிற் கூட கை வைக்கத் தொடங்கியுள்ளது. ஆக தேர்தலே நடத்த முடியாமலிருந்த மாகாணசபையைப் புலிகள் தமது தேவைக்குப் பயன்படுத்தினார்கள். ஓரளவு வினைத்திறனோடு இயங்க வைத்தனர். தேர்தல் நடத்தப்பட்டுத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளோடு இயங்கும் மாகாணசபையில் அதிகாரங்கள் பிடுங்கப்படுகின்றன. மாகாணசபை நிர்வாகமும் சீரழிந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் நாம் மாகாணசபைத் தேர்தலை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

ஏனென்றால்? அதுதான் நாங்கள். அதாவது ஒரு பக்கம் மாகாணசபையை நிராகரித்த - அதற்கு மேல் அதிகாரத்தைக் கேட்கும் புலிகள். மறுபக்கம் மாகாணசபையென்ன மாவட்ட சபையோ உள்ளூராட்சி சபையோ கூடக் கிடைத்தால் போதும் என்று நடந்து கொள்ளும் எலிகள்.

இந்த புலி வேசமும் எலி நடத்தையும்தான் நம்முடைய நண்பருக்கு ரத்தக் கொதிப்பை (BPI) ஏற்றுகிறது. இந்த இரட்டை முக அரசியலே இன்றைய தமிழ்த்தேசிய அரசியலாகி வளர்ந்து கொண்டிருக்கிறது. இதற்குள்ளே ஏராளம் உட்சிதைவுகள், சாதியென்றும் பிரதேச வாதமென்றும் இனவெறுப்பென்றும் பால் ஒடுக்கு முறை என்றும் வர்க்க வேறுபாடுகள் என்றும் பலப்பலவாக உள்ளன.

ஆனால் இதிலே உள்ள வேடிக்கையும் கேவலமும் என்னவென்றால் அன்று (1987 இல்) இணைந்த மாகாணசபையை ஏற்றுக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் இப்போதும் துரோகிப் பட்டியலின் கீழே வைக்கப்பட்டிருப்பதுதான். இதைத் தமிழ் ஊடகங்களும் தமிழ் அரசியல் ஆய்வாளர்களும் தமிழ்ப் பெருமக்களும் தமிழ் அரசியற் பரப்பும் மிகக் கச்சிதமாகச் செய்கின்றன.

இன்றுள்ள அரசியற் தரப்புகளிலே மாகாணசபையை வினைத்திறனுடன் செயற்படுத்தக் கூட அனுபவமும் அக்கறையும் அரசியல் ஒழுக்கமும் வினைத்திறனும் உடைய தரப்பு ஈ.பி.ஆர்.எல்.எவ் மட்டும்தான். அவர்களுடைய கடந்த கால அரசியல் குறித்த விமர்சனங்கள் யாருக்கும் இருக்கலாம். அப்படியென்றால் எல்லோருக்கும் ஒரு மோசமான கடந்த காலம் உண்டு என்பதை யாரால் மறுக்க முடியும்? ஆகவே ஈ.பி.ஆர்.எல்.எவ்வைப் புறக்கணித்து விட்டு மாகாணசபையைப் பற்றி நாம் பேச முடியாது. இங்கேயும் ஒரு சிக்கல் உண்டு. எந்த ஈ.பி.ஆர்.எல்.எவ்வைப் பற்றி நீங்கள் சொல்கிறீர்கள்? என்ற கேள்வி இங்கே எழும்.

நிச்சயமாக.



பத்மநாபா தலைமையில் 1987 இல் வடக்குக் கிழக்கு இணைந்த மாகாணசபையைப் பொறுப்பேற்ற ஈ.பி.ஆர்.எல்.எவ் இன்று இரண்டாகி விட்டது. ஒரு அணிக்கு சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமை தாங்குகிறார். சட்டபூர்வமாக இந்தத் தரப்பே ஈ.பி.ஆர்.எல்.எவ் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மற்ற அணி சுகு ஸ்ரீதரன் தலைமையிலானது. இது ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணி என்ற பேரில் இயங்கி, இப்பொழுது தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என்ற பேரில் இயங்குகிறது. இவை இரண்டும் ஒன்றிணையுமானால் நிலைமை வேறு. இப்போதுள்ள நிலையில் ஆகக் குறைந்தது இந்த இரண்டு தரப்பில் ஒன்றுக்கே வரலாற்றுத் தகைமையும் நிகழ்காலத் தகைமையும் உண்டு. இதைப்பற்றி ஈ.பி.ஆர்.எல்.எவ்வினர் சிந்திக்க வேண்டும். கூடவே தமது கடந்த காலத்தை மீள் பரிசீலனை செய்து புதுப்பித்துக் கொள்வது அவசியம். முக்கியமாக சுரேஸ் பிரேமச்சந்திரன் தரப்பு இந்த வாய்ப்பை மற்றவர்களுக்குக் கொடுத்து வீணாக்காமல் ஈ.பி.ஆர்.எல்.எவ் தரப்பு எடுப்பதைப் பற்றிச் சிந்திப்பது நல்லது.

ஏனையவற்றுக்கு அடிப்படைத்தகுதியே இல்லை. ஆனால் அவைதான் வாலாட்டுகின்றன. அவைதான் வரலாற்றில் தப்புத் தாளம் செய்து ஒட்டு மொத்தக் குத்தகையையே எடுக்கின்றன. இதை இனங்காண வேண்டிய பொறுப்பு மக்களுக்குரியது. ■

# இலங்கைத் தமிழரின் நலனும் இந்தியாவை கையாள வேண்டிய தேவையும்

சி.அ.யோதிலிங்கம்

இலங்கைத்தீவு இந்தியாவுக்கு கீழே 18 மைல் தொலைவில் இருக்கின்ற தீவு. இந்தியா மிகப்பெரிய நாடு அதே நேரம் பிராந்திய வல்லரசு. வரலாற்று ரீதியாகவே இந்தியாவின் தலையீடு இலங்கையில் இருந்து வந்திருக்கிறது. மன்னர் ஆட்சிக்காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த அரசியல் தலையீடு இலங்கைக்கு தொடர்ச்சியாக இருக்கிறது. இந்தியாவைப் பாதுகாக்கும் நோக்கில்தான் பிரித்தானியா இலங்கையையும் கைப்பற்றியதாகக் கருத்து நிலவுகிறது. பிரித்தானியாவினுடைய பாதுகாப்புக் கொள்கையின் படி இலங்கைத்தீவு இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள்தான் இருக்கிறது. இலங்கைத்தீவில் வருகின்ற நெருக்கடிகளும் அந்நியத் தலையீடுகளும் இந்தியாவைப் பாதிக்கும் எனும் கருத்தும் உள்ளது. சுதந்திரமடைந்த பின்னரும் கூட இந்தியாவினுடைய பாதுகாப்புக் கொள்கையின் படி இலங்கைத் தீவு இந்தியாவினுடைய பாதுகாப்பு எல்லைக்குள்தான் இருக்கிறது. அன்று இருந்த கல்வியியலாளர்கள் பலர் தலைவர் நேருவுக்குக் கூறிய ஆலோசனை " இலங்கைத் தீவை தனி நாடாக வைத்திருக்க வேண்டாம். இந்தியாவினுடைய மாநிலமாக மாற்றுங்கள்" என்பதாகவே இருந்தது. நேரு அதற்கு கூறிய பதில் "இலங்கை இந்தியாவுக்கு எதிராகப் போகாதவரையில் தனி நாடாகவே இருக்கட்டும். மீறிப் போகும் போது பார்த்துக்கொள்ளலாம்" என்பதாகவே இருந்தது.

இலங்கைத் தீவை பொறுத்த வரையில் இந்தியாவிற்கு இரண்டு பிரச்சினை உள்ளது. ஒன்று, கேந்திரப் பிரச்சினை, இலங்கைத் தீவு தூர கிழக்குக்கான போக்குவரத்துப் பாதையில் ஒரு கேந்திர இடத்தில் இருப்பதும் இயற்கைத் துறைமுகமாக திருகோணமலை இருப்பதும் முக்கியமானது. இது இந்தியாவின் பாதுகாப்போடு சம்பந்தமுடையது என்பது குறிப்பானது.

இரண்டாவது, தேசிய பாதுகாப்பு பிரச்சினை கேந்திரப் பிரச்சினையை விட முக்கியம். இந்தியாவைப் பொறுத்த வரையில் இந்தியாவிலிருந்து 18 மைல் தொலைவில் இலங்கை இருப்பதால் தலை மன்னாரிலிருந்து ஒரு செல் அடித்தாலும் இராமேஸ்வரத்தில் போய் விழும்நிலை உண்டு. அது இந்தியாவிற்கு ஒரு நெருக்கடி. இந்தியாவின் கீழ் எல்லை மட்டும்தான் கடலாக இருக்கிறது. மற்றைய பகுதிகள் நிலம் சார் எல்லையாகவே உள்ளது. இதில் மேற்கில் பாகிஸ்தானுடனும் இமயமலையைத் தாண்டினால் சீனாவுடனும் பிரச்சினையை எதிர் கொள்ளும் நிலையில் வடகிழக்கு மாநிலங்கள் பன்நாட்டுப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றன. இங்கு பாதுகாப்பு பிரச்சினை இருப்பதனால் இந்தியாவின் பாதுகாப்பு மையங்களை ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகிய பகுதிகளில் வைத்திருக்கிறது. இதனால் இந்தியாவுக்கு எதிரான சக்திகள் இலங்கையில் நிலைகொள்ளுமாயின் இந்தியாவின் பாதுகாப்பு மையங்கள் ஆபத்தினை எதிர்நோக்க வேண்டி வரும் என்பதால் இலங்கையை அவதானித்துக் கொண்டுதான் இருக்கும். இலங்கையில் நடைபெறும் பிரச்சினையைத் தனது சொந்த நாட்டுப்பிரச்சினையாகத் தான் பார்க்கும். தனக்கெதிரான சக்திகள் இலங்கையில் ஊடுருவுவதனையும் ஒருபோதும் சகித்துக் கொள்ளாது.

இத்தகைய நிலைகளைக் கவனத்தில் கொண்டுதான் மேற்குலக நாடுகள் இலங்கையைக் கையளும் போது இந்தியாவுக்கூடாக அல்லது இந்தியாவின் முதன்மை ஸ்தானத்தினை ஏற்றுக்கொண்டுதான் கையாள முனைகின்றன. 2002 ஆம் விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதான நடவடிக்கையினை முன்னெடுத்துவந்த எரிக்சொல்கெய்ம் இலங்கைக்கு வரும் போதெல்லாம் இந்தியா சென்று விடயங்களைத் தெளிவுபடுத்திச் சென்றமை இதற்கு சரியான எடுத்துக்காட்டாகும். இது இந்தியா விரும்பாத எதனையும் மேற்குலகம் செய்ய முனையாது என்பதனை வெளிப்படுத்தும் ஒன்றாகத்தான் அவதானிக்கவேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவினுடைய முக்கியத்துவம் தெரியும். இதனால் இலங்கை இந்தியாவைச் சமாளித்துச் செயற்படும் இராஜ தந்திர அணுகுமுறையினைப் பின்பற்றி வந்திருந்தமையினை நாங்கள் கடந்தகால வரலாறுகளிலிருந்து அறிந்து கொள்ளமுடியும். இலங்கையில் ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்,ஜெயவர்த்தன அமெரிக்கா சார்ந்து செயற்பட்டதோடு அமெரிக்காவின் முக்கியமான தளங்கள் இலங்கையில் அமைப்பதற்கு அனுமதி வழங்கியமையுமே, இந்தியா ஈழ விடுதலை அமைப்புக்களை வளர்த்ததும் தனது நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்தியா இலங்கையின் விருப்பத்தினையும் மீறி இலங்கை இந்தியா ஒப்பந்தத்தைத் மேற்கொண்டதுமாகும். இது தொடர்பில் ஊடகவியலாளர் ஜே.ஆரை கேட்டபோது "இந்தியா வலது கரத்தை ஓங்கிக் கொண்டு வந்தது. நான் வலது கரத்தை பற்றிக் கொண்டேன். இடது கரத்தையும் ஓங்குமா எனப் பயந்தேன்.இரண்டு கரங்களையும் பற்றிக் கொண்டேன். இந்தியப் பிராந்தியத்தின் பொலிஸ்காரன் இந்தியாவுக்கு எதிராக எம்மால் எதுவும் செய்ய முடியாது. இந்தியா நினைத்தால் 24 மணித்தியாலத்திற்குள் இலங்கையைக் கைப்பற்றி விட முடியும்" எனக் குறிப்பிட்டதிலிருந்து இந்தியாவின் ஆதிக்க நிலையினைப் புரிந்துகொள்ள முடியும்.







இந்தியா தமிழர்களின் தனிநாட்டுக்குரிய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்குப் பிரதான காரணம் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் இலங்கைத் தீவின் ஒரு பகுதி இந்தியாவிற்கு எதிராக மாறிவிடும். அது இந்தியாவினுடைய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். இதனால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்திற்கு அமைவான அதிகாரத்தினைத்தான் தமிழர்களுக்குப் பெற்றுத்தர முனைப்பாக உள்ளது. அதற்குக் காரணம் இந்தியாவின் மாநில அதிகாரத்திற்குக் குறைந்த அதிகாரத்தினைப் பெற்றுக்கொடுப்பதோடு, இலங்கை தனது ஆதிக்கத்திற்குக் கீழ் இருக்கின்றது என்பதற்குரிய சட்ட ஆவணமாக 13 ஆவது திருத்தம் அமைவதனாலுமாகும். பொதுவாக இலங்கை இந்தியா ஒப்பந்தத்தினை வலுப்படுத்துவதற்கு மாகாணசபையினை செயற்படுத்துவதையே நோக்கமாக்கக் கொண்டுள்ளது.

**"இந்தியா தமிழர்களின் தனிநாட்டுக்குரிய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு பிரதான காரணம் தனிநாட்டுக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் இலங்கைத் தீவின் ஒரு பகுதி இந்தியாவிற்கு எதிராகப் போய்விடும். அது இந்தியாவினுடைய தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். இதனால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்திற்கு அமைவான அதிகாரத்தினைத்தான் தமிழர்களுக்குப் பெற்றுத்தர முனைப்பாக உள்ளது."**

எப்படியிருப்பினும், இத்தகைய சூழல் இந்தியாவை இலங்கைத் தமிழர்கள் சாதகமாக பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு உள்ளமை முக்கியமாக குறிப்பிடத்தக்கது. இலங்கையில் சீனா கொண்டுள்ள ஆதிக்கத்தினால் இலங்கையை இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டிய தேவை, தென்னகத்து இந்தியத் தமிழர்கள் இலங்கைத் தமிழர் தொடர்பில் கொண்டுள்ள தீவிரத் தன்மை போன்றவை விரும்பியோ விரும்பாமலோ ஈழத் தமிழர் தொடர்பில் இந்தியாவைச் சிந்திக்க வைத்துள் ளது. இதன் வெளிப்பாட்டாகவே கடந்த முறை ஜெனீ வாவில் இந்தியத் தூதுவர் முன்வைத்த கருத்தை நோக்கலாம். அவர் தெளிவாக முன்வைத்த கருத்தானது இலங்கையில் இறைமையும் ஒருமைப்பாடும் மேற் கொள்ளப்பட வேண்டும். தமிழ் மக்கள் சமத்துவமாக மதிக்கப்பட வேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது.

இத்தகைய சந்தர்ப்பத்தினை இலங்கைத் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உண்மையில் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் மேலும் வலுப்படும்போது தனக்கு இலங்கையில் எந்த வகையான செல்வாக்கும் இல்லை எனும் நிலையில்தான் இலங்கைத் தமிழர்களின் நலன் தொடர்பில் இந்தியா சிந்திக்கத் தொடங்கும். ஆனாலும் இந்தியாவைப் பயன்படுத்தி எமது நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு சில காரணிகள் துணையாக இருப்பதும் கவனத்துக்குரியது.

**ஒன்று,** இன்றைக்கு இலங்கையில் சீனாவின் செல்வாக்கு என்பது எவருமே அகற்ற முடியாத அளவுக்கு வலுவானது, எந்த அரசாங்கம் வந்தாலும் அப்படியே நிலைத்திருக்க கூடிய நிலைமைக்கு வந்துவிட்டது. இலங்கையில் எந்த அரசாங்கம் வந்தாலும் சீனாவின் ஆதிக்கநிலையினைத் தகர்க்க முடியாது. இது இந்தியாவிற்குப் பெரிய பிரச்சினையான விடயம். விடுதலைப் புலிகளை தோற்கடித்த பிறகு இலங்கைத் தீவு தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வரும் என்று இந்தியா நினைத்திருந்தது. மாறாக அது சீனாவின் கட்டுப்பாட்டுக்குள் சென்று விட்டது. இத்தகைய நெருக்கடியை இந்தியா சமாளிப்பதற்கு சமநிலைப்படுத்தல் தேவையாக உள்ளது. அதற்கு அவர்களுக்கு இருக்கின்ற ஒரு வழி இலங்கைத் தமிழர்களை தனது கைக்குள் கொண்டுவருவதும் அதற்காக அவர்களின் நலனில் அக்கறை கொள்வதுமாகும். தமிழ் மக்களுடைய விவகாரத்தை மேலே கொண்டு வருவதனூடாகத்தான் இந்த விடயத்தினைக் கையாளலாம் என்பதில் இந்தியா தெளிவாக இருக்கிறது. ஆனால் இத்தகைய சூழலை தமிழ் தரப்பு கவனமாகக் கையாள வேண்டும். இந்த இடத்தில் இந்தியாவின் எடுபிடியாகவும் போகக் கூடாது, அதேவேளை இந்தியாவை எதிரியாக்கிவிடவும் கூடாது. இதற்கு தமிழ் தரப்பு சுயாதீ னமாக இருக்க வேண்டும். அவ்வாறு சுயாதீனமாக இருப்பதன் மூலமும் இந்தியாவின் மையப்புள்ளியைக் கண்டடைந்து அதனைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலமும் இந்தியாவுக்கு அழுத்தத்தைக் கொடுப்பதன் மூலமும் தமிழர் தரப்பு உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கலாம்.

**இரண்டாவது,** மலையக மக்களைக் கவனத்தில் எடுத்தல். இன்று இலங்கைத் தீவின் புவிசார் அமைப்பு நிலையில் அதன் அரசியலில் மலையக மக்களுக்கும் நிறைந்த பங்கு உண்டு. தமிழ் மக்களுடைய ஆதரவு இந்தியாவிற்குக் குறைந்து இருக்கும் நிலையில் மலையக மக்களின் ஆதரவு அவர்களுக்குத் தேவையாகியிருக்கிறது. இதன் வெளிப்பாடுதான் நரேந்திர மோடி மலையக மக்களைச் சந்தித்தமையும் அவர்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்குவது தொடர்பில் சிந்தித்தமையும் ஆகும். இந்நிலையில் மலையக மக்களுடனான உறவினை வளர்த்துக் கொள்ள முனைப்புக் கொள்வதோடு, இரண்டு தரப்பின் நலன்களையும் உள்ளடக்கி கூட்டுக் கோரிக்கைகளை வைப்பதன் ஊடாக இந்தியாவினை கையாள முனையலாம்.


(16 ஆம் பக்கம் பார்க்க)

# திருவள்ளுவரும் அறிவியலும்

இ.சு. முரளிதரன்


மீநுண்ணமைப்பானது நனோ என அழைக்கப்படுகின் றது. ஒரு நிகற்புதத்தில் (Billion) ஒரு பகுதியாகும். ஏதேனும் ஒன்றினது உரு, பண்பு, சேகரம் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்ட நுண்ணிய அமைப்பாக்கத் தொழினுட்பமாகும். தாமரை இலைகள் தூசு படியா மல் தூய்மையோடு இருப்பதைப்





பார்த்திருக்கின்றோம். இலை மேற்பரப்பிலே நீர் வழுகி ஓடுவதையும் கண்டு வியந்திருக்கின்றோம். சாதாரண மெழுகுத் தன்மைதான் இதற்கான காரணமெனக் கூறிய அறிவியல், பின்னர் மெய்மையினைக் கண்டறிந்தது. நனோ அளவான மேடுகள்(பலாப்பழ மேற்பரப்பினைப் போல) மெழுகுப் படையாக அமைந்திருப்பதாலேயே நீரால் இலையின் மேற்தளத்தில் ஒட்ட முடியவில்லை.

சுவரிலே பல்லி நகர்ந்து மேற்புறமாகச் செல்வ தையும் பார்த்து ஆச்சரியப்பட்டிருப்போம். பல்லி






யின் பாதத் திலுள்ள பசைத்தன்மையே இவ்வாறு பய ணிக்கக் காரணமென ஆரம்பத்திலே நம்பி னோம். பின்னர்தான் மெய்ப்பொருளை அறிந்து கொண் டோம். பல்லி கீழே விழாமல் நகரவேண்டுமென் றால், பல்லியின் கால்களுக்கும் சுவருக்குமான கவர் விசையானது பல்லியின் நிறையிலும் அதிகமாக இருக்க வேண்டும். பல்லியின் பாதங்களில் அமைந் துள்ள நனோ அளவான குஞ்சங்களே இத்தகைய கவர் விசையினை வழங்குகின்றன. எப்பொருளாக இருப் பினும் அதன் தன்மையினை நன்கு உணர்ந்து மெய்ம் மையினை இனங்காண்பதே அறிவெனத் திருவள்ளு வர் 355 ஆவது குறட்பாவிலே வலியுறுத்துகின்றார். நவீன அரசியலுக்குச் சாலவும் பொருந்திப் போகின்ற கருத்தியலை அக்குறள் வெளிப்படுத்துகின்றது.

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு "

பிற அங்கிகளில் தங்கி வாழுகின்ற அங்கியாக ஒட் டுண்ணி அமைகின்றது. ஒட்டுண்ணிகளுக்குத் தேவை யான ஊட்டங்களை வழங்குகின்ற அங்கியானது ஓம் புயிரி அல்லது விருந்து வழங்கி எனப்படும். வேப்ப மரமானது குருவிச்சை, சந்தனம் போன்ற தாவரங்க ளுக்கு ஓம்புயிரியாக அமைகின்றது. வேப்பங்கிளை யில் ஒட்டி வாழுகின்ற குருவிச்சையானது நீரையும் கனியுப்புகளையும் உறிஞ்சிக் கொண்டு, வேம்பின் வளர்ச்சிக்கும் தீங்கு விளைவிக்கின்றது. ஒட்டுண்ணிகளிடம் விலங்குகள் எதிர்வினையாற்றுவ தைப் போல பேரளவு எதிர்வினைகளைத் தாவரங்கள் வெளிப் படுத்துவதில்லை. ஒட்டுண்ணிகள் இன்னா செய்கின்ற போதும், தாவரங்கள் நன்னயமே செய்கின்றன. ஒட்டுண்ணி யாக அமையும் குருவிச்சையானது கனிகளின் ஒட்டுந் தன்மையாலும், பறவைகளுக்கு உணவாகி விதை எச்சத்தாலும் எளிதிலே பரவலடை கின்றது.



வாசனை கமழ்கின்ற தன்மையுள்ள சந்தன மரங்கள் மண்ணிலிருந்து நேரடியாக ஊட்டச் சத் தினைப் பெறுவதில்லை. அவற்றைத் தனியாக வளர்க்க முடியாது. எனவே தான் வேப்ப மரம் போன்றன அருகிலே ஓம்புயரியாக வளர்க்கப்படுகின்றன. சந்தன மரத்தின் வேரிலிருந்து வளர்கின்ற உறிஞ் சுறுப்பான் கௌஸ்ரோரியா (haustoria) வேப்பமரத்தின் வேர்களில் நுழைந்து தனக்கான ஊட்டச்சத்தினை எடுத்துக் கொள்கிறது. அரை நூற்றாண்டின் பின்பே வெட்டப்படும் தகுதியைப் பெறுவதால், சந்தன மர மானது விருந்து வழங்கியினைத் துன்பியலின் எல்லைக்கே அழைத்துச் செல்கின்றது. ஓம்புயிரிகளில் ஒன்றான வேம்போ, பதிலுக்கு நன்மையினையே செய்கின்றது.

" இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல் "

என்ற 314 ஆவது குறட்பாவானது வேப்பமரம் போன்ற ஓம்புயிரிகளுக்கு மிகவும் பொருத்தமாகவே அமைகின்றது.

முற்றும் ■

# காலப் பயணம்

சபா.விஜயகுமார்

இப்போதிருக்கும் நிகழ்காலத்தில் இருந்து இறந்த காலத்துக்கும் எதிர் காலத்துக்கும் பயணிப்பது தான் காலப்பயணம் (Time Travel) எனலாம். நமது சூர்யா நடித்த 24 என்ற படம், ஆர்னோல்ட் சுவார்ஸ்செனேகர் நடித்த ரேர்மி னேரர் டார்க் வேற், கிறிஸ்தோபர் நோலனின் இன்ரர் ஸ்ரெல்லார் போன்ற படங்களும் காலப்பயணத்தை மையமாக வைத்தே எடுக்கப்பட்ட திரைப்படங் களாகும். கேட்கும் போது சுவாரசியமாக இருக்கும் இவ் விடயம் நடைமுறைக்குச் சாத்தியமானதா? என்பது பற்றி இனிப் பார்ப்போம்.

சமீப காலம் வரை காலப்பயணம் என்பது அறிவியலுக்குப் புறம்பான ஒரு கற்பனை என்று தான் அறிவியலாளர்கள் எள்ளி நகையாடி வந்தனர். காலப்பயணம் ஏன் சாத்தியமில்லை என்பதற்கு மூன்று முரண்பாடுகளை அவர்கள் முன்வைத்தனர் அதில் முதலா வது அப்பா பிறப்பதற்கு முன்பே பாட் டனைக் கொல்லுதல் என்பதாகும். இதைப் படித்துக் கொண்டிருக்கும் நீங்கள் கால இயந்திரத்தின் மூலம் கடந்த காலத்துக்குச் செல்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுவோம். அங்கே நீங் கள் உங்களது பாட்டனைச் சந்திக்கின் றீர்கள் எனக் கொள்வோம். அப்போது உங்கள் அப்பா பிறக்கவில்லை எனவும் எடுத்துக் கொண்டால் நீங்கள் ஒரு துப்பாக்கியை எடுத்து உங்கள் பாட் டனைக் கொன்று விடுகிறீர்கள். இப்போது என்ன பிரச்சினை என்றால்



உங்கள் பாட்டன் கொல்லப்பட்டு விட்டதால் உங்கள் அப்பாவும் பிறந்திருக்க மாட்டார் அப்படி எனின் நீங்களும் பிறந்திருக்க மாட்டீர்கள். ஆகவே இந்த உலகிலே பிறக்காத நீங்கள் எவ்வாறு காலப்பயணம் செய்து உங்கள் பாட்டனை சுட்டுக் கொல்ல முடியும்? என்ன தலை சுற்றுகிறதா? இன்னும் இதை ஆராய்வோம், வாருங்கள்.



காலப்பயணம் தொடர்பாக நவீன வானியலாளர் ஸ்ரீபன் ஹாக்கிங் தனது கருத்துக்களை முன் வைத்துள்ளார். காலப் பயணம் செய்வது சாத்தியமெனின் நம் எதிர்காலத் தலைமுறைகள் யாராவது காலப்பயணம் செய்து வந்து நம்மை ஏற்கனவே சந்தித்திருப்பார்களே? அப்படி யாரும் இதுவரை சந்திக்க வில்லை என்பதே எதிர்காலத்திலும் காலப்பயணத்துக்கான வழிமுறைகள் சாத்தியப்படாது என்பதற்கான உதார ணம் தானே. என அவர் கேள்வி கேட் கிறார் ஆனால் தற்போது ஸ்ரீபன் ஹாக்கிங் உட்பட பல அறிவியலாளர்கள் கரலப்பயணம் என்பது சாத்தியமாகலாம் என்ற மன மாற்றத்துக்கு வந்துள்ளார்கள் ஐன்ஸ்டீனின் சிறப்பு சார்பியல் விதிக ளின் படி எதிர் காலத்துக்குள் பயணிக்க கால நீடிப்பு விளைவுகளைப் பயன்படுத் தலாம். ஒரு பொருள் நகர்கின்ற வேகம் கூடக்கூட அது கழிக்கும் நேரத்தின் நீளம் அதிகரிக்கும் . பொருளின் வேகத்தை ஒளியின் வேகத்தோடு ஒப் பிட்டுப் பேசலாம். அதாவது ஒளியின் வேகத்துக்கு நிகராக ஒரு பொருளின் வேகம் கூடிக்கொண்டே போகும் போது அந்தப் பொருள் கழிக்கின்ற கால அளவின் நீளம் அதிகமாக இருக்கும். அதாவது ஒரு நொடியின் நீளம் நிலை யாக இருக்கும் பொருளை விட, நகரும் பொருளுக்கு அதிகமாக இருக்கும். இதன் படி ஒளியின் வேகத்திற்கு நிகராக நகரும் பொருளுக்கு நேரத்தின் நீளம் மிகக் குறைவாகவே இருக்கும் உயி ரியல் ரீதியாக கூறுவோமானால் காலம் போகப் போக நமக்கு வயதாவதும் கூட இதில் அடக்கம். நாம் ஒளியின் வேகத் தில் பயணிக்கையில் நேரத்தை விட வேக மாக நாம் முன்னால் பயணிப்போம். அதன் மூலம் வயதே ஆகாமல் எதிர் காலத்துக்குள் பயணித்து நமது பேரன், பேர்த்திகளைப் பார்த்துவிட்டு வரலாம்.

ஒருவர் பூமியின் ஈர்ப்பு விசைக்கு சமனான வேகத்தை உற்பத்தி செய்யக் கூடிய விண்வெளிக் கலத்தில் பூமியி லிருந்து விண்வெளிக்கு செல்கிறார் என வைத்துக்டிகாள்வோம். அவ் வேகத்தில் அவர் சென்றால் அவர் ஓராண்டில் ஒளியின் வேகத்திற்கு நிகரான வேகத்தை அடைந்து விட முடியும். பூமியின் ஈர்ப்பு விசையை விட அதிக வேகத்தில் செல்வதால் அந்த விண்வெளிக் கப்பலில் காலம் மிக மிக மெதுவாக நகரும். இவ் வேகத்தில் செல்லும் போது நமது பால்வீதிமண்டலத்தின் மையப்பகுதிக்கு சென்று விட்டு மீண்டும் பூமிக்கு திரும்பி வர 40 ஆண்டுகள் எடுக்கும். நம்முடைய பூமியில் இருந்து பால்வீதிமண்டலத்தின் மையபகுதிக்கும் இடையே இருக்கும் தொலைவு 60,000 ஒளி ஆண்டுகள் ஆகும். ஒளியின் வேகத்தில் பயணிக்கும் போது அவ் 60,000 ஒளி ஆண்டுகளைக் கடக்க அவருக்கு 40 ஆண்டுகளே போதுமானது. இந்த விண்வெளிக் கப்பலின் நேரப்படி 40 ஆண்டுகளுக்கு முன்பு ஏறிய விண்வெளி வீரருக்கு 25 வயது என்றால் அவர் திரும்பி வரும் போது அவருக்கு 65 வயதாக இருக்கும். ஆனால் பூமியில் 60,000 ஆண்டுகள் கடந்து இருக்கும். என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? ஆம் இதுதான் அறிவி யல் உண்மை ஆகும். இதை தான் காலப்பயணம் என்கின்றோம். ஒரு பொருள் நகரும் வேகத்துக்கு ஏற்ப அந்த பொருளின் காலமும் மாறும், பொருள் வேகமாக நகர்ந்தால் நிலையான பொருளின் காலம் நகரும் வேகத்தை விட வேகமாக நகரும் பொருளிற்கான காலத்தின் வேகம் குறையும். அந்த வேகம் ஒளியை விட வேகமாக இருப் பின் காலம் நகரும் வேகத்தை விட வேகமாகப் பொருள் நகர்ந்து எதிர் காலத்திற்குள் அதனால் பயணிக்க முடியும் என்பது தான் பௌதீகவியல் விதி ஆகும். கடந்த 20 ஆண்டு கால விண்வெளி ஆராய்ச்சிகளில் நமக்கு தெரிய வருவது என்னவெனின் நாம் இதுவரை கண்டறிந்துள்ள பௌதீகவி யல் விதிகள் நம்மை காலப்பயணம் செய்யவிடாமல் தடுக்கவில்லை. அதற்கான வாய்ப்புக்கள் நிறையவே உள்ளன.அதே சாத்திய வழியில் செயற் படுத்த வேண்டியதுதான் இனி உள்ள மிகுதி வேலையாகும். எதிர்காலத்தில் அதுவும் சாத்தியப்படலாம் அப்போது நம் பிள்ளைகள் நம் இளமைப் பருவத் துக்கான கடந்த காலத்திற்குள் வரலாம். நீங்களும் உங்கள் எதிர்காலச் சந்ததிகளை முன் கூட்டியே கண்டு களிக்கலாம். ■



வேல் நந்தன்

# ஆரம்பக் கல்வியிலும் தாய்மொழி விருத்தியிலும் ஆசிரிய கலாசாரம்

எமது சமூகச் சூழலில் கல்வியின் அடைவு மட்டங்கள், திறன் விருத்திகள் தொடர்பில் க.பொ.த. சாதாரணதர, உயர்தர பெறுபேறு மட்டங்களில் சிந்திக்கப்படும் அளவிற்கு ஆரம்ப நிலைக் கல்வியில் சிந்திக்கப்படுகிறதா? என்பது மிகப் பெரியதொரு கேள்வியாகவே விளங்குகிறது. கல்வியின் அடித்தளம் சரியான முறையில் இடப்படும் போதே அதன் மேற்கட்டுமானம் சிறப்பான வெளிப்பாட்டைக் கொண்டதாக அமையும். இவ் வகையில் எந்தவொரு அடிப்படைத் திறன்களையும் தன்னியல்பாக வளர்க்காத பெற்றோர் மைய திணிப்புக் கல்வியாக விளங்கும் புலமைபரிசில் பரீட்சையை நாம் ஒரு ஆரோக்கியமான ஆரம்பக்கல்வியின் அடித்தளமாகக் கொள்ள முடியாது. இதன் விளைவாகத்தான் இப் பரீட்சையில் உயர் புள்ளியைப் பெற்று பிரபல பாடசாலைகளில் கல்வி பயிலும் பல மாணவர்களிடம் கூட எழுத்து, வாசிப்பு, ஆக்கத்திறன், தாய்மொழித்திறன் சார் குறைபாடுகளை எம்மால் இனங்காண முடிகிறது.

எமது கல்வித் திட்டம் மூலம் தரம் 05 மாணவனிடமோ, மாணவியிடமோ பேச்சு, வாசிப்பு, எழுத்துத் திறன்களுடன், கணிதத்திறன்களும் சரியான முறையில் வளர்த்தெடுக்கப்படும் போதே அவர்கள் தரம் 6-11 வரையான இடைநிலைக் கல்வியை உறுப்பமைய எழுதி, வாசித்து, கணிதத்திறன் விருத்தியோடு சிறப்பான முறையில் முன்னெடுக்க முடியும். எனினும் நடைமுறை யதார்த்தம் இதற்கு முற்றிலும் எதிர்மாறானதாகவே அமைந்துள்ளது. எமது நாட்டின் கல்வித் திட்டத்தில் சுதந்திரத்துக்குப் பிற்பட்ட சுதேச மொழிக் கல்வி என்ற வகையிலும், கல்விப்போதனை மொழி என்ற வகையிலும் தாய்மொழிக் கல்வி பற்றிய சிந்தனைகள் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளதைக் காணமுடிகிறது. தற்போது முதன்மை நிலை 1,2,3 என்ற அடிப்படையில் முன்னெடுக்கப் படுகின்ற ஆரம்பக்கல்வி ஒன்றிணைந்த பாடத்திட்டம் என்ற அடிப்படையில் தாய்மொழிக் கல்வி என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

ஒரு பிள்ளையின் கற்றல் செயற்பாட்டிலும் முழுமையான ஆளுமை வளர்ச்சியிலும் அப் பிள்ளையின் ஐந்து வயதைத் தாண்டி அமையும் தரம் 1-5 வரையான காலப்பகுதியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சிக்கலான காலப்பகுதியாக விளங்குகிறது என்பது முறைசார்ந்த கல்வியின் முதல் 5 வருடங்களான ஆரம்பக் கல்விக்கும் பொருந்துகிறது. இங்கு ஒரு பிள்ளையிடம் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய தொடர்பாடல்கள் பேச்சு, வாசிப்பு, எழுத்தாற்றல்களின் அடிப்படைத் திறன்களை விளங்கி தாய்மொழித் திறனானது முக்கியத்துவம் பெறுகிறது. இதுவே ஏனைய பாடங்களையும் பிள்ளை விளங்கிக் கற்க, விடை எழுத வழிகாட்டியாயும் அமைகிறது. இவ் வகையில் இன்று ஆரம்பக்கல்வி மாணவர்கள் ஆங்கிலம், சிங்களம் போன்ற தமது தாய்மொழிக்கு அப்பாலான விடயங்களை கற்பதில், அவற்றை வெளிப்படுத்துவதில் காட்டும் ஆர்வத்தை தமது தாய்மொழியில் எழுத, வாசிக்க, பேச காட்டுவதில்லை. அதனால் பெற்றோர்களும் தமது பிள்ளைகளிடம் இவற்றை மேம்படுத்துவதில் பெரிதும் சிரமப் படுவதையும் இனங்காணமுடிகிறது.

மொழித்திறனை மேம்படுத்துவதன் வழியாகவே ஒரு பிள்ளையிடம் தாய்மொழி விருத்தியை ஏற்படுத்த முடியும் என்ற அடிப்படையில் வீட்டுச் சூழலிலும் பிள்ளையின் தாய்மொழி விருத்தியை கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் என்ற மொழித்திறன்கள் வழி சரியான முறையில் முன்னெடுக்காததன் விளைவாகவே இன்றைய பிள்ளைகள் ஆரம்பக்கல்வி தாய்மொழித்திறனில் இடர்படுவதைக் காணமுடியும்.

இந்த வகையில் மனனம் செய்து ஒப்புதல், கதைகூறல், பாடல் பாடுதல், உறுப்பமைய எழுதுதல், தாய்மொழிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய நல்ல விடயங்களைக் கேட்டல், சிறு வயதிலேயே பத்திரிகை, சஞ்சிகை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்குதல், பிள்ளைகளின் தாய்மொழி வெளிப்பாட்டுக்குரிய சரியான பாராட்டுக்களையும் பரிசில்களையும் உரிய வேளையில் வழங்குதல், தாய்மொழிக் கல்வியை வழங்கும் முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இந்த விடயங்களில் ஆளுமை மிக்க முன்மாதிரியானவர்களாக இருத்தல், மொழி விளையாட்டு முறைக் கற்பித்தலைப் பின்பற்றுதல் போன்ற பல்வேறு வகையான செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதன் வழி ஆரம்பக்கல்வி மாணவர்களின் தாய்மொழி விருத்திக்கும் பங்களிக்க முடியும்.

இவற்றைவிட ஒரு பிள்ளையின் மொழி விருத்தியில் குழந்தையின் நுண்மதி அளவுகள், பெற்றோரின் கல்வி அடைவு மட்டங்கள், குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, குடும்பப்பிரச்சினைகள், வெளிச் சூழலுடன் கொண்டுள்ள தொடர்பு, உறவினரிடமான தொடர்புகள், அயலிலுள்ள ஏனைய பிள்ளைகள் போன்ற பல்வேறுபட்ட குடும்ப சமூக, சகபாடிக் காரணிகளும் செல்வாக்குச் செலுத்துவதையும் மறுக்க முடியாது. ஆனால் இன்றைய சூழலில் நாம் எதிர் கொள்ளும் மிகப் பெரிய ஆபத்தான பிள்ளைகள் இத்தகைய இடைவினை உறவுகளைக் கொள்ளாமல் தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்படும் காட்டூன் தொடர்களுக்கும், கையடக்கத் தொலைபேசியின் விளையாட்டுக்களுக்கும் அடிமையாகி இருப்பதும் அவர்களது தாய் மொழிவிருத்தியில் பெரிதும் தாக்கம் செலுத்தும் ஒரு விடயமாக மாறியுள்ளது. இவற்றைக் கேட்பதாலும் பார்ப்பதாலும் பிள்ளைகளிடம் ஒரு வகையான தாய்மொழி விருத்தி ஏற்படுகிறது என்பதை மறுக்க முடியாது. என்றாலும் இங்கு பெரும்பாலும் கையாளப்படும் உரையாடல் மொழி தென்னிந்திய தழுவல் கொண்டதாக இருப்பதால் பிள்ளைகள் தவறாக வழிப்படுத்தப்படவும் வாய்ப்புள்ளது.

பிள்ளைகளது மொழி விருத்தி பற்றிய சிந்தனைகளை காலத்துக்கு காலம் பல அறிகை உளவியலாளர்களும் முன்வைத்துச் சென்றுள்ளனர். இவ் வகையில் புரூணர், விகொஸ்கி, எரிக்ஸ்சன், ஸ்கின்னர், ரோம் சொம்ஸ்கி போன்றோரது மொழி விருத்தி பற்றிய சிந்தனைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. எனவே தாய்மொழியில் ஒரு பிள்ளையை ஆரம்ப கல்விக்குள் எழுத வாசிக்கச் செய்வோமாக இருந்தால் கேட்டல், கிரகித்தல், பேச்சு ஆகிய மொழித் திறன்களோடு இணைந்தவகையில் ஆரம்ப கல்வியில் தாய் மொழித்திறன் விருத்தியை ஏற்படுத்த முடியும். அது தாய் மொழித் திறன் மேம்பாட்டுக்கு மட்டுமன்றி ஒரு பிள்ளையின் கல்வி ஊடக மொழி விருத்திக்கும் பேருதவியாய் அமையும் என்பதில் ஐயமில்லை. ■

# இணக்க அரசியலும் தமிழ் மக்களின் நம்பிக்கையும்

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலருக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுத்தது, சில அபிவிருத்தி வேலைகலைச் செய்து கொடுத்தது என ஒரு சில விடயங்களைச் சிலவேளை இதற்கானப் பதிலாகக் கொள்ளலாம் ஆனால் தீர்க்கப்பட வேண்டிய தமிழ் மக்களின் பிரச்சினைகள் இப்போதுவரை அப்படியே இருக்கின்றன. குற்றம் செய்யாமல் சிறைத்தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கும் கைதிகள், காணாமல் போனோர் விவகாரம், மீளக் குடியேறமுடியாமல் அனாதரவான நிலையில் இருக்கும் மக்கள், தமிழர் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களின் முன்னெடுப்பு போன்ற பல்வேறு பிரச்சினைகள் பிரச்சினைகளாகவே இருக்கின்றன. அதனைத் தன்னால் தீர்க்கமுடியும் என்று பல இடங்களில் அவர் குறிப்பிட்டிருந்தார். தமிழ் மக்கள் கூட்டமைப்பினை ஆதரிப்பதும் தனக்கு அதிகபடியான வாக்குகளைத் தராததுமே தான் அவ்வாறு செய்யமுடியாமல் இருப்பதற்கான காரணம் என்று பொது மக்கள் சந்திப்புக்கள் பலவற்றில் அவர் சொல்லியுமுள்ளார். அப்படியென்றால் அவர்கள் மக்கள் நலனுக்காக இணக்க அரசியல் செய்பவர் என்று எவ்வாறு தன்னை அடையாளப்படுத்த முடியும். சரியாக யோசித்தால் அவர் தற்போது அரசதரப்பிடம் இருந்து எந்த நலனையும் தமிழர் தரப்பினருக்குப் பெற்றுக்கொடுக்க முடியாத சூழ்நிலையிலேயே இருக்கிறார். ஒரு கட்டத்திற்குமேல் அரச தரப்பிடம் அவரின் பேச்சு எடுபடப்போவதில்லை என்று அவருக்கும் தெரியும். ஆனால் அதனை வெளிப்படையாகச் சொல்ல கௌரவம் இடங்கொடுக்கவில்லை. அதேநேரம் அரசு செய்யத்தயாரில்லை என்பதற்காக முரண்பட்டுச் செல்லவும் அவரால் முடியாது. அவ்வாறு முரண்பட்டுச் செல்லுவாராக இருந்தால் அவரது இத்தனைகால இருப்பு, அடையாளம் இல்லாமல் போவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. இதனையும் விட அவரது போராளிகாலத்துச் செயற்பாடுகள் பொறியாகமாற்றப்பட்டு மீளமுடியாத அகழிக்குள் வீழ்த்தப்படும் சூழல் உருவாகும் என்பதனையும் அவர் நன்கு உணர்ந்து வைத்திருக்கின்றார். ஒருவகையில் சொன்னால் புலி வாலைப்பிடித்த நிலைதான் அவரது நிலை. அதனால் அவரால் இணக்க அரசியலி லும் ஒரு எல்லையை மீறிப்பயணிக்க முடியாது என்பது வெளிப்படை.

உண்மையில் மக்களின் நலன் சார்ந்து இணக்க அரசியல் செய்வதாக இருந்தாலும் மக்களுக்குரிய நலனை ஏற்படுத்துவதில் அரசு தயங்கும் போதோ அல்லது மறுக்கும் போதோ விடாப்பிடியாக நின்று அதனைச் செய்யும் வல்லமை இருக்கவேண்டும். முரண்படவேண்டிய சந்தர்ப்பம் வரும் பட்சத்தில் அதனையும் செய்யத்துணியவேண்டும். ஆனால் இதற்கு நிறைந்த தைரியம் வேண்டும். இத் தைரியம் தூய்மையாக அரசியல் செய்யும் தரப்பினரிடம் இயல்பாக வரும். அவ்வாறு இல்லாதவர்களிடம் இதனை எதிர்பார்க்கவும் முடியாது.

எனவேதான் சரியாக யோசிக்கும் போது தமிழர்களின் நலனைக் கருத்தில் கொண்டதாக மேற்கொள்ளப்படும் இணக்க அரசியல் தமிழர்களுக்குப் பயனற்றவை என்பதுவெளிப்படையாகத் தெரிகிறது. குறைந்த பட்சம் முஸ்லிம்கள் பெற்றுக் கொண்ட இணக்க அரசியல் நன்மையைக் கூட தமிழர்கள் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்னும் போது அவ் அரசியல் போக்கு தமிழர்களுக்கு எதற்கு என்பதே தமிழ்களின் நிலைப்பாடாகவும் உள்ளது. இணக்க அரசியல் மூலம் தமிழர்கள் எதிர்பார்ப்பு எட்டப்பட்டிருக்கும் என்னறால் இணக்க அரசியல் செய்பவர்கள் தமிழர்களின் மனங்களில் நிறைந்தவர்களாகவும். அவர்களின் வாழ்விலிருந்து பிரிக்க முடியாதவர்களாகவும் இருப்பார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. இத்தனை காலம் இணக்க அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இந்த இடத்தில் நின்று இரண்டு விடயத்தினை யோசிக்கலாம் ஒன்று அரசு தமிழ் மக்களுக்கு எதனையும் செய்வதற்குத் தயாரில்லை அல்லது தாங்கள் மேற்கொண்ட இணக்க அரசியல் போக்கு வலுவானதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு தமது அரசியல் செயற்பாட்டினை முன்னெடுப்பார்கள் என்றால். காலம் இன்னமும் அவர்களுக்காகக் காத்திருக்கும் என்பதில் ஐயம் இல்லை. ■



# யோகி, போகி, ரோகி

வேதநாயகம் தபேந்திரன்

மனிதன் உயிர்வாழ உணவு அவசியமானது. இதனை யாருமே மறுக்க முடியாது. ஆனால் ஒரு நாளில் எத்தனை தடைவைகள் உணவு உண்ண வேண்டும். உடல் ஆரோக்கியத்தைப் பேண என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பது தொடர்பாகக் காலத்துக்குக் காலம் மாறுபட்ட கருத்துகள் உள்ளன. மூன்று வேளை உணவு உண்பவனை ரோகி என்கின்றனர். அதாவது 3 வேளை உண்பவனுக்குத் தான் நோய்கள் வருமாம். நோயை ரோகம் என்று சொல்லும் ஒத்த கருத்தும் உள்ளது. இரண்டு வேளை உணவு உண்பவனைப் போகி என்கின்றனர். போகி என்பது அனுபவிப்பவர் என்ற கருத்தைத் தருகின்றது. அதனால் இரண்டு வேளைகள் உணவு உண்பவர் வாழ்வை அளவுடன் அனுபவிக்கின்றார் என்கின்றனர். ஒரு நேரம் உணவு உண்பவரை யோகி என்கின்றனர். அதாவது இல்லற வாழ்விலிருந்து நீங்கித் தவம் இருப்பவருக்கு ஒரு நேர உணவு போதுமானது என்பதே இதன் கருத்து.

அப்படியானால் ஒரு நாளில் நாலைந்து தரம் உணவு உண்பவர்களை எப்படிச் சொல்வது? அவர்கள் தமது உடலுக்கான துரோகி எனலாமா? விடை உங்கள் வசமேயாகட்டும்.

சாதாரண மனிதர்கள் எத்தனை தரம் உணவு உண்ண வேண்டும்? எப்படி உண்டால் உடல் நலம் கிடைக்கும் என்பது தொடர்பாகக் காலத்துக்குக் காலம் மாறுபட்ட கருத்துகள் உள்ளன. அக்கியுபஞ்சர் மருத்துவத்தைப் பின்பற்றுபவர்கள் பசிக்கும் போது ஒரு நேர உணவு உண்டால் போதுமானது என்கின்றனர். இடையில் பசித்தால் பச்சையான காய்கறி, பழங்களை உண்டால் போதுமானது என்கின்றனர். மூன்று வேளை உணவு உண்ணுதல் நாம் எமது உடலுக்குச் செய்யும் பாதகம் என்கின்றனர். அக்கியுபஞ்சர் மருத்துவம் இன்று மேற்குலகு முதல் எமது நாடுகள் வரையில் பரவலாகப் பரவி வரும் ஒரு மருத்துவம் எனலாம். அதன் ஆழ அகலங்கள், உணவுக் கோட்பாடு முறைகள் ஆய்வுக்குரியதே.

காலை உணவுக்கு ஆங்கிலத்தில் Breakfast என்ற சொல் வழங்கப்படுகின்றது. அதாவது இரவு உணவு உண்ட ஒருவர் நித்திரை சென்று காலையில் எழுந்து உணவு அருந்தும் போது கிட்டத்தட்ட 12 மணி நேர இடைவெளி இருக்கும். இதனால் உண்ணா விரதத்தை முடிவுறுத்தல் என்ற பெயரில் Breakfast என்ற சொல்லை வைத்தனராம். காலை 8 மணிக்கு உணவு உண்ட ஒருவர் மதியம் ஒரு மணிக்கு மதியச் சாப்பாட்டை உண்பார். 5 மணி நேர இடைவெளி.



**“உலகில் பட்டினியால் இறந்தோர்களை விட அளவுக்கு மீறி உணவு உண்டு நோய் வாய்ப்பட்டு இறந்தோர் தொகை தான் அதிகம். வறுமை இருந்த போது கைகளில் சீனியை நக்கித் தேனீர் குடித்த போது ஆரோக்கியம் இருந்தது. சீனியைத் தாராளமாகப் போட்டு மாத்தேனீர் குடித்த போது தான் ஆரோக்கியம் பறிபோய் நோய்வாய்ப்பட்டோம். எமது நாட்டில் 1990 ஆம் ஆண்டில் இருந்ததை விட 2020 ஆம் ஆண்டில் தனிநபருக்குரிய தலா வருமானம் 9 மடங்கு கூடியுள்ளது. அதாவது பொருளாதாரம் 9 மடங்கு வளர்ந்துள்ளது.”**

அது போல இரவு எட்டு மணிக்கு உணவை உண்பார். 7 மணி நேர இடைவெளி. ஆனால் இரவு உணவுக்கும் காலை உணவுக்கும் இடையே குறைந்தது 12 முதல் 13 மணி நேர இடைவெளி இருக்கும். அதனாலேயே இந்தச் சொல்லை ஆங்கிலேயர் உருவாக்கினர்.

உலகில் பட்டினியால் இறந்தோர்களை விட அளவுக்கு மீறி உணவு உண்டு நோய்வாய்ப்பட்டு இறந்தோர் தொகை தான் அதிகம். வறுமை இருந்த போது கைகளில் சீனியை நக்கித் தேனீர் குடித்த போது ஆரோக்கியம் இருந்தது. சீனியைத் தாராளமாகப் போட்டு மாத்தேனீர் குடித்த போது தான் ஆரோக்கியம் பறிபோய் நோய்வாய்ப்பட்டோம். எமது நாட்டில் 1990 ஆம் ஆண்டில் இருந்ததை விட 2020 ஆம் ஆண்டில் தனிநபருக்குரிய தலா வருமானம் 9 மடங்கு கூடியுள்ளது. அதாவது பொருளாதாரம் 9 மடங்கு வளர்ந்துள்ளது.

வறுமை இருந்த போது தொற்றா நோய்களான இரத்த அழுத்தம், நீரிழிவு, மாரடைப்புப் போன்றன மிகவும் குறைந்தளவே இருந்தன. ஆனால் இன்று வசதிகள் கூடி 3 நேரமும் வகை வகையாகச் சாப்பிடும் போது தான் நோய்கள் அதிகரிக்கின்றன. 3 வேளை உணவை விட இடை நேரங்களில் மிக்சர் வகையறாக்களை உண்ணுதலைச் சாதாரணமாகக் காண முடிகிறது.

மூன்று நேரச் சாப்பாட்டுடன் நின்று விடுதல் நல்லது. இடைநேரங்களில் பசித்தால் பழங்களை உண்ணுதல் நல்லது. அவை உடல் நலத்தைப் பாதுகாக்கும் என்கின்றனர்.

ஆதிகால மனிதர்கள் நோய் நொடியின்றி 100 முதல் 120 வருடங்கள் வரையில் உயிர்வாழ்ந்தார்கள் என்கின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் சமைக்காமல் பச்சையாகவே யாவற்றையும் உண்ணும் வழக்கமாக இருந்தவையே. காய்கறி, பழவகைகளைப் பச்சையாக உண்ணும் போது அவை உடலில் இலகுவாக அகத்துறிஞ்சப்படும். தேங்காயை அல்லது சம்பலைப் பச்சையாக உண்ணும் போது அது கொலஸ்ரோலாக மாட்டாது. தேங்காய் எண்ணெய்யில் பொரித்து உண்ணும் போது அது கொலஸ்ரோலாக மாறிவிடும்.

கொலஸ்ரோலில் மனித உடலுக்கு நன்மை பயக்கும் கொலஸ்ட்ரோல்,தீமை பயக்கும் கொலஸ்ட்ரோல் என இருவகை உண்டு.

பச்சையாக மட்டும் உணவு உண்பவர்களது உடலில் இருந்து வெளியேறும் மலம் துர்மணம் வீசாது என்கின்றனர்.

அவித்த, பொரித்த உணவுகளைக் குறைத்து பச்சையாக உண்ணுதல் மிக நன்று. முழுமையாக இல்லாவிட்டாலும் இயலக் கூடியளவு கடைப்பிடிக்கலாம்.

மலச்சிக்கல் இருப்போருக்கு மனச்சிக்கல் இருக்கும். மனச்சிக்கல் இருந்தால் தொற்றாநோய்கள் விரைவாக எமது உடலில் குடியேறி விடும்.

கீரை வகைகள், புழுக்கொடியல், ஒடியல் மா பிட்டு, பழங்கள் போன்றவற்றை உணவில் அதிகமாகச் சேர்ப்பதன் மூலமாக சமிபாட்டைப் பேணி உடல் நலத்தைப் பராமரிக்க முடியும்.

இரவில் நித்திரைக்குப் போக முன் இரண்டு மணி நேரத்திற்கு முன்பாக இலகுவாகச் சமிபாடு அடையக் கூடிய இரவுச் சாப்பாட்டை உண்ணுதல் வேண்டும்.

பசி வந்த பின்பு தான் உணவு உண்ணுதல் வேண்டும். 3 வேளையும் உணவு உண்டால் உண்ட பின் நூறடி உலாவுதல் வேண்டும். இதனைக் கடைப்பிடிப்போர் மிகவும் குறைவு. நோய்களுக்கு இதுவும் ஒரு காரணம்.

சாப்பிட்ட உடன் அப்படியே இருந்தால் உணவு சமிபாடு அடையக் கடின நிலை ஏற்படும்.

வயதுப் பருவத்திற்கு ஏற்ப உணவிலுள்ள கொழுப்பு மாச்சத்து என்பவற்றைக் கவனித்தல் வேண்டும். வசதி இருப்பதற்காக நாக்கைக் கட்டுப்படுத்தாமல் உடற்பயிற்சிகளும் இன்றி உணவை உண்டால் அதன் விளைவுகளுக்கு விலை கொடுத்தேயாக வேண்டும்.

வாரத்தில் 3 நாட்கள் உணவில் கடலை,கௌபி போன்றவற்றை எடுப்பது மிகவும் நன்று.

எமது முன்னோர்கள் கடைப்பிடித்த மண் சட்டி, மண்பானைச் சமையலை விறகடுப்பில் இயன்ற வரைச் செய்வதும் உடல்நலத்தைத் தரும். மண்பானையில் சோறு சமைத்த பின்பு மிகுதிச் சோறில் இரவு நேரத்தில் தண்ணீர் ஊற்றிய பின்பாக காலையில் அந்தப் பழந்தண்ணீரைக் குடித்துப் பாருங்கள்.

அது தரும் உடற்சுகமே தனி. மலச்சிக்கல் வாழ்வில் எட்டியும் பாராது.

மரபணு மாற்றப்பட்ட உணவுகளை அதிகம் உண்ணும் பழக்கத்தைக் கொண்ட நாடுகளின் மக்கள் தான் சமீபத்திய கொரோனாப் பெருந்தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டனர்.

இயற்கை அன்னை எமக்கு அற்புதமான நாட்டைத் தந்துள்ளாள். வருடம் முழுவதும் விவசாயம் செய்து,கால்நடைகளை வளர்த்து அதன் பயன்களைப் பெற்று நோயற்ற வாழ்வை வாழலாம்.

இயற்கையுடன் இணைந்த முயற்சியுள்ள வாழ்வை நோக்கிப் போவோம். பூமிப் பந்தில் இயற்கையை நாம் பாதுகாத்து நாமும் நீடூழி வாழ்வோம். ■

# இந்த குணங்கள் உங்களிடம் இருந்தால் உலகின் அரிய மனிதர்களில் நீங்களும் ஒருவர்தான்! (INFJ personalities)

உங்களால் மற்றவர்களுடன் பேச முடியவில்லையா? தொடர்புகளில் இருந்து விலகி இருக்க விரும்புகிறீர்களா? தனிமை உங்களை உள்ளுக்குள் பயணிக்க வைக்கிறதா? மற்றவர்கள் உங்களைப் புரிந்து கொள்ள முடியாத புரியாத புதிராகப் பார்க்கிறார்களா?

வாழ்த்துக்கள்!

உலகின் மிக அரிதான ஆளுமை (பர்சனாலிட்டி)யில் நீங்களும் ஒருவர். மொத்தம் 16 வகை ஆளுமைகள் உள்ளன. இதில் மிக மிக அரிதான (rare) ஆளுமை உங்களுடையதுதான். உலக மக்கள் தொகையில் மொத்தம் 2 சதவிகிதத்தினர் மற்றுமே இந்த ஆளுமையின் கீழ் வருகின்றனர்.

கீழ்கண்ட குணங்களில் ஏதேனும் ஒன்று உங்களுக்கு ஒத்து போனாலும் நீங்கள் இந்த அரியவகை ஆளுமைக்குள் வருகிறீர்கள். INFJ (Introversion, Intuition, Feeling, Judging) எனப்படும் இந்த அரிய ஆளுமைகள் கொண்டவர்கள்.

உங்களை விசேடமானவர்கள் என்று கூறும் இந்த குணங்கள் உங்களிடம் இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**தொலை நோக்குப் பார்வை**

INFJ ஆளுமையாளர்கள் சிறிய விஷயங்களில் ஈடுபாடு காட்ட மாட்டார்கள். எதிர்காலத்தில் என்ன நடக்கும் அல்லது நடக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பார்கள். எந்தவகையான சவால்களையும் சந்திக்க தயங்க மாட்டார்கள். எதற்கும் இல்லை சொல்ல மாட்டார்கள். இவர்களுடைய வெற்றியை இவர்களே வடிவமைப்பார்கள்.

**இலக்கை நோக்கிய பயணம்**

INFJ ஆளுமையாளர்கள் எப்போதும் தங்கள் இலக்கை நோக்கிய பயணத்தில் பின்வாங்க மாட்டார்கள். கடினமாக உழைக்கத் தயார் ஆவார்கள். இலவசமாக தரப்படும் எதுவும் இவர்களைப் பாதிக்காது. சுயமாக சம்பாதிக்கும் ஒவ்வொரு பைசாவும் இவர்களுக்கு சந்தோஷத்தை தரும்.

**மனதின் குரல்**

INFJ ஆளுமையாளர்கள் எப்போதும் உள்ளுணர்வில் வலிமை மிக்கவர்களாக இருப்பார்கள். மனதின் போக்கைத் தொடர்ந்து கவனிப்பவர்களாக இருப்பார்கள். உள்ளுணர்வில் இவர்களுக்குத் தோன்றும் எதுவும் நடக்காமல் போகாது. ஒரு செயலைத் தொடங்கும் முன்பே அதன் முடிவு இப்படித்தான் இருக்கும் என்கிற தெளிவு இவர்களிடம் நிறைந்திருக்கும். தன்னை சுற்றியுள்ள மனிதர்கள் மற்றும் அவர்களின் குணங்கள் பற்றித் துல்லியமாக அறிந்து வைத்திருப்பார்கள்.

**இயல்பால் உண்மையானவர்கள்**

INFJ ஆளுமையாளர்கள் தங்களோடு பிரபஞ்சத்தை இணைத்துக் கொள்வதில் வல்லவர்கள். இந்த வாழ்வின் நோக்கம் என்ன? எதற்காக நாம் பிறந்திருக்கிறோம்? எதை நோக்கி செல்கிறோம் என்கிற உண்மையை நோக்கிய தேடலில் இவர்கள் பயணம் இருக்கும். இந்த அகிலத்தைத் தங்களோடு இணைத்துக் கொண்டு மற்றவர் வாழ்வில் உள்ள உண்மைகளையும் இவர்களால் அறிய முடியும்.

**சுமைதாங்கி**

INFJ ஆளுமையாளர்கள் பெரும்பாலும் மற்றவர்களின் பாரங்களை சுமக்கத் தயங்க மாட்டார்கள். மற்றவருக்காக ஆறுதலை எப்போதும் தரக் காத்திருப்பார்கள். தன்னை தேடி வருபவர்களின் மனக்குறைகளை நீக்கி அவர்களை மனரீதியாக குணப்படுத்தி விடுவதில் வல்லவர்கள். தன்னை நம்புபவர்களைப் பாதுகாப்பதில் சிறந்தவர்கள்.

**அடுத்தவர்களை அறிவதில் வல்லவர்கள்**

INFJ ஆளுமையாளர்கள் தங்கள் உடன் பழகுபவர்கள் மனதை முழுமையாக அறிந்திருப்பார்கள். உள்ளுணர்வை நல்ல சக்தியாக இவர்கள் பயன்படுத்துவதால் அருகில் இருப்பவர்களின் எண்ணங்களை இவர்களால் நன்றாக அறிய முடியும். தன்னோடு பழகிக் கொண்டிருப்பவர்களில் தனக்கு கெடுதல் செய்பவர்கள் பற்றியும் துரோகம் இழைப்பவர் பற்றியும் நன்கு அறிந்தே இருப்பார்கள்.

**தனிமைப் பறவை**


INFJ ஆளுமையாளர்கள் எப்போதும் தனியாக இருப்பதையே விரும்புவார்கள். குழுக்களோடு சேர்ந்து பயணிப்பது இவர்களுக்கு பிடிக்காது. சிறிய குழுக்கள் அதுவும் இவர்கள் தேர்வு செய்த மனிதர்களோடு மட்டுமே இவர்களால் பயணிக்க முடியும். கும்பலாக இருந்தாலும் தனியாகவே இருப்பார்கள். இவர்களோடு முழு நம்பிக்கையுடன் பழக வேண்டும் அல்லது பழகாமல் இருந்து விட வேண்டும் என்று நினைப்பார்கள். இதற்கு நடுவே ஊசலாட்ட மனநிலை கொண்டவர்கள் இவர்களோடு பழகவே முடியாது.

**எழுத்து**

INFJ ஆளுமையாளர்கள் எப்போதும் பேசிக் கொண்டே இருப்பதை விரும்ப மாட்டார்கள். பேச்சைக் குறைத்துக் கொண்டு கவனிப்பதில் நேரம் செலுத்துவார்கள். மேலும் இவர்களுக்கு பெரும்பாலும் பேச்சு என்பதே எழுத்து வடிவில்தான் இருக்கும். எதுவாக இருந்தாலும் சொல்வதை விட எழுதுவதில் ஆர்வம் அதிகமாக இருக்கும். பேசிவிட்டு தான் பேசவே இல்லை என்று சாதித்து விடலாம். ஆனால் எழுதிய ஒரு வார்த்தையை எப்போதும் இல்லை என்றே மறுக்க முடியாது. தான் உண்மையை மட்டுமே பேசுவேன் எனும் மனதைரியம் இவர்களிடம் எப்போதும் இருக்கும்.

இப்படிப்பட்ட குணங்களில் ஏதேனும் ஒன்றாவது உங்கள் குணங்களுக்குள் வந்தால் நீங்கள் இந்த அதிசய ஆளுமையான INFJ ஆளுமையாளர்கள் என்று அழைக்கப்படுவீர்கள். ■





# கைக்கடிகாரம்

அகமது ஃபைசல்

அவனை, இரண்டு கைகளும் இல்லாத நிலையில்தான் சந்தித்தேன். கொண்டு வந்த பரிசுப் பொருளை அவனிடம் கொடுத்து வாழ்த்துச் சொல்லும் வரைக்கும் என் புத்திக்குப் படவில்லை அவனுக்கு இரண்டு கைகளும் இல்லை என்ற விஷயம். "அதை எங்கிட்டத் தாங்க அங்கிள்" என்று குறுக்கே வந்து வாங்கிக்கொண்டாள். அந்நேரம் எங்கிருந்தோ வந்த "டிக் டிக் டிக்" சத்தம் என் காதுகளில் நுழைந்தது. அவன் இருக்கும் கட்டிலில் அவனுக்கு வலது பக்கமாக நான் அமர்ந்து கொண்டேன்.

"என் முகம் எப்படி இருந்தாலும், என் முகத்தில் சீழ்தான் வடிந்தாலும் எந்தக் கூச்சமுமில்லாமல், எந்த அருவருப்பும் இல்லாமல் என் முகத்தைத் தொடும் கைகள் எங்கே?" என்று அவன் என்னைக் கேட்டபோது அவன் தோள்களும் கூடவே அசைந்தன. "யாராவது சிந்திக்கின்றார்களா தங்கள் கைகளுக்கு என்ன பிரதி உபகாரம் செய்வதென்று? அப்படிக் கைகளின் கடன்காரனாக நான் இல்லை" என்று அவன் சொல்லிக் கண் கலங்கினான். எனக்கு நெஞ்சு வலித்தது.

அவன் அருகில் நெருங்கி அமர்ந்து கொண்டேன். அவனுக்காக மனதுள் பிராத்தனை செய்துகொண்டேன். நான் வாங்கி வந்த பரிசு, மிகவும் விலை உயர்ந்த கைக்கடிகாரம். எனது இரண்டு மாதச் சம்பளம். அவன் அன்புக்கு இது போதாது.

அவன் ஒரு கைக்கடிகாரப் பிரியன். முதலாம் வகுப்பு படிக்கும்போது என்னைத் தன் பக்கத்திலேதான் இருக்கச் சொல்வான். "சவூதி வாட்ச்" கட்டி வந்த ஒரே மாணவன் அந்தப் பள்ளியில் அவன் தான். யாரையும் தொட விடவே மாட்டான். என்னைத் தவிர. கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்து இயங்குவதற்காகவே தொடர்ந்து பள்ளிக்கு வருவான். மிகச் சரியாக நேரம் பார்த்துச் சொல்வான். சில நேரம் பள்ளி அதிபரும் அவன் கைக் கடிகார நேரம் பார்த்து கடமை செய்வார்.

"அங்கிள் டீ. எடுங்க" என்றாள். "மகளா" என்றேன் அவனைப் பார்த்து. "எனது கைகள்" என்றான். எனக்குப் புரியவில்லை.

"நண்பா உனக்கு ஞாபகமிருக்கா? என் கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்துவிட்டு என் புறங்கையில் முத்தமிடுவாளே அந்த டீச்சர் நேற்று இங்க வந்தா. அந்த டீச்சர் தந்த முத்தங்களையும் சேர்த்தே நான் கைகளை இழந்துவிட்டேன்" என்று சொல்லி முடிக்கும்போதும் அவன் கண்கள் திரும்பவும் கலங்கின. அங்கிள் என்று சொன்ன அந்தப் பெண்ணின் முழு உருவமும் அவனுடைய கலங்கிய கண்களுக்குள் தெரிந்தது.

கண்கள் எத்தனை முறை வேண்டுமானாலும் கலங்கும்தானே.

"டேய் கவலைய விடு நண்பா. இந்த உடல் நமதில்லை. ஒரு நாளில்ல ஒரு நாள் இந்த உடலையும் நாம் இழக்கத் தானே போகிறோம்" என்றேன். சற்று ஆறுதலாக இருக்குமென்று.

"விடிகிற ஒவ்வொரு விடியலும் எத்தனை ஆயிரம் உயிர்களின் கையைப் பிடித்து, எங்கெல்லாமோ எந்தெந்தத் திசையெல்லாமோ கூட்டிச் செல்கிறது. எல்லா மனிதர்களும் விடியலின் பின்னால் தங்கள் இலக்கை நோக்கிச் செல்கிறார்கள். எனக்குக் கைகள் இல்லை என்பதால் ஒவ்வொரு விடியலும் என்னை இந்த அறையில் விட்டுச் செல்கிறது அது தெரியுமா உனக்கு" என்றான்.

நான் எங்கும் தொலைக்காத பதிலை அவன் முன்னால் தேடினேன். சற்று நேரம் அவன் கைகள்போல நானும் பதிலை இழந்திருந்தேன். பத்து வினாடிகளாக எங்களுக்குள் அமைதி நிலவியது.

"டீ குடிங்க அங்கிள்" என்றாள்.

டீ கூட இளகியிருந்தது. அவளும் அந்த டீயின் நிறத்தைப் போன்றவள் தான். மீண்டும் அந்த "டிக் டிக் டிக்" சத்தம் என் காதுகளில் நுழைந்தது. இந்நேரம் அவனுக்கு இரு கைகளும் இருந்தால்! இடது கை மணிக்கட்டில் இருந்து தான் அந்த "டிக் டிக் டிக்" சத்தம் வந்திருக்கும். அல்லது நான் கொண்டுவந்த பரிசுப் பொருளை அவன் கைகளால் பிரிக்கும் போது அந்த "டிக் டிக் டிக்" சத்தம் வந்திருக்கும்.

நான் குடித்துவிட்டு வைத்த டீ கிளாஸை அவள் சற்றுக் குனிந்து எடுக்கும்போது அவன் கேட்டான். "பொருத்தமில்லையா?" என்று.

"எது" என அவனைக் கேட்டேன். "ஆண்களின் கைக்கடிகாரம். அவளுக்கு பொருத்தமில்லையா? என் கைகள் அவள்தானே" என்றான். அப்போது எனக்கு எதுவும் புரியவில்லை.

"அவள் கணவனால் கைவிடப்பட்டவள். கைகளில்லாத எனக்கு இந்தக் கைகள் பொருத்தமில்லையா?" கேட்டுவிட்டு அமைதியில் உறைந்தான். நான் திரும்பவும் தொலைக்காத பதிலை அவன் முன்னால் தேடினேன். பிறகு என் கைகளை ஆராய்ந்தேன்.

"என்ன கார்த் திறப்பா. அது காருக்குள்ளேதான் இருக்கும். கார்த் திறப்பு காருக்குள்ளே இருப்பதும் நல்லது தானே. கைகளுக்கு ஏது திறப்பு" என்று ஒரு புன் சிரிப்பை விதைத்தான். அன்று மாலை வரை அவனுடனே இருந்தேன். தான் கைகள் இழந்ததைப் பற்றி அவன் மூச்சு விடவேயில்லை.

பத்து லட்சம் ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தைக் காருக்குள் இருந்து திருடியதற்காக முதலாளி இரு கைகளையும் வெட்டிவிட்டார். பத்து லட்சம் தானே போனாப் போகுது அதற்காக வீட்டு ரைவரின் கைகளை வெட்டிய குற்ற உணர்வால் மனம் வருந்தி தன் மகளை அவனுக்கு கல்யாணம் செய்து வைத்த முதலாளியைப் பற்றியும் அவன் வாய் திறக்கவே இல்லை. இவையெல்லாவற்றையும் நான் ஒரு வருடம் கழித்துத் தான் தெரிந்துகொண்டேன். ■

# வரியும் வாழ்வும்

-ந.குகபரன்-

மக்களின் நலன்களைப் பேணவும் மேம்படுத்தவும் தெளிவான திட்டங்களை வகுத்து உரிய பொறி முறைகளைக் கையாண்டு நாட்டை நிர்வகிப்பது ஆட்சியாளரின் கடமையாகும். அதற்காகவே மக்கள் ஆட்சியாளரைத் தெரிவுசெய்கிறார்கள், அதற்காகவே அரச நிர்வாகப் பிரிவுகளும் கட்டமைக்கப்படுகின்றன. ஆனால் உலக யதார்த்தம் அவ்வாறில்லை. மக்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்குரிய நாடுகள் என குறித்த சில நாடுகளே முன்மொழியப்படுகின்றன. வாழ்வதற்கு ஆபத்தான நாடுகள் என பலநாடுகள் பட்டியல்ப் படுத்தப்படுகின்றன. இவை சொல்லும் செய்திகள் ஆயிரம்.

மக்கள் நலனை மதிக்காத ஆட்சி, “குடிபழி தூற்றும் ஆட்சி” கொடுங்கோலாட்சியாகும். ஆட்சியாளரின் பொறுப்பற்ற செயற்பாடுகளே மக்களை விரக்திக்கு உள்ளாக்குகின்றன. நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் புலமைச்சான்றோரின் பங்கு முக்கியமானதாக உணரப்பட்டுள்ளது. தம்மால் முடிந்தவரை வழிதவறிச் செயற்படும் அரசை வழிப்படுத்த முயலவேண்டியது இவர்களின் கடமையாகும். இத்தகைய பொறுப்புமிக்க பணியைச் சங்ககாலத்தில் வாழ்ந்த புலவர்கள் துணிச்சலோடு மேற்கொண்டுள்ளனர் என்பதற்கு சங்க இலக்கியங்கள் சான்றாகின்றன.

பாண்டியன் அறிவுடைநம்பியின் அறமற்ற செயற்பாடுகளால் குடிமக்கள் துயரில் தவித்தனர். அவனை எதிர்கொண்டு தவறை உணர்த்த யாரும் துணியவில்லை. இந்தச் சூழலில் புலவர் பிசிராந்தையார் அத்தலைவனுக்கு அறமுரைக்கிறார். பொறுப்பான ஆட்சிபற்றி எடுத்துக்காட்டுகிறார்.

அரசன் குடிமக்களிடம் இருந்து திரட்டும் வரிப்பணமானது மக்களை வளப்படுத்துவதற்காகவே அன்றி வருத்துவதற்காகவன்று. சரியான திட்டமிடலோடு முறையான வழியில் திரட்டப்படும் வரிப்பணமானது யாவருக்கும் நன்மைபயப்பதாகும். மாறாக அந்நோக்கத்தை உணராது மக்களை வருத்திப்பெறப்படின் அதன் விளைவு பெருந்துன்பமாகிவிடும் என்பதை அரசனுக்கு உணர்த்துகிறது இப் பாடல்.

காய்நெல் அறுத்துக் கவளங் கொளினே
மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும்
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்கு உணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே”



மா என்பது சங்ககாலத்தில் பயன்படுத்தப் பட்ட ஒரு அளவைப் பெயர். ஒரு மா அளவுக்கும் குறைந்த சிறிய நிலப்பரப்பில் விளைந்த நெல்லை அறுத்து அதனைக் கவளங்கவளமாக யானைக்கு ஊட்டினால் அந்நெல் யானையின் பசிபோக்க பலநாட்கள் போதுமானது. அதேவேளை நன்றாக விளைந்த நூறு வயல்கள் இருப்பினும் யானை தானே புகுந்து நெல்லை உண்ணத் தொடங்குமானால் அது உண்பதைக் காட்டிலும் அதன் கால்களால் அழிந்து போகக் கூடியவை அதிகமாகும். இந்த உவமைக்காட்சியை அறமற்று வரிதிரட்டும் அரசனுக்கு முன்வைக்கிறார் புலவர்.

மன்னன் தனது தவறை உணரவேண்டும் என்பதே இந்த உவமையின் நோக்காகும். முதலில் யானையின் செயற்பாட்டை எடுத்துரைத்தவர் தொடர்ந்து நேரடியாகத் தனது கருத்தைப் பதிவுசெய்வது அர்த்தச் செறிவுடையது.

அரசன் அறிவுடையவன் ஆகச் செயற்படுவானெனில் ஆட்சிநெறியறிந்து நடப்பான். குடிமக்களுக்குத் துன்பம் வராதவாறு அவர்களின் வருவாயில் ஒரு சிறுபகுதியை வரியாகப் பெறுவான். நிதியானது முறையான வகையில் பெறப்படுவதையும் சேமிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவான். அவ்வாறு சேமிக்கப்பட்ட நிதியானது சரியான வழியில் ஆக்கத்திற்காகப் பயன்படும் போது நாடும் நலன்பெறும். மன்னனும் உயர்வடைவான். இச்செயற்பாடு யானைக்கு கவளங்கவளமாக நெல்லை ஊட்டுவது போன்றதாகும்.

அரசன் அநீதியான வழியில் மக்களை வருத்தி வரிபெறுவதும் அவனைச் சூழ உள்ளோர் அறமுரைக்கத்தவறி அரசனுக்குத் துணைநிற்பதுவும் பேரழிவைத்தரும். இத்தகு பொறுப்பற்ற செயற்பாடு “யானை புக்க புலம்” போன்றதாகும். இது அரசனையும் கெடுத்து நாட்டையும் சிதைக்கும் என்பதை இடித்துரைக்கிறார் புலவர். அரசாட்சி மக்களாட்சியாக மிளிரவேண்டும் என்பதை வலியுறுத்தும் இச்செய்யுள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அதிகார மையத்தை நோக்கி முன்வைக்கப்பட்டிருக்கிறது.

> “அரசன் அறிவுடையவன் ஆகச் செயற்படுவானெனில் ஆட்சிநெறியறிந்து நடப்பான். குடிமக்களுக்கு துன்பம் வராதவாறு அவர்களின் வருவாயில் ஒரு சிறுபகுதியை வரியாகப் பெறுவான். நிதியானது முறையான வகையில் பெறப்படுவதையும் சேமிக்கப்படுவதையும் உறுதிப்படுத்துவான். அவ்வாறு சேமிக்கப்பட்ட நிதியானது சரியான வழியில் ஆக்கத்திற்காக பயன்படும் போது நாடும் நலன்பெறும். மன்னனும் உயர்வடைவான். இச்செயற்பாடு யானைக்கு கவளம் கவளமாக நெல்லை ஊட்டுவது போன்றதாகும்.”

“என்நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே” என மன்னரைத் தம் நெஞ்சுக்குள் வைத்துப் போற்றிப் புலவர் கொண்டாடும் வண்ணம் ஆட்சி செய்த மன்னர்கள் பற்றியும் இலக்கியங்கள் பேசுகின்றன. அதேவேளை ஒரு நேர உணவுக்காக மக்கள் கையேந்தி அலையும் வகையில் ஆட்சி புரிந்தவர் களையும் இலக்கியங்களில் காணமுடியும்.

“முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுங்கு
ஏய்ப்பச் சோறுடைக் கையர் வீறுவீறு
இயங்கும் இருங்கிளைச் சிறாஅர்க்
காண்டும் கண்டும்....”

காட்சி ஒன்றை புறநானூற்றில் காணலாம். எறும்புகள் மழைவரும் காலத்தை அறிந்து முட்டைகளைக் கொண்டு மேட்டு நிலம் நோக்கி நகர்வது போல பெருஞ்சுற்றத்தோடுங் கூடிய பிள்ளைகள் வரிசையாகச் சோறினைப் பெற்றுச்செல்லும்காட்சி இங்கு விபரிக்கப்படுகிறது. உணவுக்காகக் கையேந்தி அலையும் இந்த அவலம் அன்றிலிருந்து இன்றுவரை நீள்கிறது என்பதே உண்மை. கம்பன், “கொள்வாரும் இல்லை கொடுப்பாரும் இல்லை” என்ற ஒரு நாட்டைக் கனவுகண்டான். அப்படியொரு தரிசனம் வெறுங் கனவே என்கிறது உலகின் நிகழ்நிலை. ■

# இலங்கைத் தமிழரின் நலனும் இந்தியாவை கையாள வேண்டிய தேவையும்

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மூன்றாவது,** தமிழ் நாட்டினுடைய முக்கியத்துவம். இது இலங்கைத் தமிழர்களுக்குப் பல வகையில் செல்வாக்குடையது.

(1) புவிசார் அரசியல் - தமிழ்நாடும் இலங்கைத் தமிழர் தாயத்தைப் போல கேந்திர முக்கியத்துவமுடையதாகவே உள்ளது. இரண்டு கேந்திரப்பலமும் சேர்ந்து செயற்படுவதன் ஊடாக பலமான செல்வாக்கு நிலையினைப் பெற முடியும்.

(2) தமிழ் நாடும் நீண்டகாலமாக தனிநாட்டுப் போராட்டத்தை நடத்தி வருகின்ற மாநில மாக இருப்பது. இன்றும் கூட ஒரு மத்திய அரசுக்கு வெளியில் இருக்கும் ஒரு மாநிலமாகத் தமிழ் நாடு இருக்கிறது. மத்திய அரசில் செல்வாக்குச் செலுத்துகின்ற பிரதான கட்சிகள் இங்கு முதலாம் நிலையில் இல்லாமல் பின்னுக்கு இருப்பதும் முக்கியமான விடயமாகும்.

**நான்காவது,** இலங்கைத் தமிழர்களுக்கும் இந்தியத் தமிழர்களுக்கும் இடையிலான உறவு தொப்புள் கொடி உறவு, இவ்வுறவு மிகவும் வலுவானது. இன்று கூட தமிழ் நாட்டில் இருப்பவர்கள் ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்தமையால் வேதனை கொண்டவர்களாகவே இருக்கின்றார்கள். இதன் காரணமாக ஈழத்தமிழர்கள் மீது அக்கறையும் அவர்களின் நலனில் கரிசனையும் கொண்டு செயற்படும் நிலைமையும் உண்டு. இதுவும் தமிழர்களுக்கு பலமான ஒன்றாகவே இருக்கிறது. இந்தியத் தமிழர்கள் இந்தியாவின் பல மாநிலங்களில் வாழுகின்றமை இன்னொரு பலமாகும். இதனால் அவர்களின் ஆதரவும் இலங்கைத் தமிழர்களுக் கிடைக்கும்போது அதன் அழுத்தம் இந்தியாவை இலங்கைத் தமிழர்கள் மீது கவனக் குவிப்பைச் செய்வதற்கு வலுப்படுத்தும் என நம்பலாம். இவற்றினையும் கவனமாகக் கையாண்டு இந்தியாவுக்கு அழுத்தத்தினைக் கொடுப்பதன் மூலம் தமிழர் பிரச்சினையினை கையிலெடுப்பதற்கான சாத்தியத்தினை ஏற்படுத்தலாம்.

**ஐந்தாவது,** புலம்பெயர் தமிழர்கள் - அவர்களில் ஈழத்தமிழ்களைத் தவிர்த்தால் எஞ்சியிருப்பவர்கள் இந்திவம்சாவழிகள்தான். இவர்கள் பல நாடுகளிலும் அரசில் சமூகமாகவும் தங்களை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டுத் தமிழர்களை இணைத்து வைத்துக் கொள்வதன் மூலமாகவும் புலம்பெயர் இந்தியத் தமிழர்களின் ஆதரவினையும் பெற்று அதன் ஊடாக இந்திய அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க முடியும்.


அடுத்தது ஊடகத்தினுடைய முற்போக்கு ஜனநாயக சக்திகள், உண்மையில் ஈழத்தமிழர்களின் பிரச்சினை அவர்கள் மத்தியில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. எனவே அந்த அபிப்பிராயத்தினைக் கட்டியெழுப்புவதன் ஊடாக இந்திய அரசாங்கத்திற்கு அழுத்தத்தினைக் கொடுத்துச் செயற்படுத்த முடியும்.

இவ்வகைகளில் நோக்கும் போது இந்தியாவைக் கையாழுவதற்குரிய பிடிகள் ஈழத்தமிழர்களிடம் உண்டு அதனைச் சரியாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தியாவைக் கையாளுகின்ற செயற்பாட்டை முன்னெடுக்காமல். ஒரு படி கூட முன்னேறிச் செல்ல முடியாது. உண்மையில் தமிழர் தரப்பு இன்னும் சர்வதேச அரசியலை நோக்கி நகரவே இல்லை. சர்வதேச அரசியலை நோக்கி நகர்வதற்கு தயாராக வேண்டும். அதற்கு முதல் பிராந்தி அரசியலை நோக்கி நகரத்தயாராக வேண்டும். பிராந்திய அரசியலை நோக்கி நகர்வதற்கு வெளிநாட்டுக் கொள்கை வேண்டும். ஒரு நாடு இன்னொரு நாட்டுடன் உறவுகளை வைத்துக் கொள்வதற்கு அடிப்படையாக அமைவது வெளிநாட்டுக் கொள்கை. இது தேசிய நலனை முன்வைத்துச் செயற்படுவது. பாதுகாப்பு,பொருளாதாரம் என்பவற்றினைக் காரணமாகவும் கொண்டியங்குவது. விடுதலைக்காகப் போராடுகின்ற மக்கள் கூட்டத்திற்கும் வெளிநாட்டுக் கொள்கை தேவை. அந்த அடிப்படையில் தமிழ் மக்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கப்படவேண்டும். வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கினால் மட்டும் போதாது. அதனைக் கையாளக் கூடிய பயிற்சி பெற்ற லொபி தேவை.அந்த லொபியை உருவாக்க வேண்டும். ஏனெனில் சாதாரண அரசியலைக் கையாள்வது போல சர்வதேச அரசியலைக் கையாள முடியாது. எனவேதான் இந்தியாவைக் கையாள்வதற்கும் வெளிநாட்டுக் கொள்கை அவசியமானது என்று எண்ணப்படுகிறது.

வரலாறு சொல்லும் செய்தியை கவனிக்கும் போது விருப்பம், விருப்பம் இன்மைக்கு அப்பால் இந்தியாவைச் சரியாகக் கையாளுவதன் மூலம்தான் தமிழர் தரப்பு தனது நலன்களை இலங்கையரசிடம் இருந்து மீட்டுக்கொள்ள முடியும். எனவே, இந்தியாவைக் கையாளுவது தொடர்பில் தமிழர் தரப்புக்கள் அனைவரும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். ■

# விடியலை நோக்கி



உலகைச் சூழ்ந்திருக்கும் இருளை நீக்க ஆதவன் உதயமாகிக் கொண்டிருந்தான். சூரியக் கதிர்களின் ஒளி தார் பாதையில் பட்டுப் பல ஒளி விளக்குகளைப்போல தெறித்துக்கொண்டிருந்தது. தூரத்தே வரும் பஸ்ஸின் வேகத்தால் அந்தத் தார் பாதையின் ஒளிக் கீற்றுகள் சிதறுண்டதோடு தார் பாதை புழுதி மண்டலமாகக் காட்சி தந்தது. பஸ்ஸில் பயணிகளின் எண்ணிக்கை குறைவுதான். பல மைல் தொலைவில் இருந்து அந்தப் பேருந்து வருவதால் சிலர் ஆழ்ந்த நித்திரையில் ஐக்கியமாகி இருந்தார்கள். சிலர் சூரியக் கதிர்களின் தாற்பரியத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் துயில் கலைகிறார்கள். பஸ்ஸின் கதவருகே ஒரு பொம்மை. அல்ல ஒரு பெண் உயிரற்ற சடம் போல அமர்ந்து உலகையே மறந்து வந்து கொண்டிருக்கிறாள். “ஜெயபுரம் இறங்குறவங்க முன்னாடி வாங்க” என்ற நடத்துநரின் காரமான குரல் கணீரென்று ஒலித்தது. அது கூட அவளின் காதுகளில் விழவில்லை.

ஜன்னலோரம் அமர்ந்திருந்த அவள் பஸ்ஸின் கண்ணாடியைச் சற்றுத் திறந்து விட்டிருந்தாள். பஸ்ஸின் வேகத்தில் உள்ளே வந்த காற்று அவளின் கூந்தலைக் கலைத்துக் கொண்டிருந்தது. பிறை போன்ற நெற்றியில் சிறியதொரு பொட்டு. முழு நிலவு போன்ற முகம். அவள் அணிந்திருந்த ஆடை அவளால் அழகு பெற்றது. ஆனால் கண்கள் மட்டும் அந்திப் பொழுதில் அஸ்தமிக்கும் கதிரவனை போன்று சிவந்திருந்தது. பஸ்ஸில் பயணிக்கும் ஆண்கள் எவரும் அவளை ஒரு முறை திரும்பிப் பார்க்காமல் செல்லவில்லை. எனினும் அகலிகை சாபம் பெற்றிருந்து கல்லாய் போன போது அவளது முகம் எவ்வாறு சோகத்தோடு காணப்பட்டதோ அதுபோல இவளின் முகமும் சோகத்தால் வாடியிருந்தது.

பஸ்ஸின் ஜன்னல் கம்பிகளின் ஊடே தெரியும் காட்சிகள் அற்புதமானவை. குளத்தில் நிறைந்திருக்கும் தாமரைப் பூக்கள், வயல்களில் வெள்ளைக் கொடிகளைக் கட்டிவிட்டாற் போன்ற கொக்குக் கூட்டங்கள், சூரியனின் ஒளியைக் கண்டு ஓடி ஒளியும் பனித்துளிகள், சூரியனைக் கண்டு மகிழும் தாவரங்கள், தன் பிள்ளைகளுக்கான இரையைத் தேடி பஸ்ஸின் வேகத்தை முந்திச் செல்லும் பறவைகள், பெரிய பெரிய விளம்பரப் பலகைகள் என எத்தனை அதிசயங்கள். அத்தனை அழகையும் ரசிக்கும் முன்னம் பஸ் வேகமாக முன்னேறிச் செல்கின்றது. ஆனால் இவை அனைத்தும் அவள் கண்களில் படவில்லை. காரணம் இவள் பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தாலும் இவளுடைய நினைவுகள் வாழ்வின் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தன.

திருவனந்தபுரம் அழகியதொரு பசுமைக் கிராமம். ஆனாலும் நகர்ப் பகுதிகளின் சகல வசதிகளையும் பெற்றிருந்தது. அவள் பிறந்த இரண்டு ஆண்டுகளில் தந்தையை இழந்திருந்தாள். அன்றோடு அவள் வாழ்வின் மொத்த சந்தோசமும் பறிபோயிருந்தது. அவளின் தாய் செய்திருந்த அந்தத் தவறால் இன்று இவள் தன் வாழ்வைத் தொலைத்துவிட்டு நிற்கின்றாள். இவளின் தாய் தன் கணவன், பிள்ளைகளை விட காசு பெரிதென்று இன்னொரு வாழ்வைத் தேர்ந்தெடுத்து விட்டாள். “உலை வாயை மூட முடிந்தாலும் ஊர்வாயை மூட முடியுமா?” அவளின் தந்தை இந்த தூற்றல்கள் காதில் விழாத, எவரும் போய் திரும்ப முடியாத தொலை தூரத்தை அடைந்து விட்டார்.

பஸ்ஸின் சாரதி போட்ட பிரேக்கில் அனைத்துப் பயணிகளும் திடுக்கிட்டனர். அவளும் தன் சுயநினைவிற்கு வந்தாள். கலைந்திருந்த கூந்தலைச் சரிசெய்து கொண்டு ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தாள். பஸ்ஸின் முன் ஒரு மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகப் போய் ஒரு நொடியில் தப்பித்திருந்தது. சாரதி கடும் கோபத்தில் வசை வார்த்தைகளை வீசிக்கொண்டு தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

அநாதையாக நின்ற அவளிற்கு ஆதரவு தந்து வளர்த்தது அவளுடைய பாட்டி. “பாட்டி சொல் மிக்க மந்திரமில்லை” என்ற பழமொழியே அவள் வாழ்க்கையானது. சிறுவயது முதலே தாயின் செயலால் சமூகத்தால் தூற்றப்பட்டாள். அந்தத் தூற்றல்கள் இவள் மனதில் ஆறாத காயங்களாய் பதிந்தன. வீட்டில் தனிமையை உணர்ந்தாள், பாடசாலையில் தனிமையை உணர்ந்தாள். இவ்வாறு இவளுடைய வாழ்க்கை முழுவதும் தனிமை மட்டுமே நிறைந்திருந்தது. தனிமை என்பது எவ்வளவு கொடுமையானது என்பதை அவள் அச் சிறுவயதிலேயே உணர்ந்திருந்தாள்.

தன்னுடைய பாதையில் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து கோகிலாபுரம் என்னும் ஊரை அடைந்தது. பேருந்தில் ஏதோ சலசலப்பு சத்தம் கேட்டு அவள் திரும்பிப் பார்த்தாள். ஒரு பாட்டி நடத்துனருடன் சண்டை பிடித்து ஏதோ பேசிக் கொண்டு இறங்கிச் செல்கின்றார். இந்த ஊரில் இறங்க வேண்டிய ஏனைய பயணிகளும் அவசர அவசரமாகத் தங்கள் உடமைகளை எடுத்துக் கொண்டு இறங்கிச் செல்கின்றார்கள். மீண்டும் பேருந்து தன் பயணத்தைத் தொடங்கியது.

பாட்டியும் இறந்த பிறகு தனது அத்தை வீட்டில் கூலியில்லாப் பணியாளாக தன் வாழ்க்கையைத் தொடர்ந்தாள். கனியன், பெயருக்கு ஏற்றாற் போல் அன்பானவன். அவளின் அத்தை மகன். வீட்டில் அனைவரும் அவள் மீது வெறுப்பு மழையைப் பொழிய அவன் மட்டும் அன்பு மழையைப் பொழிந்தான். அவளின் தனிமைக்கான ஒரு ஆறுதலாக கனியன் இருந்தான். ஆனால் அந்த ஆறுதலும் நீண்ட காலம் நீடிக்கவில்லை.

கனியன் தன் வேலையின் பொருட்டு வெளிநாடு சென்றான். அதன் பின்னரான வாழ்க்கை அவளிற்கு நரகமானது. சில நாட்கள் வேதனைகளுடனும் பல நாட்கள் பசியுடனும் வாழ்ந்து கொண்டிருந்தாள். எல்லாவற்றையும் கனியனுக்காக பொறுத்துக் கொண்டாள். தன் மீது அன்பைக் காட்டிய கனியன் தனக்காக வருவான், தன்னை தன் வாழ்க்கையாக ஏற்றுக் கொள்வான் என்ற எண்ணமே அவளை வாழ வைத்துக் கொண்டிருந்தது. அவள் எதிர்பார்த்த அந்த நாள் வந்தது. கனியன் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தான். அவள் எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டாள். தனக்கு இனி எப்போதும் இன்பம்தான் என்று மகிழ்ந்தாள்.

அன்று அந்திப்பொழுதில் சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தான். இருவரும் கடற்கரை ஓரமாக நடந்து கொண்டிருந்தார்கள். கடலின் இரைச்சல் ஓயாமல் தொடர்ந்து கொண்டிருந்தது. இவர்களது வாழ்விலும்தான். இவர்களின் திருமணத்திற்குக் கனியனின் பெற்றோர் சம்மதிக்கவில்லை. காரணம் நூலைப் போலதான் சேலை தாயைப் போலதான் பிள்ளை என்ற சமூக நியதி. இவை எல்லாவற்றையும் மாற்றும் முகமாக கனியன் வீட்டை எதிர்த்து அவளை திருமணம் செய்து கொண்டான். அவர்களது ஆரம்பகால வாழ்க்கை அழகாக அமைந்திருந்தது.

எனினும் சந்தேகம் ஒரு குடும்பத்தின் புற்றுநோய் என்று சும்மாவா சொன்னார்கள். அது இவர்களின் குடும்பத்தையும் அரிக்கத் தொடங்கியது. கனியன் அவளின் ஒவ்வொரு செயல்களிலும் சந்தேகம் கொள்ளத் தொடங்கினான். கனியனின் மாற்றத்தை அறிந்த அவள் விடை தெரியாத வினாவாய் தவித்தாள். இதனை பொறுத்துக் கொள்ள முடியாத அவள் கனியனிடம் சண்டை பிடித்தாள். இது இருவருக்கும் இடையில் காரசாரமான விவாதமாக மாறியது. ஒரு கட்டத்தில் அவன் “நீயும் உன் அம்மாவைப் போல் செய்துவிட்டால்..” என்றான். அவளிற்கு தலையில் இடி விழுவது போன்று இருந்தது. தன் வாழ்வில் தான் நம்பிய ஒருவனும் இன்று ஏமாற்றிவிட்டான். தொடர்ந்து அவள் எதுவும் பேசவில்லை. மாதவி கோவலன் மீது உண்மையான அன்பு கொண்ட போதும் அவன் அவளுக்கு வழங்கியது தாசிப்பட்டம். இதுதான் எமது சமூகம். இந்தச் சமூகம் எப்பொழுதும் மாறாது. மாற்றவும் முடியாது என்பதை உணர்ந்தாள்.

ஆனால் இவன் கோவலன் அல்ல. தான் இவ்வாறு கூறியது தவறு என்பதை உணர்வதற்கு அவனிற்கு அதிக நேரம் செல்லவில்லை. வில்லில் இருந்து சென்ற அம்பும் சொன்ன சொல்லும் ஒன்றுதான் மீண்டும் திரும்பாது என்பது அவனுக்குத் தெரியும். ஆனாலும் மன்னிப்பு கோரினான். அவள் அழுதாள். புலம்பினாள். ஒரு கட்டத்தில் தந்தையைப் போல் இறந்துவிட்டால்- என சிந்தித்தாள். ஆனால் அது முட்டாள்களின் முடிவு என்பதை அந்த தருணத்திலேயே உணர்ந்தாள். ஒரு மனிதனைக் கொல்ல ஆயுதங்கள் தேவையில்லை. வார்த்தைகளே போதுமானது என்பது அவளிற்கு புரிந்தது.

அவளுக்கு அவனின் மீது கோபம் இல்லை. பரிதாபம் மட்டும் இருந்தது. இவனும் ஒரு சமூக விலங்கு. அந்தச் சமூக விலங்கைப் போலதானே இவனும் செயற்படுவான். இந்த சமூகப் புறக்கணிப்புகள் ஒன்றும் இவளுக்குப் புதியதல்லவே. ஆனால் தொடர்ந்து அவள் அவனோடு வாழ விரும்பவில்லை. அதற்காக அவள் தன் வாழ்வில் தோற்றுப்போகவும் தயாராக இல்லை.

இன்றைய வாழ்வு இருள்மயமானாலும் என்றாவது ஒருநாள் தன் வாழ்வில் ஒளி வீசும் என்ற நம்பிக்கையில் இன்னொரு விடியலைத் தேடத் துணிந்தாள். வீட்டை விட்டு வெளியேறினாள். எங்கிருந்தோ வந்து கொண்டிருந்த ஒரு பஸ்ஸில் ஏறினாள்.

இப்பொழுது அவள் எங்கோ சென்று கொண்டிருக்கின்றாள். தன் எதிர்கால வாழ்வின் ஒளிக்காக பல யுத்தங்களை புரிந்து வெல்லதற்கு. அவள் தனியாகச் செல்லவில்லை. நம்பிக்கை என்ற ஆயுதத்தோடு செல்கிறான்றாள். என்றாவது ஒருநாள் தன்னைத் தேடி விடியல் வரும் என்ற நம்பிக்கை அவளுக்கு இருக்கிறது. பஸ் இன்னும் வேகமாக அந்தத் தார்ப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. கதிரவன் தன் ஒளிகளை பரப்பிப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற திசையில் அந்தப் பேருந்து தூரமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. ■

ரா. கனகேஸ்வரி
கண்டி




# பெண் மைய விவாதங்கள் கொண்ட இரு குறும்படங்கள்

## இவற்றோரன்னவும் அவற்றோரன்னவும் - 01

பேராசிரியர் அ.ராமசாமி

பெண்ணின் மனசைச் சொல்லாடலாக விவாதிக்கும் இரண்டு குறும்படங்கள் - யூட்ரியூப் - அலைவரிசைகளில் ஒருவார இடைவெளியில் வெளியாகியிருந்தன. அடுத்தடுத்த நாளில் அவற்றைப் பார்த்தேன். முதலில் பார்த்த படம் பொட்டு. அதன் இயக்குநர் நவயுகா குகராஜா. (வெளியீடு:10.06.2021). இரண்டாவது படம் மனசு.(வெளியீடு: 18-06-2021) இயக்குநர் மு.ராஜ்கமல்.

கலையின் அடிப்படைக்கூறுகளான காலம், வெளி, இடம்பெற்றுள்ள பாத்திரங்கள் என அனைத்திலும் இலங்கைப் பின்னணியைக் கொண்டது வி.எம். குகராஜாவின் பொட்டு. பெண்மை கூடிவரும் பதின் வயதில் பெண்ணின் நெற்றிக்கு வந்துசேரும் பொட்டு முகத்தைப் பொலிவுறக் காட்டும் ஓர் அலங்காரப் பொருள் என்பது பொதுவான அறிதல். இந்த அறிதலோடு, பொட்டுவுக்கு சில அடையாளங்களையும் வேறுபாடுகளையும் உருவாக்கும் சக்தி இருப்பதாகப் பண்பாட்டு நடவடிக்கைகள் உறுதிப் படுத்தியுள்ளன. இந்த உறுதிப்பாடு சமயம் சார்ந்த பண்பாட்டு அசைவு. எல்லாச்சமயங்களும் இப்பண்பாட்டு அசைவைக் கொண்டிருக்கவில்லை. இந்து சமயம் சார்ந்தவர்கள் எனக் காட்டிக்கொள்பவர்களின் நடவடிக்கை வழி உருவாகும் பண்பாட்டு அசைவு. ஒருவிதத்தில் தமிழர்களின் சமயப் பண்பாட்டுக்கூறு என்றும் சொல்லலாம். தமிழையே புழங்கு மொழியாகக்கொண்டிருந்தாலும் கிறிஸ்தவ, பௌத்த, இசுலாமிய சமயங்கள் பொட்டின் வழியாகப் பண்பாட்டுக்கூறுகளை வலியுறுத்துவதில்லை. தமிழ் நாட்டுக் கிறிஸ்தவ சமயப்பெண்கள் பொட்டு வைப்பதைத் தவிர்ப்பதைத் தங்கள் மத அடையாள வெளிப்பாடாக நினைக்கின்றனர்.

இந்து/தமிழர் வாழ்வில் பால்குடிக்கும் சிறார் களாக இருக்கும்போது கன்னத்திலும் நெற்றியிலும் வைக்கப்படும் கறுப்புப் பொட்டுக்குக் கண்ணேறை-கண்படுதலைத் தடுக்கும் சக்தி இருப்பதாக நம்பப்படுகிறது. இருபால் குழந்தைகளுக்கும் கறுப்புமையால் நெற்றிப்பொட்டும் கன்னத்தில் ஒரு பொட்டும் வைத்துக் கண்ணேறு படுவதைத் தவிர்க்கிறார்கள் தாய்மார்கள். பால்குடி மறக்கும் நிலையில் ஆண் குழந்தைக் குப் பொட்டிடுதல் தவிர்க்கப்படுகிறது. பெண் குழந் தைகள் கறுப்புப்பொட்டைத் தவிர்த்து வண்ணப் பொட்டுகளுக்கு மாறுகிறார்கள். வண்ணமாற்றம் நடக்கும்போது பொட்டுக்குப் பால்வேறுபாடு காட்டும் திறன் உருவாகி விடுகிறது. பல்வண்ணப் பொட்டு வைக்கும் பெண்ணுக்குச் செந்தூரப்பொட்டு.. குங்குமச்சிவப்பு கட்டாயம் என்றாகும் நிலையில் இன்னொரு அடையாளத்தை உருவாக்கும் திறன் அந்தப் பொட்டுவுக்கு வந்து சேர்கிறது. குங்குமப்பொட்டு வைத்திருப்பவள் திருமணம் ஆனவள் என்பதாக உணர்த்தப்படுகிறது. அந்தச் சிவப்புப்பொட்டுக்குத் தடைவிதிக்கும் நிகழ்வாக ஒரு பெண்ணின் கணவனின் இறப்பு அமைகிறது. திருமணத்தன்று வந்து சேரும் தாலி நீக்கத்தோடு, நெற்றிப்பொட்டு நீக்கமும் விதவையின் அடையாளங்களாகின்றன. பொட்டில்லாத நெற்றியும் ஒற்றைவண்ண ஆடையும் விதவைக்கோலம் என நம்பவைக்கப்பட்டு, நல்ல காரியங்கள் -மங்கல நிகழ்வுகள் நடக்கும்போது அவளின் இருப்பை விலக்கி வைக்கின்றார்கள் உறவினர்களும் அக்கம்பக்கதாரும்.

பொட்டு அலங்காரப்பொருளா? அடையாளங்களை உருவாக்கும் சக்திகொண்ட பண்பாட்டுச் சின்னமா? என்ற சொல்லாடலை விவாதப்பொருளாக்கியிருக்கும் பொட்டு பட இயக்குநர் அதனை அலங்காரப் பொருளாகவே பாவிக்க வேண்டும் என்பதின் பக்கம் நிற்கிறார். பொட்டிழந்த தாயின் நெற்றியில் திரும்பவும் பொட்டுவைத்துப் பார்த்து விட நினைக்கும் சிறுமியின் கோணத்திலிருந்து விரியும் காட்சிகள் அழுத்தமான நடிப்பாலும் பொருத்தமான வசனங்களாலும் கச்சிதமாக்கப்பட்டுள்ளன. காட்சிகளின் பின்னணியை உருவாக்கியுள்ள கலை இயக்குநர் தேர்ந்த பொருட்களைக் கொண்டும் வண் ணங்களாலும் நிரப்பிப் பார்வையாளர்களின் ஈர்ப்பைக் கூட்டியிருக்கிறார். பின்னணி இசையும் விலகிச் செல்லாமல் இயைந்து பயணித்துள்ளது.

தாய் திலகா- மகள் துர்கா என இரண்டு பாத்திரங்களின் மனவோட்டங்களின் நகர்வாகச் சொல்லப்பட்டுள்ள காட்சிகள் நல்லதொரு சினிமாவின் அடுக்குகளாக இருக்கின்றன. தொடர்புடைய காட்சிகளாகச் சேர்க்கப்பட்டுள்ள இரண்டும் மையவிவாதத்தை வலுப்படுத்தப் பயன்பட்டுள்ளன. எதிர்வீட்டிலிருக்கும் தமிழ்க் குடும்பத்துப் பெண் பொட்டில்லாத விதவைக்கோலத்தை அமங்கலமாக நினைக்க, அதே தெருவிலிருக்கும் சிங்களப்பெண் அதனைப் பொருட்படுத்தவில்லை. தன் மகள் விரும்பும் பரதநாட்டியத்தைக் கற்பிக்கவேண்டும் அவளை நாடிவரும் அவள் 'பிறந்த வயிறுதான் நமது இன, மத வேறுபாட்டை உருவாக்கிவிட்டன' எனச் சொல்கின்றாள். பரதத்தையும் பொட்டு வைத்துக்கொள்வதையும் விரும்பும் தன் மகள் தமிழ்ப் பெண்ணாக இருந்திருப்பாளோ எனச் சொல்லும்போது வெளிப்படுத்தும் ஏற்பு மனநிலை இலங்கையின் சூழலில் முக்கியமானதொரு காட்சி. அந்தப் பேச்சு, திலகாவின் விதவைக்கோலத்திற்கு இலங்கையில் நடந்த போரே காரணம் என்பதை உணர்ந்த பேச்சாக நினைக்கத் தூண்டுகிறது.

இருபுருவங்களுக்கிடையில் ஓடும் நரம்பின் மீது வைக்கப்படும் பொட்டு உடல் நலத்தைக் கூட்டும் என்ற காரணத்தை ஆசிரியை சொல்லும்போது, துர்கா "என் அம்மா பொட்டு வைக்காமல் இருக்கிறாரே அவர் உடல் நலத்தோடு இருக்கவேண்டாமா?" என்று கேட்கிறாள். இந்தக் கேள்விக்குப் பொருத்தமான பதில் சொல்லாத ஆசிரியை, 'உங்கள் அப்பா இறந்துவிட்டதால் பொட்டு வைத்துக்கொள்வதில்லை, எனச் சடங்கு சார்ந்த பதிலையே தருகிறார். பொட்டும் நகைகளுமாக இருந்த அம்மாவின் நெற்றியில் பொட்டு வைத்துப் பார்க்க ஆசைப்படும் மகள் மொட்டைத்தலைப் பொம்மைக்கும், அம்மாவிடம் பரதம் படிக்கவரும் சிங்களச்சிறுமிக்கும் பொட்டுவைத்துப் புன்னகைக்கிறாள். கணவன் இறந்த பின்னும் பொட்டு வைத்துக்கொள்ளும் பெண்ணைக் கோயிலில் சந்தித்துத் தனது மனதிற்கான பதிலைப் பெறும் சிறுமி, 'தன் தாய்க்குப் பொட்டு வைத்துவிடும் முடிவை எடுக்கிறாள்' என்பதாகப் படம் முடிவை நோக்கிப் போகிறது. இவ்விரு காட்சிகளின் வழி விவாதம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

மகளின் அந்த முடிவை ஏற்பதா? சமூகம் ஏற்படுத்தியுள்ள சடங்குகளின்படி பொட்டில்லாத நெற்றியோடு இருப்பதா? என்ற தாயின் அதிர்ச்சிகரமான நிலைக்காட்சியே படத்தின் இறுதிச் சட்டகம் என்றாலும் விதவைக் கோலம் போன்ற பழைய மதிப்பீடுகளைக் கைவிட வேண்டிய காலகட்டத்தில் தமிழ்ப்பெண்கள் இருக்கிறார்கள் என்பதைப் படம் வார்த்தைகளால் சொல்லாமல் குறிப்பால் உணர்த்தியுள்ளது. அண்மைக்காட்சியாகப் பார்வையாளர்களுக்கு முதுகைக்காட்டி நிலைக்கண்ணாடி முன் நிற்கும் பெண்ணின் நெற்றியில் பொட்டிடும் காட்சியை முதலில் நிறுத்தித் தொடங்கும் படத்தின் ஒவ்வொரு நகர்வும் பொட்டு என்ற மையத்திலிருந்து விலகாமல் நகர்த்தப்பட்டுள்ள திரைப்பட மொழி குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. பதினாறு நிமிடங்களே ஓடும் பொட்டு ஒரு முழுநீளப்படம் தரும் அனுபவத்தைத் தருகிறது.

● ● ●

மனசு படத்தின் மூலக்கதையான திருமதி பெரேரா இலங்கைப் பின்னணியைக் கொண்டது ( சிங்கள மூலம்: இஸுரு சாமர சோமவீரா/ தமிழில் எம். ரிஷான் ஷெரிப்). குறும்படமாக்கியது தமிழ்நாட்டின் கருணா கனவுப்பட்டறை. அதனால் தமிழ்நாட்டுச்சூழலுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. பாத்திரப் பெயர்கள், நிகழ்வெளிகள் மட்டுமல்லாமல் கதையில் இடம்பெற்ற இரண்டு பாத்திரங்களின் வர்க்க அடையாளமும்கூட மாற்றப்பட்டிருக்கிறது. கீழ்நடுத்தரவர்க்கத்தின் அடுக்குக் குடியிருப்புகள் ஒன்றில் இருக்கும் கணவன் - மனைவி என்ற பாத்திர எதிர் நிலையை மையப்படுத்திக் கொண்டு பெண் மனசின் எண்ண ஓட்டங்களைச் சொல்ல நினைத்ததால், திருமதி பெரேரா சிறுகதையில் விவரிக்கப்பட்ட இடப்பிண்ணனி மு.அமல்ராஜின் படத்தில் காணாமல் போய்விட்டது.

எழுத்து வடிவ வெளிப்பாடான சிறுகதையை அப்படியே படமாக்க வேண்டியதில்லை. தன்னைப் புரிந்து கொள்ளாத -தன் விருப்பத்தையே மனைவியின் விருப்பமாக நினைக்கும் ஒரு ஆணோடு நான் ஏன் வாழவேண்டும் என்ற எண்ணம் உருவாவதை யார் தடுக்கமுடியும்? அப்படியொரு எண்ணம் உருவான பின் கணவனுக்கு வரும் மரணத்தைக் கூடப் பெரிதாக அவள் எடுத்துக் கொள்ள மாட்டாள் என்பதைக் கதை விவாதப்பொருளாக்கியிருக்கிறது. இந்த விவாதத்தை மட்டுமே 'மனசு' படத்தின் இயக்குநர் முதன்மையாக நினைத்ததால் நிகழ்வுகள் விரிவாகாமல் சுருங்கிப் போய்விட்டன.

ஆண்மைய சமூகம், பெண்களின் இருப்பை உடலாக மட்டுமே ஏற்று நகர்கிறத் அவளுக்கு மனமென ஒன்று இருப்பதைக் கவனத்தில் கொள்வதே இல்லை என்பது பெண்நிலைவாதக் குற்றச்சாட்டு. மனிதத்தன்னிலையை உருவாக்குவதில் உடலுக்கு எவ்வளவு பங்கிருக்கிறதோ, அதேயளவு பங்கு மனதுக்கும் இருக்கிறது. உடலின் இயக்கம் பருண்மையாக - நேர்க்காட்சியாக அசையும் அதற்கு எல்லைகளை வரையறை செய்து தடைகள் போடலாம். மீறினால் தண்டனை உண்டு என்று அச்சமூட்டிக் கட்டுப்படுத்தலாம். அதனையும் மீறும் நிலையில் உடலை இல்லாமல் ஆக்கலாம். இதற்கெதிரானது மனசு. அதனைக்கட்டுப்படுத்த முடியாது. தண்டிக்கமுடியாது. ஏனெனில் மனசு அரூபமானது. எங்கே இருக்கிறது என்று சொல்லமுடியாது. எப்போதும் அலையும் விருப்பம் கொண்டது. விருப்பம் காரணமாக ரகசியங்களைப் பேணுவதோடு அலைதலிலும் விடுதலையிலும் தன்னை இணைத்துக் கொள்வது. இந்தப் பொருண்மையைப் பெண்நிலைவாதக் கலையிலக்கியங்கள் தொடர்ச்சியாக முக்கியமான சொல்லாடல்களாக ஆக்கிக்கொண்டே இருக்கின்றன.




உடலை ஏற்கும் நிலையில் அவ்வுடலுக்கு இயங்குவெளியாக வீட்டை மட்டுமே வழங்கி வந்திருக்கிறது. வீடென்னும் இயங்குவெளியைத் தளமாகக்கொண்டு நகரும் குடும்ப அமைப்பில் பெண்ணுடலுக்கு இரண்டு பணிகள் உண்டு. முதல் பணி வம்சவிருத்தி அதனை நிறைவேற்றும்பொருட்டுப் பெண் உடல் அழகைப் பேணுவது அவசியம். இன்னொன்று குடும்பத்தின் அன்றாடத் தேவையான உணவு தயாரித்தல். இவ்விரண்டையும் வேறுவழியின்றி ஏற்கும் பெண்ணுக்குள் ரகசியங்களும் ஆசைகளும் ரசனைகளும் நினைவுகளின் அடுக்குகளும் கொண்ட மனசு இருக்கிறது என்பதை ஆண்மைய சமூகம் ஏற்பதில்லை. இந்த முன்வைப்பை விவாதப்பொருளாக்கிய வகையில் மனசு முக்கியமான படமாகிறது. ஆனால் திரைமொழி, பொருத்தமான நடிப்பு, காட்சிப் பின்னணிகள், இசைக்கோர்வைகள் என ஒவ்வொன்றிலும் போதாமையைக் கொண்டிருக்கிறது படம். சமகாலத்தை விவாதிக்கும் ஒரு கலைப்படைப்பு, அக்கலையின் வெளிப்பாட்டுக்கூறுகளின் கலவையைச் சரியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்யும்போதுதான் அது சென்றுசேர வேண்டிய இலக்குகளை அடையும். ஏற்படுத்த நினைத்த விளைவுகளை ஏற்படுத்தும். ■



# எழுத்தின் இயங்கியல்

## உடலைப் பயன்படுத்தல்—02

ந.மயூரரூபன்

அதிகாரத்தின் அடிப்படை இருப்பிடம் எது வென்று நாம் அறிந்து வைத்திருக்கிறோம். ஆசை, ஆசையினுடைய மிக முக்கியமான அடைதல் அதிகாரத்தினிடமே. இங்கு என்னுடைய ஆசை அல்லது அவனுடைய ஆசை என்று நாம் எதனையும் வகைப் படுத்த வேண்டியதில்லை. அது எந்த ஆசையாக இருந்தாலும் வரலாற்றின் ஆசையாகவே முகங்காட்ட வல்லது. ஆதிமனிதனின் வாழ்க்கை இரகசியமும் இன்றைய மனிதனின் வாழ்க்கை இரகசியமும் முற்று முழுதாக ஆசையினால் நிரப்பப்பட்டதாகவே இருக் கிறது. இந்த அதிகாரமும் ஆசையும் எதில் திருப்திப் படுகிறது? உடலை அடிமைப்படுத்துவதில், உடல்களை அடிமைப்படுத்துவதில். வரலாற்றின் ஒவ்வொரு இடுக்குகளிலும் ஒவ்வொரு சொற்களிலும் அடி மைப்படுத்தப்பட்ட உடல்களின் நிழல்களே படிந்தி ருக்கின்றன.

ஒவ்வொரு இனக் குழுமமும் மனித உடல்களை அடிமைப்படுத்துவதில் பெரு விருப்புக் கொண்டிருக் கின்றன. இன்னொரு வகையில் ஒவ்வொரு தனி மனித னும் இச்சையில் உடல்களை அடிமைப்படுத்தும் இயல்பு படிந்திருக்கிறது. காலணித்துவ எச்சங்கள் அடிமைப்படுத்தலின் ஞாபகத்தை எமக்குள்ளே வைத் திருக்கின்றன. ஒரு சமூகம், ஒரு இனம் இன்னொரு சமூக உடல்களை எவ்வாறு அடிமைப்படுத்தி வைத்திருக் கின்றது என்பதற்கு ஆபிரிக்க மக்களின் பாடுகள் பொருத்தமான சாட்சி. இன்னொரு வகையில் எமது சமூக வெளியில் குறிப்பாக இந்திய இலங்கை சமூகங் களில் ஒரு குறித்த காலத்தில் மிகத் தீவிரமாக இருந்த சாதி அடிப்படையிலான அடக்கு முறைகளும் மனி தர்கள் எப்படி அடிமைகளாக நடத்தப்பட்டார்கள் என்பதையும் எமது வரலாறு சொல்கிறது. அந்த அடிமைச் சிந்தனையின் நீட்சியை இப்போதும் எமது சமூகம் தனது எண்ணவெளிகளில் தக்க வைத்திருப்ப தையும் உணர முடிகிறது.

உடலை அடிமைப்படுத்துகின்ற மனோபாவம் என்பது அடிப்படையில் அதிகார எழுச்சியினால் பீடிக்கப்பட்ட நோய். ஆண்-பெண் என்ற வேறு படுத்தலின் அடிப்படையில் அது சமூக நடைமுறைக ளில் ஊதிப் பெருக்கிய நெருப்பில் இந்த அடிமைப்படுத்தலை நாம் இனங்கண்டு கொள்கிறோம். உடைமைச் சமூகத்தின் தோற்றத்தில் பெண் உடை மையாக்கப்படுகிறாள். பெண் உடல் அடிமைப் படுத்தப்படுகிறது. வெறும் போகத்திற்கும் இனப் பெருக்கத்திற்குமான உடலாக பெண் உடல் பார்க் கப்படுகிறது. ஆண்மையச் சிந்தனையிலிருந்து பெண் பார்க்கப்படுகின்ற, சிந்திக்கப்படுகின்ற ஒவ்வொரு கூறுகளையும் நாம் கவனத்திற் கொண்டால் பெண் ணுடலை அடிமைப்படுத்துகின்ற வடிவத்தினை நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

1. அனைத்து சமூகங்களிலும் பெண்ணுக்கான உடை.
2. அனைத்து சமூகங்களிலும் பெண் உடலில் வெளிப்படுத்தப்படும் அழகுணர்ச்சி.
3. ஒரு பெண் உடல் திரைப்படங்களில் காட்சிப்படுத்தப்படும் முறை.
4. பாலியல் தொழில், போர்னோ கிராபிகள் என்பவற்றின் பெண்ணுடலை அடிமைப்படுத்தல், சித்திரவதைப்படுத்தல்.
5. குறிப்பாக தமிழ், முஸ்லிம் சமூகங்களில் பெண்கள் சிறு பிள்ளைகளிலிருந்து வளர்ந்து இளமை, திருமணம், முதுமை, சாவு வரையிலான வாழ்க்கையில் அப்பெண் உடல்களின் இருப்பும் அவைகளில் வெளிப்படுத்தல் முறையும்.

இப்படிப் பல கூறுகளை எடுத்துக் காட்ட முடியும். சிந்தனைக் கூறின் இயல்பில் அடிமைப்படுத்தும் மனோபாவமும் அடிமைப்படும் இயல்பும் வெளிப் படுத்துவதோடு சமூகத்தின் அடுத்த தலைமுறைக்கு சமூக இயல்பாக அதுவே கடத்தப்படுகிறது.

பொதுவாக ஆண்டான்-அடிமை சமூக அமைப்புத் தொடர்ச்சியிலிருந்தே அனைத்து சமூகக் குழுக்களும் தம்மை வளர்த்துக்கொண்டன. அந்த சிந்தனையின் நீட்சி தொடர்ந்தும் இருப்பதில் வியப்பில்லை.

உடல்களை அடிமைப்படுத்துதல் அல்லது உடல்கள் அடிமைப்படல் என்பது இரண்டு வடிவங்களில் பார்க்கப்படக் கூடியது.

01. மனிதன் மனித உடலை அடிமைப்படுத்தல்.
02. சமூக முறைமை உடலை அடிமைப்படுத்தல்.

இங்கு மனிதன் ஒரு சமூகக் குழு ஒரு மனிதனை ஒரு சமூகத்தை அடிமைப்படுத்துகின்ற வடிவத்தினையே நாம் மேலே பார்த்தோம்.

விலங்குகளை அடிமைப்படுத்திய மனிதன், தன்னைப் போன்ற மனிதர்களை அடிமைப்படுத்த முயன்றான். இங்கு மிக முக்கிய விடயம் ஒன்றுண்டு. தன்னைவிட அல்லது தனது சமூகத்தை விட வேறுபட்டவர்களை - தமது சமூகத்திலிருந்து இவர்கள் தாழ்ந்தவர்கள் என்கிற வேறுபடுத்தல் சிந்தனையே இந்த அடிமைப்படுத்தலுக்கு அடிப்படையாக அமைகிறது. அந்த வேறுபாடு,

1. உடல் வேறுபாடு

அது நிறமாக, தோற்றமாக (குள்ளமாக, உயரமாக) அமையலாம்.

2. மொழி, மதம், இனம் போன்றவை
3. புவியியல் அமைப்பில் வேறுபட்டவர்கள்
4. பொருளாதாரம் அல்லது சுரண்டல்

“விலங்குகளை அடிமைப்படுத்திய மனிதன், தன்னைப் போன்ற மனிதர்களை அடிமைப்படுத்த முயன்றான். இங்கு மிக முக்கிய விடயம் ஒன்றுண்டு. தன்னைவிட அல்லது தனது சமூகத்தை விட வேறுபட்டவர்களை - தமது சமூகத்திலிருந்து இவர்கள் தாழ்ந்தவர்கள் என்கிற வேறுபடுத்தல் சிந்தனையே இந்த அடிமைப்படுத்தலுக்கு அடிப்படையாக அமைகிறது.”

5. நாகரிகத் தன்மை - பூர்வக் குடிகளை அடிமைப் படுத்தல்.

இங்கு வரலாற்றில் கறுப்பினத்தவர்கள் அடிமைப் பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட, அடிமைகளாக விற் கப்பட்ட, சித்திரவதை செய்யப்பட்ட வரலாற்றை நாம் அதிகம் வாசித்திருக்கிறோம். அதே போல் மொழியால், மதத்தால், இனத்தால் வேறுபட்டவர்களை அடி மைப்படுத்துகின்ற அடிமைப்படுத்தப்பட்ட வரலாற்றை இன்று எழுதுகிறோம். யூதர்கள் அடிமைப்படுத்தப் பட்டு கொல்லப்பட்ட வரலாறு, முஸ்லிம்கள் கொல்லப்பட்ட வரலாறு, ஈழத் தமிழர்கள் கொல் லப்பட்ட வரலாறு என்பவற்றுக்குப் பின்னால் இந்த அடிமைப்படுத்தலில் நோய்க்கூறுதான் ஒளிந் திருக்கிறது.

ஆரம்ப காலத்திலிருந்து - வாஸ்கொடகாமா காலத்திலிருந்து நாடுகாண் பயணங்கள் ஆம்பித்த திலிருந்து தங்கத்தைத் தேடி அலைந்ததிலிருந்து, அமெரிக்கா என்ற நாடு உருவானது வரையான வரலாற்றுக்குள் ஒரு பாகமாக செவ்விந்தியர்களின் வாழ்க்கை சுரண்டப்பட்ட வரலாறும் இணைந் திருப்பதை நாம் உணர்ந்தேயிருக்கிறோம்.

மேலும், எமது போராட்ட வடிவங்களுக்குள் கோயில் ஒழிவுப் போராட்டம், சமபந்தி, தேநீர்க் கடைப் போராட்டம் என சமூகப் போராட்டங்கள் அவற்றின் வரலாற்றுக் கதைகள் சொல்லுகின்ற சேதியும் அதுதான். உடலை அடிமைப்படுத்துகின்ற நிலையும் அதனை எதிர்த்துப் போராடுகின்ற நிலைமையும் காலந்தோறும் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. ஆயினும் சாதியின் பெயரால் துகில்கள் இன்றும் உரியப்படுகின்றன.

அடுத்து சமூக முறைமைகள் உடலை /உடல்களை அடிமைப்படுத்துகின்ற நிகழ்வு என்பது மிக மிக இயல்பாக சமூகங்களில் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. அந்த இயக்கத்தினை, பொருளாதார அடிமைமுறை, இனத்துவ அடிமைமுறை, சாதிய அடிமைமுறை என நாம் வகைப்படுத்தலாம், புரிந்து கொள்ளலாம்.

ஒரு முதலாளி / எஜமானன் தொழிலாளியின் / அடி மையின் இயல்பான வாழ்க்கையை அவனது இன்பத் தைத் திருடுகிறான். ஒரு சாதாரண மனிதனை அவனது இன்பத்திலிருந்து தூர விலக்கி வைக்கிறான்.

அதேபோல் ஒரு முதலாளி / எஜமானன் தனது அதிகாரப் பண்புகளுக்கு அடிமையாகக் காணப்படுகின் றான். அதிகாரத்தால் அவனது உடல் அடிமைப்படுத் தப்பட்டுள்ளது. இதுதான் முறைமை (System) எவ்வாறு அடிமைப்படுத்துகிறது என்பது. இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால் சிறைக்கைதிகள் சிறைக் காவலர்க ளுக்கு அடிமை, ஆனால் சிறைக் காவலர்கள் அவர்களது மேலதிகாரிக்கு அல்லது அவர்களது பணிக்கு அடிமை யாக இருப்பார்கள். இது ஒவ்வொரு உடலும் எவ்வாறு அடிமைப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள உதவும்.

குறிப்பாக இன்றைய உலகில் ஜனநாயகப் பண்புகள் அதிகம் நிறைந்த சமூகங்களில் அடிமைமுறை ஒழிக்கப் படவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வகை செய் கிறது. ஒரு சமூக இயந்திரமாக, அரச இயந்திரமாக அது இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

இந்த முறைமையில் இரண்டு செயல்நிலைகள் முக்கியமானவை.

01. ஒழுங்குமுறைப்படுத்தல்
02. தண்டனை

இவை இரண்டும் உடல்களை சமூகத்திற்கேற்ற வகை யில், ஐக்கிய நாட்டிற்கேற்ற வகையில், குடும்பத்திற் கேற்ற வகையில் அடிமைப்படுத்த துணை செய்கிறது.

ஒழுங்குமுறைப்படுத்தல் என்பது உளவியல் ரீதியாக கீழ்படிய வைக்கும் முறையாகக் கருதப்படும். குறிப்பாக கைதிகள், பொலிஸ், இராணுவம், பாடசாலை, அரச அலுவலகர்கள் போன்றவற்றில் இந்த ஒழுங்கு முறையினை நாம் கடைப்பிடிக்கின்றோம். உதாரணமாக முதலாவது மணி ஒலித்தும் நித்திரையில் இருந்து எழுதல். இரண்டா வது மணிக்கு உடையணிந்து தயாராதல். மூன்றாவது மணிக்கு உடற்பயிற்சி. நான்காவது மணிக்கு காலை உணவு என்கிற ஒழுங்கு முறை என்பது உடல்களைக் கட்டுப்ப டுத்தி தேவைக்கேற்ற உடலாக அடிமைப்படுத்துகிறது.

தண்டனை முறைகளில், சிறைத் தண்டனை, பொது வெளியில் தண்டனை என்பன ஏனைய உடல்களைப் அச்சப்படுத்தி கட்டுப்படுத்துகின்ற முறைமை (System) ஆகக் காணப்படுகின்றது. ஒரு உடலுக்கு மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்ப ஒரே பயிற்சிச் செயலை மிக அடிப்படையிலிருந்து நுண்ணிய நிலையிலிருந்து வழங்குவதனூடாக அச் செயல் மீது விருப்பத்தை உண்டாக்கி அச்செயலைச் செய்யத்தூண்டி உடலை அடிமையாக்குகின்ற நிலையாகும்.

இன்றைய சமூக - அரசியல் - குழு முறைமை இதைத் தான் செய்கிறது. உடல்கள் கட்டுப்படுகின்றன. கட்டுப் பட்ட உடல்கள் பேசுகின்ற பிரதிகள் எதைப் பேசுகின் றன என்பது சுவாரசியமானது தான்.

■

# முதல் தொற்றாளர்


கொரோனாவின் தாக்கம் ஜப்பானையும் விட்டு வைக்காத நிலையில் இந்தவருடம் நடைபெற இருக்கின்ற ஒலிம்பிக் போட்டிகளை நடத்தக்கூடாது என்பதற்கான எதிர்ப்பும் வலுத்து வருகின்றது. ஆனாலும் திட்டமிட்டபடி அடுத்த மாதம் 23 ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிகளை ஆரம்பிப்பதில் ஜப்பான் அரசாங்கமும் ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவினரும் உறுதியாக இருக்கின்றார்கள். இதனால் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக வெளிநாட்டு வீரர்களும் ஜப்பானுக்கு வரத் தொடங்கி உள்ளார்கள். அந்தவகையில் முதலாவது வெளிநாட்டு அணியாக அவுஸ்ரேலிய மகளிர் Soft ball அணி இந்த மாதம் ஓராம் திகதியே ஜப்பானுக்கு வருகை தந்து பயிற்சிகளை ஆரம்பித்தும் உள்ளது.



இந்தநிலையில் உகண்டாவில் இருந்து குத்துச் சண்டைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு அதிகாரிகள் அடங்கலாக வந்த 9 பேர் கொண்ட குழுவில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகி உள்ளது. இதில் என்ன துயரம் என்றால் இவர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசியை முழுமையாக போட்டுக் கொண்டவர்கள் என்று கூறப்படுகின்றது. அத்தோடு உகண்டாவில் இருந்து அவர்கள் புறப்படும் பொழுது மேற்கொண்ட பரிசோதனையில் அதில் ஒருவருக்கும் கொரோனா இல்லை என்பதே பரிசோதனை முடிவாக இருந்தது. ஆனால் ஜப்பானின் நரிட்டா விமான நிலையத்தில் அவர்கள் வந்திறங்கியதும் மேற்கொண்ட பரிசோதனையில் தான் ஒருவருக்கு கொரோனா உறுதியாகி இருந்தது. இதன்மூலம் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வந்த வெளிநாட்டு வீரர்களில் முதலாவது கொரோனாத் தொற்றாளராக அவர் இனங்காணப்பட்டுள்ளார்.

இதையடுத்து, சம்பந்தப்பட்டவரை ஜப்பானில் கொரோனா தொற்றாளர்களை தனிமைப்படுத்தும் நிலையமொன்றுக்கு உடனடியாக அனுப்பி வைத்துள்ளார்கள். ஏனையவர்கள் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். அதேவேளை இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் வெளிநாட்டுப் பார்வையாளர்களை அனுமதிப்பதில்லை என்று ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டாலும் 50 சதவீதமான உள்ளூர் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

# வெற்றியுடன் வெளியேறுவாரா?




சி.விமலன்

தற்போது நடைபெற்று வரும் யூரோ கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பங்குபற்றி வரும் ஜேர்மனி அணியின் பயிற்சியாளராக விளங்குபவர் முன்னாள் வீரரான ஜோகிம் லோ. 2006 ஆம் ஆண்டு ஜேர்மனி அணியின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்ற அவரின் காலத்தில் ஜேர்மனி 2008 யூரோ தொடரில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றதோடு 2010 உலகக் கிண்ணத்தில் மூன்றாமிடத்தையும் 2014 உலகக் கிண்ணத்தில் சம்பியன் பட்டத்தையும் வென்று சாதனை படைத்திருந்தது. ஆனாலும் துரதிர்ஸ்டவசமாக 2018 உலகக் கிண்ணத்தில் முதற்சுற்றுப் போட்டிகளுடனேயே வெளியேறி ரசிகர்களுக்கு அதிர்ச்சி அளித்தது. 1938 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகக் கிண்ணத்தில் ஜேர்மனி இவ்வாறு வெளியேறியமை இதுவே முதன்முறை என்பதனால் ஜோகிம் லோவை பயிற்சியாளர் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுத்திருந்தன. ஆனாலும் கடந்த ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக ஜேர்மனி உதைபந்தாட்ட அணியை ஒரு கட்டுக்கோப்புடன் வளர்ச்சி அடையச் செய்ததனால் அவர் மீது நம்பிக்கை வைத்து மீண்டும் ஜேர்மனி உதைபந்தாட்டச் சம்மேளனம் அவருக்கு காலநீடிப்பு வழங்கி இருந்தது.

இதையடுத்து 2019 ஆம் ஆண்டு ஜேர்மனி அணியின் கட்டமைப்பில் மாற்றங்களை ஜோகிம் லோ மேற்கொண்டார். தோமஸ் முல்லர், மற்ஹமல்ஸ் போன்ற வீரர்களை அணியில் இருந்து அதிரடியாக நீக்கினார். ஆனாலும் 2022 உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளில் ஜேர்மனி தனது குழுவில் மூன்றாமிடத்திலேயே தற்போது உள்ளது. அதிலும் வட.மசிடோனியா உடனான போட்டியில் சொந்த மண்ணில் 2 : 1 என்ற கோல்கள் அடிப்படையில் அடைந்த தோல்வி மீண்டும் அவருக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்த யூரோ கிண்ணத்துடன் ஜோகிம் லோவின் பதவிக்காலம் முடிவடைய உள்ளதோடு புதிய பயிற்சியாளராக, அணியின் உதவிப் பயிற்சியாளரும் பெயோர்ண் முனிச் அணியின் முன்னாள் பயிற்சியாளருமான ஹன்ஸி பிளிக் ஆகஸ்ற் மாதம் பொறுப்பேற்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் முன்னர் தான் அணியில் இருந்து நீக்கிய தோமஸ் முல்லர், மற்ஹமல்ஸ் ஆகிய வீரர்களை யூரோ கிண்ணப் போட்டிகளுக்காக இரண்டரை வருடங்களின் பின்னர் ஜோகிம் லோ தெரிவு செய்துள்ளார். அவரது இந்த முடிவும் போட்டிகளின்போது கடைப்பிடித்து வரும் அணுகுமுறைகளும் தற்போது விமர்சனத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே எத்தனை புயல்களைச் சந்தித்தாய் என்பது முக்கியமல்ல கப்பலைக் கரை சேர்த்தாயா என்பதற்கிணங்க இந்த விமர்சனங்களையும் மீறி ஜேர்மனிக்கு கிண்ணத்தை வென்று கொடுத்து வெற்றி கரமாக ஜோகிம் லோ வெளியேறுவாரா என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்து விடும்.

# சம்மதம் தெரிவிப்பு




கொரோனா காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட இந்த வருட ஐ.பி.எல் தொடரின் எஞ்சிய போட்டி களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்துவதற்கான முயற்சிகளை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மேற்கொண்டு வருகின்றது. ஆனாலும் அந்தக் காலப் பகுதியில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளும் கரீபியன் பிறீமியர் லீக் போட்டிகளும் இங்கிலாந்தில் முதன்முறையாக 100 பந்துகள் போட்டித் தொடரும் நடைபெற உள்ளதனால் வெளிநாட்டு வீரர்கள் ஐ.பி.எல் தொடரில் கலந்து கொள்வதில் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. இதனால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் போட்டி அட்டவணையை சற்று முன்னதாக மாற்றி அமைக்குமாறு கோரிக்கை விடுத்த போதிலும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டது.

இந்தநிலையில் சில தினங்களுக்கு முன்னதாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையுடன் தொடர்பு கொண்டு கரீபியன் பிறீமியர் லீக் தொடரின் திகதிகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா? என்று கோரிக்கை விடுத்தது. தற்போது அதற்குச் சாதகமான பதிலை அவர்கள் தெரிவித்துள்ளார்கள். கரீபியன் பிறீமியர் லீக் தொடர் முன்னதாக ஆகஸ்ற் 28 - செப்ரெம்பர் 19 ஆம் திகதி வரை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் ஐ.பி.எல் போட்டிகள் செப்ரெம்பர் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதால் வீரர்களின் தனிமைப்படுத்தலை கருத்திற் கொண்டு கரீபியன் பிறீமியர் லீக் தொடரை ஆகஸ்ற் 25 - செப்ரெம்பர் 15 ஆம் திகதி வரை நடத்தலாமா என்று யோசித்து வருகின்றார்கள்.

இதில் என்ன சிக்கல் என்றால் மேற்கிந்தியத் தீவுகள் -பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் ஓகஸ்ட் 24 ஆம் திகதியே முடிவடைவதனால் அடுத்த 24 மணி நேரத்தில் கரீபியன் பிறீமியர் லீக் தொடரை ஆரம்பிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே ஆகஸ்ற் 26 ஆம் திகதி கரீபியன் பிறீமியர் லீக் தொடரை ஆரம்பிப்பதற்கான வாய்ப்பும் உள்ளதாகக் கருதப்படுகின்றது. அந்தவகையில் மாற்றியமைக்கப்பட்ட புதிய போட்டி அட்டவணை எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படலாம் எனக் கருதப்படுகின்றது.




இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள நீடா குழுமத்தினரால் 26.06.2021 அன்று வெளியிடப்பட்டது,